# அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

## 11 - ஆம் வகுப்பு

# வணிகவியல்

Padasalai

## மாணவர் கையேடு

( 2020 - 2021 )

B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் வணிகவியல்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.
கைபேசி எண் : 9629647613



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அலகு – 1. தொழிலின் அடிப்படைக் கூறுகள்

## அத்தியாயம் 1. இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

## குறுவிடை வினாக்கள்

1. பண்டமாற்று முறை என்றால் என்ன? ( ஜூன் 2019 , மார்ச் 2020)
   - ❖ பணப் பரிமாற்றம் இடம் பெறாமல், ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் வணிக முறையே பண்டமாற்று வணிக முறையாகும்.

     (அல்லது)
   - ❖ ஒரு பொருள், மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

2. நாளங்காடி என்றால் என்ன? ( மார்ச் 2019 ), ( செப் 2020 )
   - ❖ **பாண்டியர் ஆட்சிக் காலத்தில்** பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது
   - ❖ அப் பொருள்களின் விற்பனை, பகலில் நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது.

3. அல்லங்காடி என்றால் என்ன?
   - ❖ **பாண்டியர் ஆட்சிக் காலத்தில்** பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது
   - ❖ அப் பொருள்களின் விற்பனை, இரவில் நடந்ததை அல்லங்காடி என அழைக்கப்பட்டது..

## சிறுவிடை வினாக்கள்

1. வணிகம் பொருள் தருக.
   - ❖ பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

2. மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் - விளக்குக.
   - ❖ பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில், மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களாகும்.
   - ❖ இவை அங்காடிகளையும் , பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.
   - ❖ வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக நடை பெறும் இடங்களாக இவை இருந்தன.

3. பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்ககாலத்தின் பங்கு என்ன?
   - ❖ மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இடையே, அடர்ந்தகாட்டுப் பகுதியில் சாலை அமைத்தும்,
   - ❖ பெருவழி எனப்படும் தரைவழி நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டும்,



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

❖ துறைமுகங்கள், கலங்கரைவிளக்கம், பண்டக காப்பகங்கள் என அயல்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அரசாங்கத்தால் உருவாக்கித் தரப்பட்டிருந்தது.

4. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?

1. கொற்கை 2. சாலியூர் 3. காயல்பட்டினம் 4. மருங்காவூர்பட்டினம் 5. குமரி

5. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?

❖ சாணக்கியரின் அர்த்தசாத்திரம் வழியாக, 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

❖ வியாபாரம் ஓரிடத்தில் மையப்படுத்தப்பட்டும்,

❖ உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யாவும் , குறிப்பிடும் ஓரிடத்தில் விற்பனைக்குக் கொண்டு வரச் செய்து, நகரத்தில் வரி செலுத்திய பின் விற்க அனுமதிக்கப் பட்டும்

❖ சில வணிகர்களை மட்டும், கட்டுப்பாட்டு அலுவலரால் நிர்ணயிக்கப் பட்ட விலையில் விற்பனை செய்ய வைத்தும்,

❖ உள்ளூர் பொருள்களுக்கு 5 சதவீதமும், வெளிநாட்டுப் பொருள்களுக்கு 10 சதவீதமும் இலாப வரம்பு நிர்ணயிக்கப்பட்டும்,

❖ அரசு மேலாண்மை மற்றும் மக்கள் நலன் இரண்டையும், சமநிலையில் பராமரித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## பெருவிடை வினாக்கள்

1. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக. ( மார்ச் 2019 )

1. ஆள்சார் தடை

❖ உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது.

❖ இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும்.

❖ வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

2. இடத் தடை

❖ உற்பத்தியாளைரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது.
❖ இத்தடை, போக்குவரத்தின் மூலம் நீக்கப் படுகின்றன.

3. காலத் தடை

❖ ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும்.

❖ தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து, நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்கவேண்டும்.

❖ பண்டகக்காப்பாகம் காலத்தடையை நீக்குகிறது

4. இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத் தடை

❖ பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- பொருட்கள் பூச்சிகள், எலிகள், ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

5. <u>நட்ட இடர்பாட்டுத் தடை</u>

- ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது, ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு.
- இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன

6. <u>அறிவுசார் தடை</u>

- சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும்.
- இது அறிவுசார் தடை எனப்படும்.
- நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

7. <u>பண்டப் பரிமாற்றத் தடை</u>

- பணம், பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது.
- பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

8. <u>நிதித் தடை</u>

- உற்பத்தியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை.
- நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித் தடை எனப்படுகின்றது.
- இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

---

**2. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை? ( செப் 2020 )**

1. ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.
2. இருவருக்கும் அப்பொருட்கள், உரிமை மாற்றுத் தேவையாக இருக்கவேண்டும்.
3. பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.

---

**3. வட இந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி.**

1. பால்பன் முதல் முதலாக சுல்தானாக இருந்த போது, அடர்ந்த வனப்பகுதிகளில் பாதையை உருவாக்கி வியாபாரம் செய்யவழி வகுத்தார்.
2. அலாவுதின் கில்ஜி பொருள்களின் விலைகளைக் குறைத்து வியாபார வளர்ச்சியை பெருக்கவழி வகுத்தார்.
3. வெள்ளி மற்றும் தாமிரம் அடிப்படையில் நாணயமுறை நிறுவப்பட்டு, சுல்தான் காலகட்டத்துக்குள் வர்த்தகம் செழித்தோங்கியது.
4. காபூல், அரேபியா, ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் சீனாவில் இருந்து குதிரைகள், உலர் பழங்கள், விலையுயர்ந்த கற்கள், கண்ணாடிப் பொருட்கள், உயர்தர ஜவுளி, கச்சாப்பட்டு, பவளப்பாறைகள், வாசனை எண்ணெய், போன்றவைகளை இந்தியா இறக்குமதி செய்தது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. இந்திய தயாரிப்புகள் கிழக்கு ஆப்பிரிக்கா, மலாயா, சீனா, ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் பெர்சியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

## 4. பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.

i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

ii) தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி ஆகிய துறைமுகங்கள் ஒட்டிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இடங்களாக இருந்தன.

iii) வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தன. முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும் ஈடுபட்டிருந்தனர்.

iv) குறிப்பாக சிறியதான படகு, திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம் முதலியன உள்நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவுகலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்.

## 5. பண்டைய தமிழ்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்களிப்பைப் பற்றி விளக்குக. ( மார்ச் 2020 )

i) ரோமாபுரி மற்றும் கிரேக்க வர்த்தகர்கள் பழங்காலத் தமிழ்நாட்டுக்கு வந்து பண்டைய சோழ, சேர, பாண்டிய மன்னர்களைச் சந்தித்து வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

ii) சீன சோங் வம்சத்தினர் சோழர்களுடன் வலுவான வர்த்தக உறவு கொண்டிருந்தனர்.

iii) இந்தோனேசியா மற்றும் மலேசியாவைஆண்டு கொண்டிருந்த ஸ்ரீ விஜய நகர சாம்ராஜ்ஜியத்தை சோழர்கள் கைப்பற்றி, சீனாவுடன் கடலோர வணிகத்தைத் தொடர்ந்தனர்.

iv) இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சீனத்தின் யுவான்சுவாங் என்பவர் கண்டறிந்து தனது தேசத்திற்கு எடுத்துரைத்துள்ளார்.

v) 16 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ததன் காரணமாக இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் பரவலாக விரிவடைந்தது.

vi) வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து நன்னம்பிக்கைமுனை வழியாக கி.பி. 1496 இல் இந்தியாவுக்கு வரும் போது அனைத்துப் புதிய கடல் வழிகளையும் கண்டு பிடித்ததால் நாகரிக உலகத்தில் பெரும் தாக்கம் ஏற்படுட்டது.

vii) மேலும் போர்த்துகீசியர்களின் இந்திய வருகை பிற ஐரோப்பிய சமூகங்களின் வருகைக்கு வழி வகுத்தது.

viii) இவ்வாறாக இந்தியாவின் கடலோர வர்த்தகம் ஐரோப்பியர்கள் மீது ஏகபோக உரிமை கொண்டதாக மாறியது.

# அத்தியாயம் 2. தொழிலின் நோக்கங்கள்

## குறுவிடை வினாக்கள்

1. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
   - இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

2. தொழில் என்றால் என்ன?
   - இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களை உற்பத்தி செய்வதும், விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொழிலாகும்.

3. சிறப்புத் தொழில் என்றால் என்ன?
   - அந்தந்த துறையால் , அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.
   - ( எ.கா ) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

4. வேலை என்றால் என்ன?
   - கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி செய்வது வேலை ஆகும்.

5. தொழில் செயல்பாடுகளை எந்த அடிபடையில் வகைப்படுத்தப் படுகிறது?
   - அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

6. சிற்றளவு தொழில்கள் என்றால் என்ன?
   - குறைந்த மூலதனமும், குறைந்த அளவு பணியாளர்கள் மட்டுமே போதுமான தொழிலமைபிற்கு சிற்றளவு தொழில்கள் எனப்படும்.
     எ.கா : கைத்தறி நெசவு.

7. பேரளவு தொழில்கள் என்றால் என்ன?
   - அதிக மூலதனமும், அதிக அளவு பணியாளர்கள் கொண்ட தொழிலமைபிற்கு பேரளவு தொழில்கள் எனப்படும்.
     எ.கா : ஜவுளி தொழிற்சாலை , உணவு எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை

## சிறுவிடை வினாக்கள்.

1. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.
   - மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.
   - இவை இரண்டு வகைப்படும். அவை --
     1) பொருளாதாரச் செயல்பாடுகள் 2) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. சிறு குறிப்பு வரைக. (அ) தொழில் (ஆ) சிறப்புத் தொழில் ( ஜூன் 2019 ), ( செப் 2020 )

(அ) தொழில்:

- இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களை உற்பத்தி செய்வதும், விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொழிலாகும்
- தொழிலின் நடவடிக்கைகள் என்பது,
  1. மூலப் பொருட்களை வாங்குவது
  2. பொருட்களை உற்பத்தி செய்வது
  3. நுகர்வோரிடம் பொருட்களை சென்றடையச் செய்வது.

(ஆ) சிறப்புத் தொழில்:

- அந்தந்த துறையால் , அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.

( எ.கா ) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

3. தொழிலின் கருத்துக்களை ( கோட்பாடுகளை ) விவரி.

- தொழில் என்பது "இலாபம் பெறும் நோக்குடன் வழக்கமாக பொருள்களையும் பணிகளையும் விற்பனை செய்யும், பரிமாற்றம் செய்யும் நடவடிக்கை ஆகும் " எனவரையறுக்கப்பட்டிருக்கிறது.
- ஜேம்ஸ் ஸடீபன்சன் என்பவரது வரைவிலக்கணப்படி " தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்".
- ஹேனே என்பவரது வரைவிலக்கணப்படி "தொழில் என்பது பொருள்களை வாங்கி விற்பதன் மூலம் செல்வம் சேர்க்கும் மனித நடவடிக்கை ஆகும்".

4. மனித செயல்பாடுகளை விவரி

- மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.
- இவை இரண்டு வகைப்படும். அவை --
  1) பொருளாதாரச் செயல்பாடுகள் 2) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.

## பெருவிடை வினாக்கள்

1. தொழிலின் சிறப்பியில்புகள் யாவை? ( அல்லது ) தொழிலின் தன்மைகள் யாவை?

அ. பொருட்களை உற்பத்தி செய்தல் / திரட்டுதல்

- மனிதத் தேவையை பூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.

ஆ. விற்பனை (அ) பரிமாற்றம்

- பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் என்பது தொழிலின் மிக முக்கிய தன்மை ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காக துணியை நெய்தல் என்பது தொழில் செயல்பாடு ஆகாது.

இ. <u>பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது</u>

- ❖ பொருட்கள் உற்பத்தி செய்தல் (அ) திரட்டுதல் என்பது, நுகர்வு பொருட்களான துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும், உற்பத்தி பொருட்களான இயந்திரம் சார்ந்ததாகும்.
- ❖ சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீடு போன்றவைகள் ஆகும்.

ஈ. <u>ஒழுங்கு முறையில் தொடர்புடையது</u>

- ❖ தனிப்பட்டமுறையில் வாங்கி விற்பது என்பது தொழிலாகாது.
- ❖ தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும்.

உ. <u>இலாப நோக்கம்</u>

- ❖ தொழிலின் மிக முக்கியத் தன்மை இலாபம் ஈட்டுவது ஆகும்.
- ❖ மனித இனம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துக் கொண்டு தன்னுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம்.
- ❖ சிலர் இலாபம் ஈட்டும் நோக்குடன் அதிக நபர்களை தொழிலில் ஈடுபடவைக்கிறார்கள்.

ஊ. <u>இடர்பாட்டிற்கான கூறு</u>

- ❖ தொழிலில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும்.
- ❖ இலாபம் ஈட்டுதல் என்பது இடர்பாட்டை எதிர் கொள்வதற்கான வெகுமதியாக கருதப்படுகிறது.
- ❖ ஆகவே தொழில் செயல்பாடுகள் இடர்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

---

2. **தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க**

| அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| 1.உருவாக்கும் முறை | தோற்றுவிப்பாளரின் முடிவுகள் பதிவு மற்றும் பிற நடைமுறைகள் சட்டத்திற்கு உட்பட்டது. | சிறப்புத் தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல். | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம் |
| 2. பணியின் தன்மை | சரக்கு மற்றும் சேவையை பொதுமக்களுக்கு அளித்தல் | சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல் |
| 3. தகுதி | குறந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும், பயிற்சியும் பெறுதல். | குறந்தபட்ச தகுதி தேவை இல்லை |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 4. அடிப்படை நோக்கம் | சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து, இலாபம் ஈட்டுவது | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன், கூலி / சம்பளம் பெறுதல். |
| 5. வெகுமதி | இலாபம் | தொழில்முறை கட்டணம் | கூலி / சம்பளம் |
| 6. இடர் | இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை |
| 7. உரிமை மாற்றம் | உரிமை மாற்றம் செய்யப்படும் | உரிமை மாற்றம் செய்ய இயலாது | உரிமை மாற்றம் செய்ய இயலாது |

3. தொழிலின் ஏதேனும் ஐந்து நோக்கங்களை விவரி. ( மார்ச் 2020 )

1. **பொருளாதார நோக்கங்கள்**
   - ❖ தொழில்களின் பொருளாதார நோக்கம் என்பது, இலாபம் ஈட்டுவதே என்றாலும், இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குவதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாக பயன்படுத்துதல் போன்றவைகளே மிக முக்கியமானதாகும்.
2. **சமூக நோக்கங்கள்**
   - ❖ சமூக நலனை பேணுவது என்பது, சில தொழிலமைப்புகளை, அறிய வகைகளை, சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப் படவேண்டும்.
   - ❖ எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது.
3. **நிறுவன நோக்கங்கள்**
   - ❖ தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் , பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் தொடர்ந்து செயல்பாடுகள் அமையப் பெறவேண்டும்.
   - ❖ நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல் ஆகிய மூலமாக, அவை அமையலாம்.
4. **மனித நோக்கங்கள்**
   - ❖ தொழிலமைப்பு, தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்கால தேவையைப் நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்படவேண்டும்.
   - ❖ மேலும் இயலாதவர்கள், ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும்
5. **தேசிய நோக்கங்கள்**
   - ❖ ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும்.
   - ❖ எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல் பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளைவிவரி. ( ஜூன் 2019 )

| பொருளாதாரச் செயல்பாடுகள் | பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் |
|---|---|
| 1. <u>வரைவிலக்கணம்</u>: வாழ்வாதாரத்திற்காக தேவையான பணம், நிதி சார்ந்த ஆதாயங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்பாடுகள் எனப்படும். | மகிழ்ச்சி, அன்பு, இரக்கம், உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஆகும். |
| 2. <u>நோக்கம்</u>: இலாபம் ஈட்டுவது அல்லது நிதி சார்ந்த ஆதாயம் அடைவது. | சமூக, உளவியல், உணர்வு ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |
| 3. <u>பணத்தின் அடிப்படையில் அளவிடல்</u>: இதன் செயல் பாடுகளை, பண மதிப்பின் அடிப்படையில் அளவிட முடியும். | இதன் செயல் பாடுகளை, பணமதிப்பின் அடிப்படையில் அளவிட முடியாது. இவைகள் எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். |
| 4. <u>உறவு</u> : இதன் நடவடிக்கைகள் ,செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை. | இதன் நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவது இல்லை, |
| 5. <u>கால அளவு</u>: இவை திரும்பத் திரும்ப நிகழும் தன்மை கொண்டது. | இவை தொடர்ந்து நிகழாது. நேரம் கிடைக்கும் பொழுது நிகழும். |
| 6. <u>உருவாக காரணம்</u>: மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது. | உணர்வு பூர்வமாக மகிழ்ச்சியினை அனுபவிக்க உருவாக்கப்படுகிறது |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அத்தியாயம் 3. தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

## குறுவிடை வினாக்கள்

1. **வணிகத்தை வரையறுக்க**
   - **எவ்லின் தாமஸ்** அவர்களின் கூற்றுப்படி, "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும் ,விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்".

2. **தொழிற்சாலை என்றால் என்ன?**
   - ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையைத் தயாரித்து அளிக்கும் நிறுவனங்களையே தொழிற்சாலை என அழைக்கப்படுகின்றது.

   உதாரணம். : சிமெண்ட் உற்பத்தித் தொழில், ஜவுளி உற்பத்தித் தொழில்.

3. **வியாபாரம் என்றால் என்ன?**
   - பொருட்களின் உற்பத்தி கூடத்திலிருந்து, நுகரும் மையங்கள் வரை நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் வியாபாரம் எனப்படுகிறது

4. **போக்குவரத்து – சிறுகுறிப்பு வரைக.**
   - உற்பத்தி செய்த பொருட்களை, உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது என்பது அரிது.
   - அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுர்வோர்களுக்கு சென்று சேர்க்க வேண்டியது அவசியம்.
   - அப்பணியை போக்குவரத்து செய்கிறது.
   - அதாவது உற்பத்தியாளரிடமிருந்து, நுகர்வோருக்கு பொருளை நகர்த்தும் ஒரு ஊடகமாக போக்குவரத்து விளங்குகிறது.

## சிறுவிடை வினாக்கள்

1. **பிரித்தெடுக்கும் உற்பத்திதொழில்கள் மற்றும் மரபுசார் உற்பத்தி தொழில்களை வேறுபடுத்துக.** ( மார்ச் 2019 )

| பிரித்தெடுக்கும் உற்பத்திதொழில்கள் | மரபுசார் உற்பத்தி தொழில்கள் |
|---|---|
| பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களை தூய்மை செய்து, பிரித்து எடுக்கும் பணியினை இத் தொழிற்சாலகள் மேற்கொள்கின்றன. | நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் இத் தொழிற்சாலையில் வளர்க்கப் படுகின்றன. |
| நிலக்கரி மற்றும் கச்சாஎண்ணை எடுத்தல் இத் தொழிற்சலைக்கு உதாரணமாகும் | கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு ஆகியவை இத் தொழிற்சலைக்கு உதாரணமாகும். |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **சேவைத் தொழில்கள் என்றால் என்ன?**
   - இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன.
   - இவ்வகை சேவை வியாபாரம் பலவகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.

     ஏ.கா: மருத்துவம் , கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில், வங்கியியல், காப்பீடு, பண்டகச்சாலை

---

3. **வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி?**
   1. பொருளாதார நடைமுறைகள் :
      - எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதேயாகும்.
      - எனவே வணிகம் என்பது எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் இலாபத்தைப் பெறும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
   2. பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம் :
      - வணிகம் என்பது இலாபத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை உள்ளடக்கிறது.
      - இந்தப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கம் நுகர்வோருக்கு மறுவிற்பனை செய்வதேயாகும்.
   3. பலன் பெறும் நோக்கம் :
      - வணிகத் தொடர்பான நடைமுறைப் பணிகளை மேற்கொள்வதால் பெறும் இலாபமே அப்பணிக்கென கிடைக்கும் பலனாகும்.
      - இலாப நோக்கம் அல்லாது செய்யப்படும் எந்த ஒரு செயலும் வணிகம் ஆகாது.

---

4. **வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.**
   - இது பொருட்கள் மற்றும் சேவைகளைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குப் பரிமாற்றம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
   - வணிகம் என்பது வியாபாரம் மற்றும் வியாபாரத்தோடு தொடர்புடைய சில நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
   - வணிகம் என்பது இரண்டு வகைப்படும்.
   - ஒன்று வியாபாரம் மற்றொன்று வியாபாரத்திற்கு உறுதுணைப்புரிபவை.
   - மேலும் வணிகத்தை,உள்நாட்டு வணிகம் எனவும் வெளிநாட்டு வணிகம் எனவும் வகைப்படுத்தலாம்.
   - உள்நாட்டு வணிகத்தை மொத்தவணிகம் என்றும் சில்லறை வணிகம் என்றும் மேலும் வகைப்படுத்தலாம்.

---

## பெருவிடை வினாக்கள்

1. **உற்பத்தித் தொழில்களின் வகைகளை அதன் அளவுகளின் அடிப்படையில் விவரி.**
   - தொழில் முதலீடுகளின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.
     i) குறுந்தொழில்கள்
     ii) சிறு தொழில்கள்
     iii) நடுத்தரத் தொழில்கள்
     iv) பெருந்தொழில்கள்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

i) <u>குறுந்தொழில்கள் :</u>

- குறுகிய காலத்தில் செய்து முடிக்கும் தொழில்கள் குறுந்தொழில்கள் எனப்படும்.

ii) <u>சிறு தொழில்கள் :</u>

- சிறிய அளவிலான தொழில்கள் சிறு தொழில்கள் எனப்படும்.

<u>நடுத்தரத் தொழில்கள் :</u>

- சிறிய அளவில் இல்லாமலும், பெரிய அளவில் இல்லாமலும் உள்ள தொழில்கள் நடுத்தர தொழில்கள் எனப்படும்.

iii) <u>பெருந்தொழில்கள்</u>

- பெரிய அளவிலான தொழில்கள் பெருந்தொழில்கள் எனப்படும்.

2. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க

| அடிப்படை | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| பொருள் | பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி,மாற்றுதல் பயனுள்ள தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது | பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது |
| உள்ளடக்கம் | கச்சாபொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையையும் உள்ளடக்கியது | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| முதல் | அதிக முதலீடு தேவை | குறைந்தளவு முதலீடே தேவை | வியாபாரத்தின் தன்மை ப் பொருத்து முதல் தேவை |
| இடர்பாடு | அதிக இடர்பாடு கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது |
| பரிமாணம் | பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி**

1. **பொருளாதார நடைமுறைகள்** :
   - ❖ எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதேயாகும்.
   - ❖ எனவே வணிகம் என்பது எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் இலாபத்தைப் பெறும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
2. **பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம்** :
   - ❖ வணிகம் என்பது இலாபத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை உள்ளடக்கிறது.
   - ❖ இந்தப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கம் நுகர்வோருக்கு மறுவிற்பனை செய்வதேயாகும்.
3. **பலன் பெறும் நோக்கம்** :
   - ❖ வணிகத் தொடர்பான நடைமுறைப் பணிகளை மேற்கொள்வதால் பெறும் இலாபமே அப்பணிக்கென கிடைக்கும் பலனாகும்.
   - ❖ இலாப நோக்கம் அல்லாது செய்யப்படும் எந்த ஒரு செயலும் வணிகம் ஆகாது.
4. **பயன்பாடுகளை தோற்றுவித்தல்** :
   - ❖ வணிகம் ஒரு பொருளுக்கு வடிவம், இடம் மற்றும் காலப் பயன்பாட்டை உருவாக்குகிறது.
   - ❖ மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றுவதன் மூலம் ஒரு பொருளுக்கு வடிவப் பயன்பாடு கிடைக்கிறது.
5. **வணிக நடவடிக்கை ஒழுங்கு** :
   - ❖ வணிக நடவடிக்கை எப்பொழுதும் வழக்கமாக நடைபெறுவதாக இருக்க வேண்டும்.
   - ❖ இதில் மாறுபட்ட அல்லது வேறுபட்ட நடவடிக்கைகள் இடம் பெறக்கூடாது.

---

4. **சிறு குறிப்பு வரைக**

அ. **பகுப்பாய்வு உற்பத்தி தொழில்**

- ❖ ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை பகுப்பாய்வு உற்பத்தி தொழிற்சாலை ஆகும்.

எ.கா: எண்ணைசுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.

ஆ. **மரபுசார் உற்பத்தித் தொழில்கள்**

- ❖ நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுவதையே மரபுசார் உற்பத்தி தொழில்கள் எனப்படுகின்றன.

எ.கா : கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

இ. **கட்டுமானத் தொழில்கள்**

- ❖ கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை எனப்படுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. **வணிகத்திற்கு உறுதுணையானவற்றைச் சுருக்கமாக விவரி .**

1. **வியாபாரம்**

- பொருட்களின் உற்பத்தி கூடத்திலிருந்து, நுகரும் மையங்கள் வரை நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் வியாபாரம் எனப்படுகிறது.

2. **போக்குவரத்து**

- உற்பத்தி செய்த பொருட்களை, உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது என்பது அரிது.
- அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுர்வோர்களுக்கு சென்று சேர்க்கவேண்டியது அவசியம்.
- அப்பணியை போக்குவரத்து செய்கிறது.

3. **வங்கியில்**

- வங்கிகளின் உதவியின்றி எந்த தொழில் அமைப்பும் இயங்க முடியாது.
- வங்கி நிதியின் மூலம், தொழில் அமைப்புகள், நிலைச்சொத்து வாங்குதல், சரக்கு கொள்முதல் செய்தல், கச்சாப்பொருட்கள் வாங்குதல், இயந்திரங்கள் வாங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

4. **காப்பீடு**

- வியாபாரம் செய்யும் போது, தீ, களவு, சூறாவளி, நிலநடுக்கம், கடல் நடுக்கம், வெடிவிபத்து, இயந்திர கோளாறு போன்ற பலதரப்பட்ட இடர்பாடுகள் எல்லா தொழில் நிறுமங்களும் ஏற்பட வாய்ப்புள்ளன.
- இத்தகைய இடரிலிருந்து,பண நட்டமின்றி வெளிவர காப்பீடு, நிறுமங்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குகின்றது.

5. **பண்டகக் காப்பு**

- சாதாரணமாக, பொருட்கள் யாவும் உற்பத்தி செய்யப்பட்ட உடனே விற்கப்படுவதும் இல்லை, நுகரப்படுவதும் இல்லை.
- பண்டகக் காப்பகங்கள், தொழில் நிறுவனங்களின் பொருட்களைச் சேமித்து வைத்து, நுகர்வோர்களுக்கு தேவைப் படும்போது வழங்கிட பேருதவி புரிகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அலகு - 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

## அத்தியாயம் 4. தனியாள் வணிகம்

## குறுவிடை வினாக்கள்

1. **தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?**
   - தானே முதலிட்டு, தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, எவர் ஒருவர் நிர்வாகத்தை மேலாண்மை செய்கிறாரோ, அவரே தனியாள் வணிகர் எனப்படுகிறார்.

2. **கூட்டுரு நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக கூறுக**
   - இவை தனக்கென்ற ஒரு சட்டத் தன்மையைப் பெற்று, ஒரு புனைவு நபர் என்ற முறையில், உரிமையாளர்களிடமிருந்து தனித்த ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது.
   - இதில் உரிமையும், மேலாண்மையும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.
   - பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கும் இயக்குநரவை, நிறுவனத்தை மேலாண்மை செய்கிறது.
   - உரிமையாளர்கள் மேலாண்மையில் நேரிடையாகப் பங்கேற்க இயலாது.
   - எ.கா : அரசு நிறுவனங்கள், கூட்டுப்பங்கு நிறுமங்கள், கூட்டுறவுத்துறை

3. **கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றி சுருங்கக் கூறுக.** ( செப் 2020 )
   - உரிமையாளர்களும் தொழிலும் ஒன்றாகவே கருதப்படுகிறது.
   - இதில் உரிமையும், மேலாண்மையும் ஒருவரையே சாரும்.
   - உரிமையாளர் வியாபாரத்தை நேரடியாக கட்டுப்படுத்த இயலும்.

   எ.கா : தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்து கூட்டுக் குடும்பம்.

4. **பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?**

   அ. மளிகை ஆ. மருந்துக்கடை இ. கைத்தொழில் மையம் ஈ. சட்டநிறுமம் உ. இணையதளஅமைப்பு
   - அ) மளிகை ஆ) மருந்துக்கடை இ) கைத்தொழில் மையம் உ) இணையதள அமைப்பு ஆகியவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்.
   - **ஏனெனில்,** மேற்கண்ட தொழில் அமைப்புகளைத் தொடங்க குறைந்த மூலதனமே போதுமானது. அதிக இடர்பாடுகள் அற்றது. விரைவாக தொழில் தொடங்கலாம்.
   - மேற்கண்ட தொழிலை நடத்த, எந்தவித சட்டபூர்வமான நடைமுறைகளையும் பின்பற்றத் தேவையில்லை.

## சிறுவிடை வினாக்கள்

1. **தனியாள் வணிகத்தில் இரகசியத் தன்மை எப்படி காப்பாற்ற இயலும்?**
   - தனியாள் வணிகத்தில், அவர் ஒருவரே உரிமையாளர் ஆதலால் , தன் வியாபார கணக்குகளையும் , தொழில் சார்ந்த உண்மைகளையும், யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.
   - எனவே தனது தொழில் பற்றிய இரகசியத்தை எளிதாக அவரால் காப்பாற்ற முடியும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?** **( மார்ச் 2019 )**

- ❖ தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
- ❖ அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.

3. **தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.** **( மார்ச் 2020 )**

1. **தனிநபர் உரிமை**
   - ❖ இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும்.
   - ❖ அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
   - ❖ வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.
2. **தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு**
   - ❖ இவர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் யாருடய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
   - ❖ இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.
3. **வரையறாப் பொறுப்பு**
   - ❖ தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
   - ❖ அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.

4. **தனியாள்வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.**

1. இனிப்பு கடை 2. பெட்டிக்கடை 3. அழகு நிலையங்கள் 4.தையலகம்
5. சலவை நிலயம் 6. பழ வியாபாரம்

5. **தனியாள்வணிகம் - வரைவிலக்கணம் தருக.**

- ❖ **J.J. ஹேன்சன்** அவர்களின் கூற்றுப்படி, “தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்”

## கூடுதல் வினா

1. கோவிந்த் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தை கணக்குகளை பராமரிக்கவும், சகோதரர் மாலையில் வாடிக்கையாளர்களை பார்த்துக்கொள்ள உதவினார். கோவிந்த் தந்தைக்கும், சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எவ்விதமான வியாபார அமைப்பு எனக் கூறுக. மேலும் அவ்வியாபார அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக. ( மார்ச் 2019 )

**அ) தனியாள் வணிகம்**

**ஆ) குறைபாடுகள்**

1) அளவான மூலதனம்
2) வரையறுக்கப்பட்ட மேலாண்மைத்திறன்
3) வரையறாப்பொறுப்பு
4) சிறப்புத் தேர்ச்சியின்மை
5) அவசர முடிவு



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெருவிடை வினாக்கள்.

1. **தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?** ( ஜூன் 2019 ), ( செப் 2020 )

1. **தனிநபர் உரிமை**
   - இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும்.
   - அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
   - வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.
2. **தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு**
   - இவர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் யாருடய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
   - இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.
3. **வரையறாப் பொறுப்பு**
   - தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
   - அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.
4. **முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை**
   - நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால், அவரைமேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.
   - இலாபத்தின் உந்துதலால், அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.
5. **அரசு விதிமுறைகள் பின்பற்றாமை**
   - இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்படவேண்டிய கட்டாயம் இல்லை.
6. **குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை**
   - தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால், முதல் சிறிய அளவிலேயேஇருக்கும்.
   - அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம்.
   - மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

---

2. **தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி.** ( மார்ச் 2020 )

1. **எளிதான அமைப்பு**
   - தனியாள் வணிகம் மட்டுமே, வியாபார அமைப்பு வடிவங்களில், சட்ட சிக்கல்கள் ஏதுமின்றித் துவக்கலாம்.
   - ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியம் இல்லை.
2. **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு**
   - இலாபம் முழுவதற்கும் தனியாள் வணிகர் உரிமையாளர் ஆகிறார்.
   - இது அவருடைய வியபாரத்தை ஊக்குவித்து, அயராது உழைக்கச் செய்கிறது.
3. **குறைந்த மூலதனம்**
   - தனியாள் வணிகத்தை துவங்க, குறந்த முதலே போதுமானது.
   - கூடுதல் மூலதனம் தேவைப்பட்டால், கடன் பெற்று வியாபாரத்தில் மேலும் முதலீடு செய்யலாம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **கடன் தகுதி**

- ❖ தன் வியாபாரக் கடன்களை, சொந்தச் சொத்துக்களில் இருந்தும் தீர்ப்பதால், கடனீந்தோர் எளிதாக கடன் தர முன் வருவர்.

5. **வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு**

- ❖ வாடிக்கையாளர்களின் விருப்பங்களைத் தெரிந்து, அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார்.
- ❖ எனவே,வாடிக்கையாளர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கின்றது

6. **விரைவான முடிவு**

- ❖ தனியாள் வணிகர் ஒருவர், தானே உரிமையாளராக இருப்பதால், கால தாமதம் இன்றியும், சூழ்நிலைக்கு ஏற்றவாறும் விரைவாக முடிவு முடிவெடுக்க அவரால் முடியும்.

---

3. **தனியாள்வணிகத்தின் குறைபாடுகளை விவரி.**

1. **அளவான மூலதனம்**

- ❖ தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது.
- ❖ எனவே, அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலை, இவரால் துவங்க இயலாது.

2. **வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்**

- ❖ வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் மட்டுமே நடத்தப்படுகின்றது.
- ❖ இந்த வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடைசெய்கிறது.

3. **வரையறாப்பொறுப்பு**

- ❖ தனி வணிகரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
- ❖ கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபர் தன் சொந்த சொத்துக்களை இழக்க வாய்ப்பு உள்ளது.

4. **சிறப்புத் தேர்ச்சியின்மை**

- ❖ தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில், இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.
- ❖ போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால், பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை பணியமர்த்த இயலாது.
- ❖ எனவே, அவர் ஒருவரே அனைத்து பணிகளையும் கையாள முடியாது.
- ❖ இதன் விளைவாகத் திறமைக் குறைவு ஏற்படும்.

5. **அவசர முடிவு**

- ❖ அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு, நன்மை பயப்பதாக இருந்தாலும், சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்கு செல்ல வழி வகுத்துவிடும்.

# அத்தியாயம் 5. இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை

## குறுவிடை வினாக்கள்

1. **கர்த்தா என்பவர் யார்?** ( மார்ச் 2020 )
   - இந்து கூட்டுக் குடும்பத்தின், வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று என்று பெயர்.

2. **இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?** ( மார்ச் 2019 )
   (i) தயாபாகா (ii) மிட்டாக்சரா

3. **கூட்டாளி என்பவர் யார்?**
   - பல நபர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுகின்றார்

4. **உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?** ( ஜூன் 2019 )
   - தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி என்று பெயர்.
   - ஆனால், இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார்

5. **இளவர் கூட்டாளி என்பவர் யார்?**
   - இந்திய பெரும்பான்மைச் சட்டம், 18 வயதை பூர்த்தி அடையாத ஒரு நபரை இளவர் என்று குறிப்பிடுகிறது.
   - சட்டத்தின் அடிப்படையில், ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது வரை அவர் இளவராக கருதப்படுகிறார்.

6. **கூட்டாண்மை கலைப்பு எத்தனை வகைப்படும்?**
   - இரண்டு வகைப்படும். அவை,
     1) நிறுவனக் கலைப்பு 2) கூட்டாண்மைக் கலைப்பு

## சிறுவிடை வினாக்கள்

1. **இந்துக் கூட்டுக் குடும்பத் தொழில் என்றால் என்ன?**
   - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, ஒன்றாகவே வாழ்ந்து, அக்குடும்பத்தின் சொத்துக்களை, ஒன்றாக முதலீடு செய்து, தொழிலை மேற்கொண்டு, அதிலிருந்து கிடைக்கின்ற இலாப நட்டத்தை பகிர்ந்து கொண்டு வாழும் இந்த குடும்பமே, இந்து கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படுகின்றது.
   - தொழில்கள் : விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள்

2. **இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி.**
   1. <u>இந்துச் சட்டத்தின்படி கட்டுப்படுத்துதல்</u> ( ஜூன் 2019 )
      - இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு, மேலாண்மை செய்யப்படுகிறது.
   2. <u>மேலாண்மை</u>
      - இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" ஆவார்.
      - அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள்.
      - கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. <u>பிறப்பால் உறுப்பினர்</u>
   - இக்குடும்பத்தில் உறுப்பினராக, அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்கவேண்டும்.
   - அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண்குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.
   - உறுப்பினராக, எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.

3. **இந்து கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி.**
   - இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது
   - வியாபாரத்தின் நலனிற்காக, ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல், போன்றவற்றை செய்யும் பொறுப்பு இவருக்கு மட்டுமே உண்டு.

4. **கூட்டு வாரிசுதாரர் என்பவர் யார் ?**
   - குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்று பெயர்.
   - அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.

5. **கூட்டாண்மை இலக்கணம் வரைக.** ( செப் 2020 )
   - இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4 இன் படி, "எல்லோரும் சேர்ந்தோ, எல்லோருக்காக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தை பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்

     ( அல்லது )
   - பேராசிரியர் ஹேனே அவர்களின் கூற்றுப்படி, "தனிபட்ட இலாபங்களுக்காக ஒரு வியாபாரத்தை நடத்த ஒப்புக் கொண்ட நபர்களுக்கிடையே நிலவும் உறவே" கூட்டாண்மையாகும்."

6. **கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?**
   - குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2 பேர்
   - அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை : வங்கித் தொழிலாயின் 10 பேர், பிற தொழிலாயின் 20 பேர்

7. **கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**
   - கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் உடண்பாடு ஆகும்.
   - கூட்டாண்மை பற்றிய விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் இதில் அடங்கியிருக்கும்.
   - இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப் படவேண்டும்.

8. **இரகசிய கூட்டாளி என்பவர் யார்?**
   - பொது மக்களுக்குத் தெரியாமல் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பவர்.
   - மற்ற கூட்டாளிகளுக்கு உள்ளதைப் போன்றே இவரும் கடனிற்கு பொறுப்பாளியாவார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

9. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?
 - கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய கடன் தொகையை, அனைத்து கூட்டாளிகளின் சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு **கூட்டுப்பொறுப்பு** என்று பெயர்.
 - ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்துக்கள் மீது வழக்குத்தொடுத்து பெற்றுக் கொண்டால் அது **தனிப் பொறுப்பு** ஆகும்.

## பெருவிடை வினாக்கள்

1. கர்த்தாவின் உட்கிடைஆணையுரிமை என்றால் என்ன?
 - ஒரு அமைப்பின் நலனை பாதுகாக்கும் பொருட்டு, சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒருவருக்கு வழங்கப்படும் உரிமைக்கு உட்கிடை ஆணையுரிமை எனப்படும்.
 - அந்த வகையில், இந்து கூட்டு குடுப்பத்தில், வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றை செய்யும் உட்கிடையான அதிகாரம், குடும்ப தலைவர் கர்த்தாவிற்கு மட்டுமே உண்டு.

2. கூட்டாண்மையில் ஒரு இளவரை கூட்டாளியாக சேர்க்கலாமா? ஏன்? ( ஜூன் 2019 )
 - சேர்க்கலாம்.
 - ஏனெனில், கூட்டாண்மையின் பயன்களுக்கு, இளவர் தேவைபடுவதால், அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்.

3. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( மார்ச் 2019 )
 i) கூட்டாண்மையின் பெயர்.
 ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை
 iii) கூட்டாண்மையின் காலவரையறை
 iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை
 v) கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை
 vi) இலாப - நட்ட ம் பகிர்வு விகிதம்
 vii) மூலதனத்தின் மீது வட்டி
 viii) எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்
 ix) கூட்டாளிகள் தரும் கடன்
 x) கணக்கு வைப்பு
 xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

4. கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி.
 - நிறுவனக் கலைப்பு இரண்டுவிதமாக நடைபெறுகிறது.
 அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு
 ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு

அ. <u>நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு</u>

i) <u>கூட்டாளிகளின் உடன்பாட்டால்</u>
 - அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால், கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

ii) **ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை.**

- ❖ ஏதாவது ஒருவர் நொடிப்பு நிலை அடைந்தாலோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

iii) **சட்டத்திற்கு புறம்பான செயலால்**

- ❖ சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால், தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

iv) **விருப்புமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு**

- ❖ ஏதாவது ஒரு கூட்டாளி, கடிதம் மூலம் அனைத்துக் கூட்டாளிகளுக்கும், தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

v) **சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு**

1) ஒரு கூட்டாளி இறந்து விட்டால்
2) குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின், அக்காலம் முடிவடைந்துவடன்
3) குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே கூட்டாண்மை தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றுவுடன் .
4) ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டால், கூட்டாண்மை கலைக்கப்படும்.

## ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு

- ❖ நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்க்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.
  - i) கூட்டாளி பைத்திய நிலையானால்
  - ii) நிலையான திறமையின்மை
  - iii) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு
  - iv) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
  - v) உரிமை மாற்றம்
  - vi) தொடர் நட்டம்
  - vii) நீதி நேர்மை அடிப்படையில்
- ❖ நிறுவனத்தைக் கலைத்திட, போதிய அடிப்படை காரணம் உள்ளது என்று நீதிமன்றம் கருதினால்,கூட்டாண்மைக் கலைக்கப்படலாம்.

5. **கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுமக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.**

| வ. எண் | கூட்டாண்மைக் கலைப்பு | நிறுவனக் கலைப்பு |
|---|---|---|
| 1 | ஒருவர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கூட்டாளிகள் தங்களுக்குள் உள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். | அனைத்துக் கூட்டாளிகளும் தங்களுக்குள் உள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். |
| 2 | இக் கலைப்பால், தொழிலை முடிவுக்குக் கொண்டு வரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம். | இக் கலைப்பு, தொழிலை முடிவுக்குக் கொண்டுவந்து விடும். |
| 3 | கலைப்பிற்குப் பிறகும் தொழில் தொடர்ந்து நடைபெறும். | கலைப்பிற்குப் பிறகு தொழிலை தொடர்ந்து நடத்த இயலாது. |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

6. **கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.**

i) நிறுவனத்தின்பெயர்
ii) வணிகத்தின் தலைமையிடம்
iii) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
iv) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
v) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும்
vi) கூட்டாண்மையின் காலம்

- ❖ மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ மேற்காணும் அறிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

1. **கூட்டாளிகளின் வகைகளை விவரி.** ( செப் 2020 )

1) **உழைக்கும் கூட்டாளி**
- ❖ தொழிலில் முதலீடு செய்து, தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கூட்டாளிக்கு, உழைக்கும் கூட்டாளி என்று பெயர்.
- ❖ தொழிலை மேலாண்மை செய்யும் உரிமை, இவருக்கு உண்டு.

2) **உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி**
- ❖ தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி என்று பெயர்.
- ❖ ஆனால், இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார்
- ❖ வெளியாட்களுக்கு, அவர் கூட்டாளி போன்று தோன்றாமல் பார்த்துக் கொள்வார்.

3) **பெயரளவு கூட்டாளி**
- ❖ தொழிலில் முதலிடாமலும், மேலாண்மையில் பங்கேற்காமலும் உள்ள கூட்டாளிகளுக்கு, பெயரளவு கூட்டாளி என்று பெயர்.
- ❖ நிறுவன நற்பெயருக்காகவும், மரியாதைக்காகவும் தனது பெயரை மட்டுமே கடனாக வழங்குகிறார்.
- ❖ இவரின் வரையறாப்பொறுப்பு, மூன்றாவது நபரின் கடனிற்கு உண்டு.

4) **இலாபத்தில் மட்டுமே பங்கேற்கும் கூட்டாளி**
- ❖ இலாபத்தில் மட்டும் பங்கேற்று, நட்டத்தில் பங்கேற்த கூட்டாளிக்கு, இலாபத்தில மட்டும் பங்கேற்கும் கூட்டாளி என்று பெயர்.
- ❖ ஆனால்,இவரின் வரையறாப்பொறுப்பு, மூன்றாவது நபரின் கடனிற்கு உண்டு.

5) **முரண்தடைக் கூட்டாளி**
- ❖ இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.
- ❖ தானும் ஒரு கூட்டாளி என நம்பச் செய்கிறார்.
- ❖ இதை நம்பி சிலர் நிறுவனத்திற்கு கடன் கொடுப்பர்.
- ❖ இவர் அவர்களுக்கு பொறுபாகிறார்.

6) **உரிமைப்போலிக் கூட்டாளி**
- ❖ இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.
- ❖ நிறுவனம் இவரைக் கூட்டாளி எனச் சொல்லும்.
- ❖ இதை அவர் மறுத்துரைக்க வேண்டும்.
- ❖ இல்லையெனில், கூட்டாண்மையுடன் தொடர்புடையவர்களுக்கு பொறுப்பாகிறார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அலகு - 2 தொழிலின் அடிப்படைக் வடிவங்கள்

## அத்தியாயம் 6. கூட்டுப்பங்கு நிறுமம்

### குறுவிடை வினாக்கள்

1. **நிறுமத்தின் பல்வேறு வகைகளை விவரி**

   1) **கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில்:**
   அ) பட்டய நிறுமங்கள் ஆ) சட்டமுறை நிறுமங்கள் இ) இலாபம் நோக்கம் இல்லாச் சங்கம்.

   2) **உறுப்பினர்களின் அடிப்படையில் :**
   அ) தனி நிறுமம் ஆ) பொது நிறுமம்.

   3) **பொறுப்பின் அடிபடையில்**
   அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள்
   ஆ) பொறுப்புறுதியால் வரையறை செய்யப்பட்ட நிறுமங்கள்
   இ) வரையறாப் பொறுப்புடைய நிறுமங்கள்

   4) **கட்டுப்பாட்டின் அடிப்படையில் :**
   அ) அரசு நிறுமங்கள் ஆ) பிடிப்பு நிறுமங்கள் இ) துணை நிறுமங்கள்

   5) **தேசிய அடிப்படையில்:**
   அ) உள்நாட்டு நிறுமங்கள் ஆ) அயல்நாட்டு நிறுமங்கள் இ) பன்னாட்டு நிறுமங்கள்

---

2. **நிறுமம் வரைவிலக்கணம் தருக.**
   - இந்தியநிறுமச் சட்டம் 2013, பிரிவு 2 - ன், " நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும், நிலைபேற்றுத் தொடர்ச்சியுடனும், பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்".

---

3. **வரையறு பொறுப்பு என்றால் என்ன?**
   - பங்குதாரர், தான் வைத்திருக்கும் பங்குகள் மீது, செலுத்தப்பெறாத தொகை அளவிற்கு மட்டுமே பொறுப்பு இருந்தால் அது வரையறு பொறுப்பாகும்.

---

4. **நிறுமத்தின் ஏதேனும் இரணடு சிறப்பியல்புகளை குறிப்பிடுக.**

   1 **தனியான சட்ட நபர் தன்மையுடையது:**
   - உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டுத் தன்னிச்சையாகச் செயல்படும் தனிநபர்த் தன்மையை நிறுமம் பெற்றுள்ளது.
   - தனிப்பெயருடன் பொது முத்திரையையும் கொண்டுள்ளது.

   2 **வரையறு பொறுப்பு**
   - பங்குதாரர், தான் வைத்திருக்கும் பங்குகள் மீது, செலுத்தப்பெறாத தொகை அளவிற்கு மட்டுமே பொறுப்பு இருந்தால் அது வரையறு பொறுப்பாகும்.

   3 **நீடித்த வாழ்வு:**
   - இதன் ஆயுளைச் சட்டத்தினால் மட்டுமே முடிவுக்கு கொண்டு வர முடியும்.
   - பங்குதாரர்களின் நொடிப்பு நிலை, செயல்திறன் இழப்பு, மனச் சமநிலை இழப்பு போன்ற நிகழ்வுகள் நிறுமத்தின் ஆயுளைப் பாதிக்காது.

---

5. **பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?** ( செப் 2020 )
   - ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப் படுகின்றன.
   - வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவிடை வினாக்கள்

1. **நிறுமத்தின் ஏதேனும் மூன்று நன்மைகளை விவரி.**

1) **பேரளவு மூலதனம்**
- ❖ பேரளவு மூலதனம் என்பது, பெரிய அளவு மூலதனத்தை திரட்டி அவற்றை பெரிய தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதாகும்.
- ❖ தனியாள் வணிகம், கூட்டாண்மை போல் அல்லாமல் கூட்டுபங்கு நிறுமத்தால் பேரளவு முதல் திரட்ட முடியும்

2) **வரையறு பொறுப்பு**
- ❖ பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
- ❖ பங்குதாரர், தான் வைத்திருக்கும் பங்குகள் மீது, செலுத்தப்பெறாத தொகை அளவிற்கே, அவர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

3) **பங்குகள் மாற்றம்**
- ❖ இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கிடையே பங்குகள் மாற்றம் என்பது எளிது
- ❖ ஆகவே,முதலீடு என்பது எளிமையான ஒன்றாகும்.
- ❖ ஒரு பங்குதாரர், பங்குகளை எளிதாக வாங்கவும், விற்று பணமாக்கவும் முடியும்.

4) **நீடித்த வாழ்வு**
- ❖ எவர் வேண்டுமானாலும் பங்குகளை வாங்கி பங்குதாரர் ஆகலாம்.
- ❖ எப்பொழுது வேண்டுமானாலும் யாருக்கும் பங்குகளைவிற்று விடலாம்.
- ❖ ஆனால், நிறுமம் என்றும் நீடித்து நிலைத்து இருக்கும்.

5) **சேமிப்புப் பழக்கம் மற்றும் மூலதனம் செய்யும் பழக்கம்**
- ❖ கூட்டுப் பங்கு நிறுவனம், பொது மக்களைச் சேமிக்க ஊக்குவிக்கிறது.
- ❖ சிறிய தொகையாக இருந்தாலும், அத் தொகைக்கு பங்குகளை வாங்க இயலும்.
- ❖ ஒரு நபர், ஒரு நிறுமத்தின் ஒரு பங்கைக்கூட வாங்கலாம்.

---

2. **தனி நிறுமம் என்றால் என்ன?**
- ❖ செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,00,000 க்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும்.
- ❖ இதைத் துவங்க குறைந்தது 2 பேரும் அதிகபட்சம் 200 பேரும் தேவை.
- ❖ இரண்டு இயக்குநர்களைக் கொண்டு செயல் படும்.
- ❖ தனி நிறுமம் மூன்று முறைகளில் அமைக்கப்படுகின்றன. அவையாவன:

1. தனி நிறுமம் 2. சிறிய தனி வரையறுக்கப்பட்ட நிறுமம் 3. ஒரு நபர் தனி நிறுமம்

---

3. **அரசு நிறுமம் என்றால் என்ன? ( செப் 2020 )**
- ❖ பொதுத்துறை நிறுவனங்களை, இந்திய நிறுமச் சட்டம் 1956 - ன் கீழ் பதிவு செய்தால், அது அரசு நிறுமம் எனப்படும்.
- ❖ இவ்வகை நிறுமங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்கு சொந்தமானது.

(அல்லது )

- ❖ இந்திய நிறுமச்சட்டம் 1956 பிரிவு 617 - ன் படி, அரசு நிறுமங்கள் என்பது, செலுத்தப்பட்ட மூலதனம், 51% க்கு மேலாக
  1) மத்திய அரசு
  2) மாநில அரசு அல்லது மாநில அரசுகள்
  3) பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் வைத்திருந்தால், அவற்றையே அரசு நிறுமங்கள் என்று அழைக்கப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?

- இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும்.

## பெருவிடை வினாக்கள்

1. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? ( மார்ச் 2020 )

1. **பெயர் குறித்த உட்பிரிவு:**
   - நிறுவனத்திற்கு, சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது.
   - அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களுக்கு பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் “வரையறுக்கப்பட்டது” என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.
2. **இடங்குறித்த உட்பிரிவு :**
   - நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. **நோக்கம் குறித்த உட்பிரிவு :**
   - நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.
4. **பொறுப்புக் குறித்த உட்பிரிவு:**
   - பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில், ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.
5. **முதல் குறித்த உட்பிரிவு**
   - நிறுமத்தின் அங்கிகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
6. **அமைப்பு குறித்த உட்பிரிவு**
   - பங்குதாரர்கள், தாங்கள் ஒன்றினைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது.
   - பொதுநிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இடவேண்டும்.

1. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 10 )

i. பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.
ii. ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள்
iii. பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.
iv. பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்தல் மற்றும் அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.
v. பங்குமாற்றம் குறித்த விதிகள்.
vi. பங்காதாயம் அறிவித்தல் .
vii. நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம் .
viii. இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.
ix. கூட்டங்களை நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்

x. நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்
xi. நிறுமத்தின் பொது முத்திரை.
xii. நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.

2. **தகவலறிக்கை என்றால் என்ன?**

- ❖ ஒரு பொது வரையறை நிறுமம், தான் வெளியிடும் பங்குகளையும், கடனீட்டு பத்திரங்களையும் வாங்குமாறு, பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு ஆவணம் தகவலறிக்கை எனப்படும்.
- ❖ பொது மக்களிடமிருந்து வைப்புகளை பெறுவதற்காக, வெளியிடப்படும் விளம்பரம் தகவலறிக்கையாகவே கருதப்படும்.

3. **பன்னாட்டு நிறுவனம் என்றால் என்ன?**

- ❖ பல்வேறு நாடுகளில் வியாபாரம் செய்யும் நிறுவனம் பன்னாட்டு நிறுவனம் ஆகும்.
- ❖ இதன் செயல்பாடுகள்,ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கும்.
- ❖ பல நாடுகளில் இதன் உற்பத்தி, சந்தையியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் என உலகளவில் நடைபெறுகிறது .
- ❖ தனது இலாபத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து ஈட்டுகின்றது

<u>எ.கா</u> : 1. மைக்ரோ சாப்ட் நிறுவனம் 2. நோக்கியா நிறுவனம் 3. நெஸ்ட்லே
4. கோகோ கோலா 5. IBM 6. பெப்சிக்கோ, 7. சோனி கார்ப்ரேஷன்

4. **பிடிப்பு, துணை நிறுமங்கள் பற்றி விளக்குக.** ( செப் 2020 )

**<u>பிடிப்பு நிறுமங்கள்</u>**

பிரிவு 2 (87) பிடிப்பு நிறுமம் என்பது, மற்றொரு நிறுமத்தின்

1. பெரும்பாண்மை இயக்குநர்களை நியமிக்கவும் அல்லது நீக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் நிறுமம்,
2. நிறுமத்தின் மொத்தப் பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை வைத்திருக்கும் நிறுமம் பிடிப்பு நிறுமமாகும்.
3. ஒரு பிடிப்பு நிறுமம் , எத்தனை துணை நிறுமங்களை வேண்டுமானாலும் நிர்வகிக்கலாம்.

**<u>துணை நிறுமங்கள்</u>**

துணை நிறுமம் என்பது,

1. நிறுமத்தின் மொத்த பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை மற்றொரு நிறுமம் வைத்திருந்தாலும்,
2. பெரும்பான்மை இயக்குனர்களை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தாலும், அவ்வாறு கட்டுப்படுத்தப்படும் நிறுமம் துணைநிறுமம் ஆகும்.

**<u>கூடுதல் வினாக்கள்</u>**

1. **கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில் நிறுமத்தின் வகைகளை விளக்குக.**

( மார்ச் 2019 )

அ) <u>பட்டய நிறுமங்கள்</u>

- ❖ ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப் படுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

❖ வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும்.

ஆ) <u>சட்டமுறை நிறுமங்கள்</u>

❖ நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் எனப்படும்.

❖ அமைப்பு முறையேட்டில், அரசியல் சட்டத்தில் கூறியுள்ளவாறு, அமைப்பு முறையீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் அன்றாடம் நடைபெறும் மேலாண்மை நடவடிக்கைகளை, சங்கநடைமுறைவிதிகளில் உள்ளவாறு நடைபெறும்.

இ) <u>இலாபம் நோக்கம் இல்லாச் சங்கம்</u>

i) சங்கம் வரையறு பொறுப்பு என்ற நோக்கத்துடன் மட்டுமே வணிகத்தை மேம்படுத்தவும் / கலை, அறிவியல், மதம், கருணை அல்லது பயன்படத்தக்க நோக்கத்துடன் அமைக்கபட வேண்டும்.

ii) இலாப மீட்டலை நோக்கமாகக் கொண்டு செயல்பாட்டிருந்தால், அதன் இலாபத்தை அந்தநிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப் படவேண்டும்.

iii) அதன் உறுப்பினர்களுக்குப் பங்காதாயம் வழங்கக் கூடாது.

---

# <u>அத்தியாயம் 7. கூட்டுறவு அமைப்பு</u>

## <u>குறுவிடை வினாக்கள்</u>

1. **கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?**

❖ உறுப்பினர்களால், உறுப்பினர்களுக்காக தாங்களாகவே, இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பே கூட்டுறவு அமைப்பாகும்.

❖ இதில் லாபத்தைவிட, சேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

---

2. **கூட்டுறவு - வரையறு**

❖ H.கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி, "கூட்டுறவு சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு"

---

3. **கடன் கூட்டுறவு விளக்குக?**

❖ உறுப்பினர்களுக்கு குறுகிய கால கடன் வழங்குதலில், தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும்.

❖ வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றவர்களுக்கு, கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் செய்து வருகின்றன.

---

4. **கூட்டுறவு சங்கத்தில் குறைந்தவரி செலுத்த முடியுமா?**

❖ குறைந்த வரி செலுத்த முடியும்.

❖ எனெனில் அரசு, கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகிறது என்பதிலிருந்து, குறைந்த வரி செலுத்த முடியும் என்பது நமக்கு தெளிவாகிறது.

---

5. **இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?**

❖ இராபர்ட் ஓவன் என்பவர், முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில், 1844 ஆம் ஆண்டு 28 நெசவாளர் உறுப்பினர்களுடன் "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" (இராக்டேல் முன்னோடிகள் சங்கம்) என்ற பெயரில் தொடங்கினார்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவிடை வினாக்கள்

1. **கூட்டுறவுகளின் குறைபாடுகளை விவரி? ( எவையேனும் மூன்று )**

1) **அளவான நிதி ஆதாரங்கள்**

- உறுப்பினர்களின் பங்கு முதல், குறைவாக இருப்பதால், கூட்டுறவு சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி, பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடிவதில்லை.

2) **அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்**

- கூட்டுறவு சங்கங்கள், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களை பெருக்கி கொள்ள முடியாமல், அரசின் நிதி ஆதரவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளன.

3) **அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள்**

- மேற்கத்திய நாடுகளில் நிறுமங்கள், தானாக முன் வந்து துவக்கப்படுகின்றன.
- ஆனால், இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள், அரசின் வற்புறுத்தலால் துவக்கப் படுகின்றன.

4) **தன்னிச்சையாக செயல்பட முடியாமை**

- கூட்டுறவு சங்கங்கள், அரசின் பிடியில் அல்லது மேற்பார்வையில் இயங்கி வருவதனால், அரசின் கட்டுப்பாட்டு விதி முறைகள், குறுக்கீடுகள், சங்கங்களை தன்னிச்சையாக செயல்பட அனுமதிப்பதில்லை.

5) **நாணயமற்ற நிர்வாக உறுப்பினர்கள்**

- உறுப்பினர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருந்தால், சங்கங்களின் நிதியை கையாடல் செய்து, சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளி புதைக்கும் வாய்ப்பு உள்ளது.

6) **இரகசியம் காக்க முடியாமை**

- கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உறிபினர்கள் இருப்பதால், சங்கங்களின் செயல்பாடுகளை , உறுப்பினர்களுக்கு தெரிவித்து விவாதிக்க வேண்டிய கடமை உள்ளது.
- எனவே செய்திகளை இரகசியமாக வைத்திருத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

2. **வீட்டு வசதி கூட்டுறவு பற்றி சிறு குறிப்பு வரைக.**

- உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவுசங்கங்கள் என்ப்படுகின்றன.
- சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.
- இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆணடு கால தவனணயில், வீட்டு கடன் தந்து , அவர்களை சொந்த வீடு கட்டிக்கொள்ள உதவுகின்றன.

3. **தயாரிப்பாளர்கள் (உற்பத்தியாளர்) கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன?**

- உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது, உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகும்.
- இவ்வகை உற்பத்தி சங்கங்கள், செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி, ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **கூட்டுறவு உழவு சங்கம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை, தனித் தனியே பயிரிடுவதற்கு பதிலாக , அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம், கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும்.
- நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகளுக்கு வாடகையும் , கூட்டாக திரட்டிய நிலத்தில், உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள.
- இம்முறை ரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.

5. **தொழில் துறை கூட்டுறவு பற்றி சிறு குறிப்பு வரைக.**

- இந்த சங்கங்கள் சிறு தொழில் செய்யும் உற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது.
- கூட்டுறவு முறையில், சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைக்க இந்த சங்கம் மிகுந்த உதவி புரிகின்றது.

## பெருவிடை வினாக்கள்

1. **கூட்டுறவின் கொள்கைகள் என்ன? (ஏதேனும் 5)**

1) **தன்னார்வ மற்றும் உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு**
- கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும்.
- இதன் சேவைகளைப் பாலினம், சமூக, இன, அரசியல் அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்று பயன் அடையலாம்.

2) **மக்களாட்சி முறையில் உறுப்பினர் கட்டுபாடு**
- கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப் படுகிறது.
- உறுப்பினர்கள், கூட்டுறவின் சேவைகளைப் பயன் படுத்துவதிலும், கொள்கைகளை அமைப்பதிலும், முடிவுகளை எடுப்பதிலும் தீவிரமாக தங்களை ஈடுபடுத்தி கொள்கிறார்கள்.

3) **உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு**
- உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சமமாகவும், ஜனநாயக முறையிலும் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர்.

4) **கல்வி, பயிற்சி, மற்றும் தகவல்**
- உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள்.
- அவர்கள், கூட்டுறவுகளின் இயல்பு மற்றும் நன்மைகளைப் பறறி பொது மக்களுக்கு தெரிவிக்கின்றனர்.

5) **கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு**
- கூட்டுறவு உறுப்பினர்கள், தங்கள் உறுப்பினர்களை மிகவும் திறமையாகவும், உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றாக இணைந்து கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவும் செய்கின்றனர்.

6) **சமூகத்திற்கான கவலை**
- கூடட்டுறவில் உறுப்பினர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது, உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் சமூகங்களின் நிலையான அபிவிருத்திக்காக கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை?** ( ஜூன் 2019 , மார்ச் 2020 )

1) **தன்னார்வு நிறுமம்**
- ❖ கூட்டுறவு சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம்.
- ❖ தொகையும் மிகவும் குறைவாக இருப்பதனால், பொருளாதார ரீதியாக பின் தங்கியவர் முதல் முன்னேறியவர் வரை எவரும் உறுப்பினராக ஆகமுடியும்.

2) **எளிமையான தோற்றுவிப்பு**
- ❖ குறைந்தபட்சம் இளவர் அல்லாத 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டுறவு சங்கத்தினை ஆரம்பிக்கலாம்.
- ❖ சங்கத்தை ஆரம்பிக்க, சட்ட சடங்குகள் அதிகம் இல்லை.

3) **மக்களாட்சி**
- ❖ கூட்டுறவு சங்கங்கள் "ஒருநபர் ஒரு வாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் நிறுமமாகும்.
- ❖ உறுப்பினர் எவ்வளவு பங்கு வைத்திருந்தாலும், ஒருவாக்கு மட்டுமே அவரால் செலுத்தமுடியும்.

4) **வரிச்சலுகை**
- ❖ அரசும், கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது.

5) **சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்**
- ❖ கூட்டுறவு சங்கங்கள் ஈட்டும் உபரி, சமத்துவமாக அனைவர்க்கும் பங்கிட்டு தரப்படுகிறது.
- ❖ இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறுவர்.

6) **வரையறுக்கப்பட்ட பொறுப்பு**
- ❖ கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த நபர்களின் பொறுப்புகள் அவர்கள் வாங்கிய பங்கு முதலுடன் அடங்கி விடுகிறது.
- ❖ எனவே உறுப்பினர்களின் பொறுப்பு அளவுடையது.

---

3. **கூட்டுறவு சங்கத்தின் வகைகளை கூறுக?**

( சிறுவிடை வினாக்களிலுள்ள வினா எண் 2,3,4,5 மற்றும் கீழேயுள்ள வினாவினையும் சேர்த்து படித்துக் கொள்ளவும் )

---

4. **நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தை பற்றி சிறு குறிப்பு வரைக.**
- ❖ இது நுகர்வோர்களால் ஆரம்பிக்கப் படுகின்றது.
- ❖ இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களை இலாப ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாக கொள்ளாமல், மக்களுக்கு தரமான பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை நோக்கமாக கொண்டு இயங்கி வருகின்றன.
- ❖ கூட்டுறவு சிறப்பங்காடி, மாணவர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம் ஆகும்.

---

5. **கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாக பயன்படுத்த முடியுமா? ஆம் எனில் அதற்கான காரணங்களை கூறுக.**
- ❖ நிச்சயமாக கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாக பயன்படுத்த முடியும்.
- ❖ எப்படியெனில், நிர்வாக குழுவில் இருப்பவர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருக்க நேர்ந்தால், சங்கங்களின் நிதியை கையாடல் செய்து, சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளி புதைக்கும் வாய்ப்பு நிறையவே உள்ளது.

# அத்தியாயம் 8. பன்னாட்டு நிறுமங்கள்

## குறுவிடை வினாக்கள்

1. **பன்னாட்டு நிறுவனம் - இலக்கணம் வரைக.**
   - நைல். H. ஜேகோபி அவர்களின் கூற்றுப்படி,
     "பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்."

2. **பன்னாட்டு நிறுவனத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை விவரி.**

   1) <u>குறைந்தபட்சக் கூலி</u>
      - குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும் சேவைகளையும் வழங்க முடிகிறது.

   2) <u>தரமான பொருட்கள்</u>
      - வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

   3) <u>வாழ்க்கைத் தரம் உயர்கின்றது</u>
      - பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

3. **பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**
   1. பாட்டா
   2. கோல்கேட் பாமொலிவ்
   3. சோனி கார்ப்பரேசன்
   4. சுசூகி
   5. டைமெக்ஸ்

4. **ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டில் தொழில் நடத்திக்கொண்டிருக்கும் சில பன்னாட்டு நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிடவும்.**

   1. பாட்டா --- பாட்டா இந்தியா
   2. கோல்கேட் பாமொலிவ் --- கோல்கேட் இந்தியா
   3. சோனி கார்ப்பரேசன் --- சோனி இந்தியா
   4. சுசூகி --- மாருதி சுசூகி
   5. டைமெக்ஸ் --- டைமெக்ஸ் வாட்ச்

## சிறுவிடை வினாக்கள்

1. **பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை விவரி.**

   1) <u>குறைந்தபட்சக் கூலி</u>
      - குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும் சேவைகளையும் வழங்க முடிகிறது.

   2) <u>தரமான பொருட்கள்</u>
      - வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3) **வாழ்க்கைத் தரம் உயர்கின்றது**
- ❖ பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது

4) **பயன் படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்**
- ❖ இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும் , பயனற்ற சொத்துகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால், நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

5) **நாட்டின் செலாவணி செலுத்துநிலை வளர்ச்சி**
- ❖ இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன.
- ❖ இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

---

2. **பன்னாட்டு நிறுவனத்தின் தீமைகளை விவரி.**

1) **உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்**
- ❖ இதன் மிகப் பெரிய பொருதளாரசச் சக்தி, உள்நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்துகிறது.
- ❖ பல உள்நாட்டு நிறுவனங்கள், இவைகளால் அழிக்கப்படுகின்றன.

2) **வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை மாற்றுதல்**
- ❖ வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை, வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம், நாடுகளில் தொழில் முன்னேற்றம் ஏற்படுவது இல்லை

3) **ஏழை மக்களுக்கு நன்மையில்லை**
- ❖ பணக்காரர்களால் மட்டுமே இந்நிறுவனங்களின் பொருட்களை வாங்க முடியும்.
- ❖ ஏழை மக்களுக்கு , இந்நிறுவனங்களால் எப்பயனும் இல்லை.

4) **உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு**
- ❖ உள்நாட்டு மக்களுக்காகக் கணிசமான அளவில் வேலை வாய்ப்பினை, பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கி தருவது இல்லை.

5) **உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு**
- ❖ உள்நாட்டு முதலீட்டினால், பன்னாட்டு நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டினாலும், உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை இவை புறக்கணிக்கின்றன.

---

## அத்தியாயம் 9. அரசு அமைப்புகள்

### குறுவிடை வினாக்கள்

1. **பல்வேறு வகையான பொதுத்துறை நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1) துறைவாரி நிறுவனங்கள் 2) சட்டமுறை நிறுவனங்கள் 3) அரசு நிறுமங்கள்

---

2. **துறைவாரி அமைப்புகளின் தன்மைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

1) **இறுதியான பொறுப்புகள்**
- ❖ துறைவாரி நிறுவனங்களின் பொறுப்பு , அத்துறையின் அமைச்சகத்துடன் தொடர்புடையது.

2) **அரசின் நிதியுதவி**
- ❖ பாராளுமன்றம் அல்லது சட்டசபையின் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் படி, நிதியுதவி கிடைக்கிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3) **மேலாண்மை**

- ❖ இதனை அரசு அலுவலர்களே மேலாண்மைசெய்கின்றனர்.

4) **சட்டவிலக்களிப்பு**

- ❖ அரசின் ஒப்புதலின்றி, இந்நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க இயலாது.

3. **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.**

அ. தனியார் துறை நிறுவனங்கள்

1. ரிலையன்ஸ் நிறுவனம் 2. இந்தியன் ஆயில் நிறுவனம்
3. டிசிஎஸ் நிறுவனம் ( டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ) 4. விப்ரோ நிறுவனம்
5. சத்யம் கம்பியூட்டர் பிரைவேட் லிமிடெட்.

ஆ. பன்னாட்டு நிறுவனங்கள்

1. பிலிப்ஸ் 2. கோகோ கோலா கழகம் 3. யூனிலீவர் லிமிடெட்

இ. பொதுத்துறை நிறுவனங்கள்

1. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் 2. இந்தியன் ஏர்லைன்ஸ் 3. ஏர் இந்தியா
4. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம். 5. இந்திய உணவுக்கழகம்

4. **தேசிய பாதுகாப்பு திட்டத்திற்கு பொருத்தமான பொதுத்துறை நிறுவனத்தின் பெயரை குறிப்பிடுக.**

1. அணுசக்தி தொழிற்சாலை 2. போர்கருவிகள் உற்பத்தி தொழிற்சாலை 3. எரிவாயு
4. பாதுகாப்பு தொழிற்சாலை

5. **2001 - ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தின் படி, பொதுத்துறைக்கு சில தொழில்கள் மட்டடுமே ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த தொழில்களின் பெயர்களை குறிப்பிடுக.**

1. தாதுப்பொருள் உற்பத்தி தொழிற்சாலை 2. கைவினைப் உற்பத்தி தொழிற்சாலை
2. சுற்றுலா வளர்ச்சி தொழில்கள்

## சிறுவிடை வினாக்கள்

1. **மத்திய அல்லது மாநில அரசுகள் எந்தந்த பகுதிகளில் தொழில் தொடங்கலாம். அவ்வாறு தொடங்கினால், நீங்கள் எந்தப் பகுதியை முன்மொழிவீர்கள்.**

- ❖ எங்கள் ஊரிலும்,
- ❖ தனியார் துறை ஏற்க அஞ்சும் தொழில்கள் நிறைந்தப் பகுதியிலும்,
- ❖ எந்தவித வசதியும் இல்லாமல், முன்னேற்றம் அடையாமல் உள்ள பின்தங்கிய மக்கள் வாழும் பகுதிகளில் தொழில் தொடங்க, நான் முன்மொழிவேன்.

( மேற்கண்ட மூன்று பதில்களில், ஏதேனும் ஒன்றை எழுதவும் --- "எந்தந்த **பகுதிகளை** முன்மொழிவீர்கள்" என கேட்க்கப்பட்டால், மேற்கண்ட பதில்கள் அனைத்தையும் எழுதவும் )

2. **பொதுத் துறையின் கீழ்வரும் பல்வேறு வகையான அமைப்புகள் என்னென்ன?**

1. துறைவாரி அமைப்பு 2. பொதுக்கழகம் / பொதுத்துறை 3. அரசு நிறுமம்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **பொதுத்துறையின் கீழ்வரும் சில நிறுவனங்களின் பெயர்களை பட்டியலிடவும். அவற்றை வகைப்படுத்தவும்.**

i) தபால் தந்தி --- துறைவாரி அமைப்பு
ii) இந்திய ரிசர்வ் வங்கி --- சட்டமுறை நிறுமம்
iii) இந்தியன் ஏர்லைன்ஸ் --- பொதுக்கழகம்
iv) தமிழ்நாடு போக்குவரத்து கழகம் --- அரசுநிறுமம்

4. **துறைவாரி நிறுவனம் - இலக்கணம் வரைக.**
- ❖ அரசுத் தொழில்களின் வடிவமைப்புகளில், இது மிகவும் தொன்மையானதாகும்
- ❖ பொது நிறுவனங்களுக்கும், அரசுக்கும் இன்றைய சூழ்நிலையில் அதன் பணிகளில் வேறுபாடு இருப்பதில்லை.
- ❖ தொடக்க காலத்தில் நிறுவப்பட்ட பெரும்பாலான அரசுரிமை நிறுவனங்கள் அனைத்தும் துறைவாரி அமைப்புக்குச் சான்றுகளாகும்.
- ❖ இத்துறைவாரி அமைப்புகள், அத்துறையின் உட்பிரிவாகவும் ,அத்துறையின் முழு கட்டுப்பாட்டிலும் இயங்கக் கூடியதாகும்.

5. **அரசு நிறுமம் என்றால் என்ன? ( செப் 2020 )**
- ❖ 2013 ஆம் ஆண்டு நிறுமச்சட்டம் பிரிவு 2(45) ன் கீழ் அரசு நிறும்ம் என்பது, மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 விழுக்காட்டுக்கு மேல் மைய அரசோ, ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில அரசுகளோ அல்லது மைய அரசும் ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகளுமோ வைத்திருப்பின் அந்நிறுவனம் அரசு நிறுமம் ஆகும்.

( அத்தியாயம் 6 - ல் படித்ததைக்கூட எழுதலாம் )

## பெருவிடை வினாக்கள்

1. **துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி.**

**நன்மைகள்**

1) **எளிமையான அமைப்பு**
- ❖ இதனை அமைப்பது எளிது.
- ❖ இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

2) **பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு**
- ❖ இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும்.
- ❖ அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

3) **இரகசியம் காத்தல்**
- ❖ பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்கவேண்டும்.
- ❖ அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள், தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

4) **பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு**
- ❖ இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால், பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5) **<u>சமூக மாற்றத்திற்கான கருவி</u>**

- ❖ அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை, அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும்.
- ❖ ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த, துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

## தீமைகள்

1) **<u>தாமதமும், சிகப்பு நாடா போக்கும்</u>**

- ❖ அரசின் நடைமுறைகளையும் மரபுகளையும் பின்பற்றுவதும், காலதாமதமும், இதனுடைய மிகப் பெரிய குறைபாடாகும்.
- ❖ வணிக நிறுவனங்கள், காலதாமத முடிவு எடுப்பது ஏற்புடையது அல்ல.

2) **<u>கூடுதல் வரிச்சுமை</u>**

- ❖ துறைவாரி நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட, பொதுமக்கள் மீது மேலும் வரியை சுமத்தப்டுகிறது.

3) **<u>போட்டியின்மை</u>**

- ❖ இதில் பணியாற்றும் அரசு அலுவலர்கள், நுகர் வோரின் விருப்பத்தையும் அல்லது தேவையையும் அறிந்து கொள்ளாமல், தங்களது குறுகிய அனுபவத்தின் மூலம் வழிநடத்தி, இந்நிறுமங்களளின் செயல்திறனை குறைக்கின்றனர்.

4) **<u>பணியில் சராசரி அணுகுமுறை</u>**

- ❖ அரசு அலுவலர்கள், தங்களது பணியில் சராசரி அணுகுமுறை போன்றே, இந்நிறுவன பணியிலும் ஈடுபடுகிறார்கள்.
- ❖ அதனால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகிற திறமை இல்லாமல் போகிறது.

5) **<u>அரசின் தலையீடு</u>**

- ❖ இந் நிறுவனங்களின் மீது, அளவுக்கதிகமான கட்டுப்பாடு மற்றும் விதிகளை அரசு சுமத்துகிறது
- ❖ மேலும், தன்னாட்ச்சியுடன் பணியாற்ற விடுவதில்லை.
- ❖ இதனால் மந்தப் போக்கு ஏற்பட்டு, செயல் திறன் பாதிக்கப் படுகிறது.

---

2. **பொதுத்துறை நிறுவனங்களின் சிறப்பியல்புகள் யாவை?** (ஏதேனும் ஐந்து மட்டும்)

1) **<u>தனித்தியங்கும் சட்டத் தன்மை</u>**

- ❖ இது மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப் படுகிறது.

2) **<u>நீடித்த நிலைத்தன்மை</u>**

- ❖ பொது முத்திரையுடன் நீடித்த நிலைத்த தன்மையுடன் சட்டபூர்வமாக செயல்படும்.
- ❖ அரசுடன் தொடர்புடையது மட்டும் அல்லாமல், தனித்து இயங்கக் கூடியது

3) **<u>அரசின் முதலீடு</u>**

- ❖ தனக்குத் தேவையான முதல் முழுவதையும், அரசிடமிருந்து பெறுகிறது.
- ❖ எனினும், முதலீட்டுச் சந்தையிலிருந்தும், மூலதனத்தைத் திரட்டுகின்றன.

4) **<u>நிதி தன்னாட்சியுரிமை</u>**

- ❖ பொதுக்கழகங்கள் நிதி தன்னாட்சி பெற்றவை
- ❖ தனக்கான வரவு செலவுத் திட்டத்தை தானே தயாரித்துக் கொள்ளவும், அதற்கான அதிகாரம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வியாபாரத்தில், அந்த நிதியை பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றவையாகும்.

5) **<u>இயக்குனரவையால் நிர்வாகம்</u>**

- ❖ அரசால் பரிந்துரைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட இயக்குனரவைக்கு மேலாண்மை செய்யும் அதிகாரம் உண்டு.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ஆனால், கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை.

6) **பணியாளர்கள் நியமனம்**
   - தனக்குத் தேவையான பணியாளர்களை, தானே நியமனம் செய்து கொள்ளவும், ஊதியம், பணித்தன்மை ஆகியவற்றை கழகங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

---

3. **அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)** ( ஜூன் 2019 )

1) **நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்**
   - 1956 ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழோ அல்லது முந்தைய நிறுமச் சட்டங்களின் கீழோ பதிவு செய்திருக்க வேண்டும்.
   - மைய அரசு நேரடியாக, நிறுமச்சட்டத்தின் விதிகளின் கீழ், அரசு நிறுமங்கள் அறிவிப்பு ஆணையை வெளியிடுகின்றன.
2) **அரசின் நிர்வாக முடிவு**
   - பாராளுமன்றமோ அல்லது சட்டசபையின் அங்கீகாரம் இல்லாமலோ அரசு நிறுமத்தை அரசாங்கம் நிர்வாக முடிவின் கீழ் அமைக்கலாம்.
3) **நீடித்த நிலைத்த தன்மை**
   - இது தனித்த சட்டபூர்வ தன்மையுடைய அமைப்பாகும்.
   - தனது சொந்த பெயரால் சொத்துக்களை வாங்கவும் உடன்படிக்கை ஏற்ப்படுத்தவும் முடியும்.
4) **முழுவதும் அல்லது பெரும்பான்மையான மூலதனத்தை அரசு வழங்குகிறது**
   - அரசு நிறுமத்திற்கு தேவையான மூலதனத்தை குறைந்தபட்சம் 51% முழுவதுமோ அ ல்லது பெரும்பான்மையோ அரசே வழங்குகிறது.
5) **பெரும்பான்மையான அரசு இயக்குநர்கள்**
   - அரசாங்கமே பெரும்பான்மையான மூலதனத்தை வழங்குவதால் இயக்குனர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது.

---

4. **பொதுக் கழகத்தின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி.**

**நன்மைகள்:**

1) **தன்னாட்சியுரிமை**
   - அரசின் கட்டுப்பாடு இல்லாமல், தன்னீட்சியாக இயங்குகிறது.
   - வியாபார சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், அதன் நன்மைக்களுக்காகவும், திறந்தமனதுடன் முடிவு எடுக்கின்றது.
2) **சட்ட அமைப்புகளின் கட்டுப்பாடு**
   - பாராளுமன்றம் அல்லது சட்டசபை அமைப்புகளின் குழுக் கட்டுப்பாடு மூலம் கட்டுப்படுத்துகிறது.
   - இதன் செயல்பாடுகள், அதன் நன்மைக்கு எதிராக இருந்தால், அதைச் சுட்டிக் காட்டவும் செய்கிறது.
3) **தயார் நிலை**
   - இவை சிறப்புச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால் , அதன் தேவைகளையும், நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்கின்றன.
4) **அரசின் தலையீடின்மை**
   - அரசியல் தலையீடுகளால் பொதுக்கழகத்திற்கு, எவ்வித பாதிப்பும் ஏற்படுவது இல்லை.
   - இதன் கொள்கைகளும் செயல்பாடுகளும் தொடர்ந்து நடைபெறும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5) <u>குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு</u>

- பொதுக் கழகத்தின் இயக்குநரவையில், சமுதாயத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள், நுகர்வோர்கள், சமுதாய நல விரும்பிகள் ஆகியோரை, அரசு தேர்ந்தெடுத்து இருப்பதால், சுரண்டல் மற்றும் ஊழல் ஆகியவை இருப்பது இல்லை.

## <u>தீமைகள்</u>:

1) <u>தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை</u>

- தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை என்பது, ஏட்டளவில் மட்டுமே உள்ளது.
- துறை அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மூலம் அதிகளவில் இடையூறு ஏற்படுகிறது.

2) <u>நெகிழ்வு தன்மையற்ற அரசியலமைப்பு</u>

- இதனை உருவாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகள் நெகிழ்வுத்தன்மை அயற்றவை.
- எவ்விதத்திலும் மாற்றக்கூடியது அல்ல.

3) <u>குறைவான மேலாண்மைத் திறமை</u>

- இதன் மேலாண்மை இயக்குநர்கள் பெரிய அளவில், மேலாண்மை அறிவு பெற்றவர்களாகவோ, திறமைசாலிகளாகவோ இருப்பதில்லை.
- தனியார் நிறுவனங்களின் பணியாளர்களின் மேலாண்மைத் திறமைக்கு, பொதுக் கழகத்தின் அலுவலர்கள் ஈடானவர்கள் அல்ல.

4) <u>சிறப்புச் சட்டம் இயற்றுவதில் சிக்கல்</u>

- சிறப்புச் சட்டங்களால் மட்டுமே இதனை உருவாக்க முடியும்.
- இதனை உருவாக்கும் சட்ட நடைமுறைகள் சிக்கலானவை.

5) <u>முரண்பாடுகள்</u>

- இதன் இயக்குனரவை உறுப்பினர்களின், பல்வேறு குழுக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் உருவாகின்றன.
- இதனால் பொதுக்கழகங்களின் செயல்திறன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

---

5. துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?

1) <u>இறுதியான பொறுப்புகள்</u>

- துறைவாரி நிறுவனங்களின் பொறுப்பு என்பது அத்துறையின் அமைச்சகத்துடன் தொடர்புடையது.
- துறைவாரி நிறுவனங்களுக்கு அத்துறையின் அமைச்சரிடமிருந்து, அதிகாரம் கீழ்நோக்கியவாறு அதிகாரிகளுக்கு செல்கின்றது.

2) <u>அரசின் நிதியுதவி</u>

- பாராளுமன்றம் அல்லது சட்டசபையின் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் படி நிதியுதவி கிடைக்கிறது.
- அரசின் கருவூலத்திடமிருந்து, நிறுவனங்களுக்கு வருவாய் செல்கிறது.

3) <u>கணக்கியலும் தணிக்கையும்</u>

- சாதாரண வரவு செலவுத் திட்டமிடல், கணக்கியல் மற்றும் தணிக்கை நடைமுறைகள், அரசின் அனைத்து துறைகளுக்கும் பொருந்தும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4) **மேலாண்மை**

- இதனை அரசு அலுவலர்களே மேலாண்மை செய்கின்றனர்.
- அரசு அலுவலர்களுக்கு பணிச்சூழல் எவ்வாறு உள்ளதோ, அது போலவே இங்கும் நிலவுகிறது.

5) **சட்ட விலக்களிப்பு**

- அரசின் ஒப்புதல் இன்றி, இந்நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாது.

# அலகு - 3 சேவைத் தொழில்கள் I

## அத்தியாயம் 10. இந்திய ரிசர்வ் வங்கி

### குறுவிடை வினாக்கள்

1. **சேவைத் தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**
   - கல்வி, மருத்துவம், சுகாதாரம் வங்கியியல், போக்குவரத்து

2. **வங்கியின் பொருளை எழுதுக.**
   - 1949 ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் படி, "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ, கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொது மக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல்" எனப்படும்.

3. **மைய வங்கி பற்றி சுருக்கமாக விளக்குக.**
   - ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கிக் கட்டமைப்பின், உச்ச நிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும், சிறந்த முறையில் செயல்படும் வங்கி, அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்.
   - மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
   - இந்தியாவில் , இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of Inda - RBI) மைய வங்கியாகச் செயல்படுகிறது.

### சிறுவிடை வினாக்கள்

1. **வங்கி சேவைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**
   - ஒரு நாட்டின் வர்த்தகம், வாணிகம் மற்றும் தொழில்களின் நரம்பு மண்டலமாக வங்கி கருதப்படுகிறது.
   - இது நாட்டின் வழக்கமான செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக்கான பணத் தேவைகளைச் சந்திப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

2. **இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றி கூறுக.**
   - இம்பீரியல் பாங் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது.
   - 1926 ஆம் ஆண்டில், ஹில்டன் - யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் ஒரு மைய வங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- அதன் விளைவாக, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 இல் உருவாக்கப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ரூ.5 கோடி மூலதனம் ரூபாய். 100 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது.
- அதன் தலைமை அலுவலகம், கொல்கத்தாவில் இருந்தது பின்னர் 1937 இல் மும்பைக்கு மாற்றப்பட்டது.

3. **இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?**

1) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலைஆளுநர்கள், நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்,
2) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குனர்கள்,
3) இரண்டு அரசு அதிகாரிகள்
4) நான்கு இயக்குநர்கள் ( வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

## பெருவிடை வினாக்கள் :

1. **இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு செயல்பாடுகளை விரிவாக வகைப்படுத்துக.**

1) **தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள்**
   1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்
   2. பணவியல் உச்ச நிலை அதிகாரி
   3. பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்
   4. புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது

2) **பாரம்பரிய பணிகள்**
   1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராகச் செயல்படுதல்
   2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை
   3. வங்கியர்களின் வங்கியர்
   4. கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்
   5. இறுதி நிலை கடன் ஈவோர்
   6. தீர்வக அமைப்புச் சேவைகள்
   7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்
   8. அந்நிய செலாவணி விகித்தின் பராமரிப்பு
   9. நம்பகத் தன்மையுள்ள தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளியீடு

3) **மேம்பாட்டுப் பணிகள்**
   1. பொது மக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது
   2. குறை தீர்வு வடிக்கைகள்
   3. வேளாண்மை வளர்ச்சி
   4. சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
   5. வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்
   6. கூட்டுறவு துறையினை ஆதரித்தல்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.**

- இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு முதல் 33 துறைகளை கொண்டுள்ளது.
- மும்பை, தில்லி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்கள் துணைநிலை ஆளுநர்களின் தலைமையில் செயல்படும் வட்டார வாரியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.
- 19 பிராந்திய அலுவலகங்களும், 11 துணை அலுவலகங்களும் இதன் கீழ் செயல்படுகின்றன (2017)
- இதனுடைய மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
- இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

அதில் உள்ளவர்கள் பின்வருமாறு,

i) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலைஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்,

ii) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குனர்கள்

iii) இரண்டு அரசு அதிகாரிகள்

iv) நான்கு இயக்குநர்கள் ( வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர் )

---

## கூடுதல் வினாக்கள்

1. **இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமை மற்றும் மேற்பார்வை பணிகளை விவரிக்கவும் ( மார்ச் 2020 )**

1) உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி

- சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது , வங்கியியல் மேற்பார்வை பேசல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது.
- பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் (IMF) டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக, இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

2) இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்

- நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த, விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கி வருகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது.
- எந்தவணிக வங்கியையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

3) பணவியல் உச்ச நிலை அதிகாரி

- விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி நிர்மாணிக்கிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கி கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

4) <u>பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்</u>

- பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்களான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தகச் சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித் தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

5) <u>புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது</u>

- இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக ,எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது.
- ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

# <u>அத்தியாயம் 11. வங்கிகளின் வகைகள்</u>

## <u>குறுவிடை வினாக்கள்</u>

1. **வணிக வங்கிகளின் பொருள் தருக.**

- பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும்,
- விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.
- பணத்தை அனுப்புதல், பெட்டக வசதி அளித்தல், காசோலைகளுக்குப் பணம் வழங்குதல், போன்ற இதர சேவைகளையும் அவைகள் வழங்குகின்றன.

2. **தொழிற்துறை வங்கிகளைப் பற்றி நீவீர் அறிவது யாது?**

- தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது,
- அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும்.
- மேலும் அவை தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- இந்தியத் தொழில் வளர்ச்சி (IDBI) வங்கியானது 1964 இல், தலைமை வளர்ச்சி வங்கியாக நிறுவப்பட்டது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **வணிக வங்கி தொடர்பாளர் பற்றி சுருக்கமாக விளக்குக.**

- ❖ குறைந்தபட்சச் செலவில் வங்கியியல் சேவைகளை வழங்கிட, வங்கிகள் சில்லறை முகவர்களைப் பணியமர்த்துகிறார்கள்.
- ❖ அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றோர் வங்கி தொடர்பாளர்களாக விண்ணப்பிக்க முடியும்.
- ❖ வங்கி தொடர்பாளர்களை ஈடுபடுத்தும் வங்கிகள் அவர்களின் செயல்பாட்டிற்குத் தாங்களே பொறுப்பு ஏற்கவேண்டும்.
- ❖ ஒரு நாட்டிலுள்ள ஒரு வங்கி, வெளிநாட்டில் உள்ள மற்றொரு வங்கியை, வங்கி தொடர்பாளராக (நியமனவங்கியாக) செயல்படுத்த முடியும்.

4. **வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- ❖ வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

## சிறுவிடை வினாக்கள்

1. **உள்ளூர் பகுதி வங்கிகள் பற்றி சிறு குறிப்பு வரைக, இரணடு உதாரணங்களைத் தருக.**

- ❖ உள்ளூர் பகுதி வங்கி (LAB) திட்டம் ஆகஸ்ட்1996 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ கிராமப்புற மற்றும் சிறு நகர்ப்புறப் பகுதிகளில், சிறிய தனியார் வங்கிகளாக உள்ளூர் பகுதி வங்கிகள் அமைக்கப்படுகின்றன.
- ❖ ஒவ்வொரு வங்கியும் அருகில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களை இணைத்துச் சேவை செய்கின்றது.
- ❖ கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதும், அதே பகுதியில் முதலீடு செய்வதும் அவற்றின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.
- ❖ உதாரணம் :
  - i) கரையோர உள்ளூர் பகுதி வங்கி, விஜயவாடா, ஆந்திரப் பிரதேசம்.
  - ii) கிருஷ்ணாபீமா ஸ்ம்ருதி உள்ளூர் பகுதி வங்கி, மஹபூப்நகர், ஆந்திரப் பிரதேசம் மற்றும்
  - iii) சுபத்ரா உள்ளூர் வங்கி லிமிடெட், கோல்பூர், மகாராஷ்டிரா.

2. **வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?** ( ஜூன் 2019 )

- ❖ கூட்டுறவு சங்கங்களோடு சேர்ந்து, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும்.
- ❖ கிராமப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி, கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோருக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது.
- ❖ கிராமியக் கடன் வழங்குபவர்களைச் சார்ந்து, பொதுமக்கள் வாழும் நிலையைத் தடுக்க முயற்சி செய்கிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **விவசாய மற்றும் கூட்டுறவு வங்கிகளின் பயன்களைக் குறிப்பிடுக.**

- ❖ உறுப்பினர்களுக்கான சேவையைக் கிராமப்புற மற்றும் விவசாய வளர்ச்சிக்காக வழங்குவது கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் ஆகும்.
- ❖ கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியளிப்பதற்காக, மாநில அரசாங்கங்களுக்கு நிதிகள் மற்றும் மானியங்களை வழங்குகிறது.
- ❖ நீர்ப்பாசனச் சேமிப்பு, நீர்ப்பாசன முறை, வேளாண்மை காப்பீடு, கிராமப்புறத் துப்புரவு போன்றதிட்டங்களில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (NCDC) கவனம் செலுத்துகிறது.

## பெருவிடை வினாக்கள்

1. **பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக.**

1) **மத்திய வங்கி**

- ❖ ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கிக் கட்டமைப்பின், உச்ச நிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும், சிறந்த முறையில் செயல்படும் வங்கி, அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்.
- ❖ மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
- ❖ இந்தியாவில் , இந்திய ரிசர்வ்வங்கி (Reserve Bank of Inda - RBI) மைய வங்கியாகச் செயல்படுகிறது.

2) **வணிக வங்கிகள்**

- ❖ இவ்வகைவங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும்,
- ❖ விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.

**எ.கா** :

1. ஸ்டேட்பாங்ஆப் இந்தியா 2. கரூர் வைஸ்யா வங்கி
3. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.

3) **வளர்ச்சி வங்கிகள்**

- ❖ தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது,
- ❖ அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும்.
- ❖ மேலும் அவை தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

**எ.கா**:

I. இந்தியத் தொழில் நிதிக் கழகம் - IFCI
II. இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி - SIDBI
III. முத்ரா வங்கி (குறுந்தொழில் வளர்ச்சிக்காக)

4) **வெளிநாட்டு வங்கிகள்**

- ❖ வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- **ஏ.கா**
  1. பாங்க் ஆஃப் அமெரிக்கா - அமெரிக்கா
  2. பார்க்லேஸ் பாங்க் - இங்கிலாந்து
  3. டியுட்செபாங்க் - மேற்கு ஜெர்மனி

5) **கூட்டுறவு வங்கிகள்**

- இந்தியாவில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள், சிறிய வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சொந்தமானது.
- இந்தியக் கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களை அல்லது கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டவை.
- **ஏ. கா :**
  - I. தேசிய வேளாண்கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட்.
  - II. தமிழ்நாடு மாநிலத் தலைமைகூட்டுறவு வங்கி - தலைமைஅலுவலகம், சென்னை
  - III. மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்
  - IV. வத்தலகுண்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட், திண்டுக்கல் மாவட்டம்

6) **சிறப்பு வங்கிகள்**

- அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காகச் சில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன.
- இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கிச் சட்டம் 1981 இன் படி இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி உருவாக்கப்பட்டது.
- அதன் முக்கிய நோக்கம், இந்திய வணிகர்களின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவது ஆகும்.
- **ஏ.கா** :
  - I. இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (EXIM வங்கி)
  - II. தேசிய வீட்டு வசதி வங்கி (NHB)

2. **உரிமையாளர்கள்முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.**

1) **அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள்**

- எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 சதவிகிதத்திற்கும் குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால், அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**ஏ.கா :**

1. பாரத ஸ்டேட் வங்கி (SBI) 2. இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI)

2) **பொதுக் கூட்டுரு வகை வங்கிகள்**:

- ஒவ்வொரு பொதுக் கூட்டுரு வங்கியும், பாராளுமன்றத்தின் தனிச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமானதாக உள்ளன.

**ஏ.கா** : IFCI, SIDBI, EXIM வங்கி

3) **தனியார் துறை வணிக வங்கிகள்** :

- தனி நபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
- அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும், அதன் உறுப்பினர்களான பொதுமக்களுக்குச் சொந்தமானவை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## அத்தியாயம் 12. வனிக வங்கிகளின் பணிகள்

### குறு வினாக்கள்

**1. கைபேசி வங்கியியல் பற்றிக் கூறுக.**

- பெரும்பாலான வணிக வங்கிகள்,சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக்கூடிய கணினி நிரல்களை அதாவது செயலிகள் (App) என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன.
- சுட்டிகை கைபேசிகளில் இருக்கும் இந்தப் பயன்பாட்டைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்கமுடியும்.
- இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியியல் என்று அழைக்கின்றோம்.

**2. பற்று அட்டையின் தேவையைக் குறுகிய அளவில் விளக்குக.**

- தானியங்கி பணம் வழங்கும் அட்டையே (ATM Card) பற்று அட்டை (Debit Card) என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது.

**3. கடன் அட்டை - என்ற பதத்தினைச் சுருக்கமாக விளக்குக.** ( செப் 2020 )

- வாடிக்கையாளர்கள் மற்றும் பிற தகுதியுள்ள நபர்களுக்குக் கடன் அட்டைகளை வங்கிகள், வழங்குகின்றன.
- இந்த அட்டைமூலம், இந்தியாவில் எந்தக் கடையிலும் பொருள்கள் மற்றும் சேவைகளை முன்பணம் செலுத்தாமல் கடனாக வாங்கமுடியும்.
- கொடுக்கப்பட்ட காலத்திற்குள் கடன் நிலுவைத் தொகையைச் செலுத்திவிட்டால் வட்டி விதிக்கப்படுவதில்லை.

**4. தானியங்கி பணம் வழங்கும் அட்டைப் பற்றி நீவீர் அறிவது யாது?**

- தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்கமுடியும்.
- இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது.

**5. மின்னனு தீர்வகச் சேவைகள் (Electronic Clearing System) பற்றி ஒரு குறிப்பு எழுதுக.**

- 1995 இல் ரிசர்வ் வங்கியால் மின்னனு தீர்வக சேவைகள் தொடங்கப்பட்டது.
- இது, ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு நிதி பரிமாற்றம் செய்யப்பயன்படும் ஒரு வகை மின்னனு முறையாகும்.
- "ECS - வரவு" முறையானது சம்பளம், பங்காதாயம், வட்டி, ஓய்வூதியம் போன்றவற்றை அனுப்புவதற்குப் பயன்படுகின்றது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறு வினாக்கள்

1. **மின்னணு வங்கியியல் என்றால் என்ன?**
   - ❖ தற்போது அனைத்து வங்கிகளும், வங்கி பரிவர்த்தனைக்கான நேரம் மற்றும் செலவைக் குறைத்து, வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குவதையே மின்னனு வங்கியல் எனப்படுகிறது.

2. **உண்மைநேர மொத்தத் தீர்வக அமைப்பு பற்றி ஒரு குறுகிய குறிப்பு எழுதுக.**

   **( RTGS - Real Time Gross Settlement System)**
   - ❖ இது 2013 இல், இந்திய ரிசர்வ்வங்கியால் தொடங்கப்பட்டது.
   - ❖ பரிவர்த்தனைகள் உண்மையான நேரத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன.
   - ❖ மற்ற எந்த நடவடிக்கைகளையும் தொகுக்காமல் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் இடையே, ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தீர்வு காணப்படுகிறது.
   - ❖ RTGS வசதி வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் 2.00 மணி வரையும் கிடைக்கின்றன.
   - ❖ RTGS பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை.
   - ❖ RTGS பரிவர்த்தனைக்கான குறைந்தபட்ச வரம்பு ரூபாய்.2 லட்சம் ஆகும்.

3. **வணிக வங்கிகளின் பலதரப்பட்ட வங்கி சேவைகளைச் சுருக்கமாக விளக்குக.**
   - * ஒரு வங்கியின் முதன்மைப் செயல்பாடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை :
     - i. வைப்புகளை ஏற்றல்
     - ii. கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்.
     - iii. கடனை உருவாக்குதல்

### I .வைப்புகளை ஏற்றல்

- ❖ இன்றைய தினம் வங்கிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களைக் கவர்ந்து ஈர்ப்பதற்காகக் கூடுதல் வசதிகளை, வைப்புக் கணக்குகளுக்கு வழங்குகின்றன. பெரிய அளவிலான வைப்பு கணக்குகளை

  **அ. கேட்பு வைப்புகள் ஆ. கால வைப்புகளாக வகைப்படுத்தலாம்**

### அ. கேட்பு வைப்புகள்:

- ❖ இந்த வைப்புகள் எந்த நாளிலும் கேட்கும் போது திருப்பி அளிக்கப்படவேண்டும். இது,

  **1. சேமிப்பு வைப்புகள் மற்றும் 2. நடப்பு வைப்புகளைக் உள்ளடக்கியது**

1. **சேமிப்பு வைப்புகள் (Savings Bank Deposits)**
   - ❖ பொதுமக்கள் இந்தக் கணக்கில், தங்கள் சேமிப்புகளை வைப்புகள் செய்யலாம்.
   - ❖ ஒரு தனிநபரின் பெயரிலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் பெயரிலோ இந்தக் கணக்கினைத் தொடங்கலாம்.
2. **நடப்பு வைப்புகள் (Current Deposits)**
   - ❖ நடப்பு வைப்பு கணக்கு வணிக நிறுவனங்களுக்கு ஏற்றது.
   - ❖ தனிநபர்கள் கூட இந்தக் கணக்கைத் தொடங்க முடியும்.
   - ❖ இந்தக் கணக்கில் குறிப்பிட்ட தொகை குறைந்தபட்ச இருப்பாகக் கட்டாயம் வைத்திருக்கவேண்டும். இல்லையெனில் தண்டனை வட்டி விதிக்கப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

ஆ. <u>கால வைப்புகள்</u>

* ஒரு குறிப்பிட்டகாலத்திற்குப் பின் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் உள்ள 1. நிலையான வைப்புகள் 2. தொடர் வைப்புகள் இதில் அடங்கும்.

1. <u>நிலையான வைப்புகள்</u> (Fixed Deposits)
   - ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டிக்கு வைப்பு செய்வதைக் குறிக்கும்.
   - சேமிப்பு கணக்கைவிட வட்டி விகிதம், இதில் அதிகமாக இருக்கும்.
2. <u>தொடர் வைப்புகள்</u> (Recurring Deposits)
   - ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு வருடத்திற்கோ அல்லது ஐந்து வருடங்களுக்கோ அல்லது ஒப்பு கொள்ளப்பட்ட காலத்திற்கோ வைப்பு செய்து வருவதைக் குறிக்கும்.
   - வட்டி விகிதம் சேமிப்பு வைப்பினை விட அதிகமாகவும் மற்றும் நிலையான வைப்புகளுக்குரிய வட்டி விகிதத்திற்குச் சமமான நிலையிலும் இருக்கும்.

II. <u>கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்</u>

- வணிக வங்கிகளின் இரண்டாவது முக்கியச் செயல்பாடு வட்டி வருமானம் பெறுவதற்காகக் கடன் கொடுப்பதாகும். வங்கிகள்குறிப்பிட்ட அளவு பணத்தை வட்டியுடன் திரும்பச் செலுத்தும் கடனாக வழங்குகின்றன.

அ. <u>முன்பணம்</u> (Advances)

1. வங்கி மேல்வரைப் பற்று
2. ரொக்கக் கடன்
3. மாற்றுச் சீட்டுகளை தள்ளுபடி செய்தல்.

ஆ. <u>கடன்கள்</u> (Loans)

- குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வணிக வங்கிகள் தகுதிவாய்ந்த பிணையங்களைப் பெற்றுக் கொண்டு, தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது.
- ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையினை, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் கடன் வழங்குவதை,இது குறிக்கிறது.

  1. வீட்டுக் கடன் 2. நுகர்வோர் கடன் 3. வாகனக் கடன் 4. கல்விக் கடன்
  5. நகைக் கடன்

<u>இரண்டாம் நிலைப் பணிகள்</u> :

1. முகைமைப் பணிகள் 2. பொதுப் பயன்பாட்டுப் பணிகள்

4. **தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் - விளக்குக.** (NEFT- National Electronic Fund Transfer) ( மார்ச் 2019 )

- இது 2005 இல், இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது.
- இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதிபரிமாற்ற நடவடிக்கைகள், தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்டநேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன.
- NEFT செயல்படுத்தப்பட்ட கிளைவங்கிகளில் கணக்குகளைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும்.
- பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை.
- ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ NEFT பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவது இல்லை.

5. **கூட்டிணைப்பு வங்கியியல் தீர்வுகள் என்பது பற்றி நீவீர் அறிவது யாது?**

**(CORE -Centeralised Onlin Real Time Exachange)**

- ❖ 'CORE' என்பது 'மையப்படுத்தப்பட்ட உண்மை நேர இணையப் பரிமாற்றம்' ஆகும்.
- ❖ மையப்படுத்தப்பட்ட இணையப் பரிமாற்றம் உள்ள வங்கிகள் அனைத்துக் கணக்குகளின் விபரங்களையும் அனைத்து வங்கிகளின் கிளை விபரங்களையும் கொண்டுள்ளது.
- ❖ ஒரு வாடிக்கையாளர் காசோலை மூலம் உலகெங்கிலும் உள்ள வங்கியின் எந்தக் கிளை அலுவலகத்திலும் பணத்தை எடுக்க முடியும்.
- ❖ அதே போல் யார் வேண்டுமானாலும், இந்தக் கணக்கில் எந்த கிளையிலும் பணத்தை வைப்பு செய்யமுடியும்.
- ❖ பரிவர்த்தனை நடவடிக்கைகள், உண்மையான நேரத்தில் மையப்படுத்தப்பட்ட இணையப் பரிமாற்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.

## பெரு வினாக்கள்

1. **வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளைப் பற்றி விவாதிக்க.**

* ஒரு வங்கியின் முதன்மைப் செயல்பாடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை :

I. வைப்புகளை ஏற்றல்

II. கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்.

III. கடனை உருவாக்குதல்

**I .வைப்புகளை ஏற்றல்**

- ❖ இன்றைய தினம் வங்கிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களைக் கவர்ந்து ஈர்ப்பதற்காகக் கூடுதல் வசதிகளை, வைப்புக் கணக்குகளுக்கு வழங்குகின்றன. பெரிய அளவிலான வைப்பு கணக்குகளை **அ. கேட்பு வைப்புகள் ஆ. கால வைப்புகளாக வகைப்படுத்தலாம்**

**அ. கேட்பு வைப்புகள்:**

- ❖ இந்த வைப்புகள் எந்த நாளிலும் கேட்கும் போது திருப்பி அளிக்கப்படவேண்டும். இது, **1. சேமிப்பு வைப்புகள் மற்றும் 2. நடப்பு வைப்புகளைக் உள்ளடக்கியது**

**1. சேமிப்பு வைப்புகள் (Savings Bank Deposits)**

- ❖ பொதுமக்கள் இந்தக் கணக்கில், தங்கள் சேமிப்புகளை வைப்புகள் செய்யலாம்.
- ❖ ஒரு தனிநபரின் பெயரிலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் பெயரிலோ இந்தக் கணக்கினைத் தொடங்கலாம்.

**2. நடப்பு வைப்புகள் (Current Deposits)**

- ❖ நடப்பு வைப்பு கணக்கு வணிக நிறுவனங்களுக்கு ஏற்றது.
- ❖ தனிநபர்கள் கூட இந்தக் கணக்கைத் தொடங்க முடியும்.
- ❖ இந்தக் கணக்கில் குறிப்பிட்ட தொகை குறைந்தபட்ச இருப்பாகக் கட்டாயம் வைத்திருக்கவேண்டும். இல்லையெனில் தண்டனை வட்டி விதிக்கப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## ஆ. கால வைப்புகள்

* ஒரு குறிப்பிட்டகாலத்திற்குப் பின் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் உள்ள 1. நிலையான வைப்புகள் 2. தொடர் வைப்புகள் இதில் அடங்கும்.

4. **நிலையான வைப்புகள்** (Fixed Deposits)
   - ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டிக்கு வைப்பு செய்வதைக் குறிக்கும்.
   - சேமிப்பு கணக்கைவிட வட்டி விகிதம், இதில் அதிகமாக இருக்கும்.
5. **தொடர் வைப்புகள்** (Recurring Deposits)
   - ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு வருடத்திற்கோ அல்லது ஐந்து வருடங்களுக்கோ அல்லது ஒப்பு கொள்ளப்பட்ட காலத்திற்கோ வைப்பு செய்து வருவதைக் குறிக்கும்.
   - வட்டி விகிதம் சேமிப்பு வைப்பினை விட அதிகமாகவும் மற்றும் நிலையான வைப்புகளுக்குரிய வட்டி விகிதத்திற்குச் சமமான நிலையிலும் இருக்கும்.

## II. கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்

- வணிக வங்கிகளின் இரண்டாவது முக்கியச் செயல்பாடு வட்டி வருமானம் பெறுவதற்காகக் கடன் கொடுப்பதாகும். வங்கிகள்குறிப்பிட்ட அளவு பணத்தை வட்டியுடன் திரும்பச் செலுத்தும் கடனாக வழங்குகின்றன

### அ. முன்பணம் (Advances)

1. **வங்கி மேல்வரைப் பற்று**
   - இந்தக் கடன் வசதி பெரும்பாலும் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வணிக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
   - இது வங்கி மற்றும் கடன் பெறத் தகுதி வாய்ந்த வாடிக்கையாளர் இருவருக்கும் இடையில் ஏற்படும் உடன்பாடு ஆகும்.
2. **ரொக்கக் கடன்**
   - இது தொழில் நிறுவனங்கள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு வகையான பிணையக் கடன் ஆகும்.
   - சரக்கிருப்பு, மூலப்பொருட்கள், இதர அசையா சொத்துகள் போன்றவற்றை பிணையமாக பெற்று கடன் வழங்கப்படுகிறது.
3. **மாற்றுச் சீட்டுகளை தள்ளுபடி செய்தல்.**
   - வியாபார வாடிக்கையாளர்கள் வங்கிகளிடம் தொடர்பு கொண்டு, வாணிக மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து, பணம் வழங்கிட நாடுகிறார்கள்.
   - இது ஒரு குறுகிய காலக் கடனுக்கான ஆவணம்.

### ஆ. கடன்கள் (Loans)

- குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வணிக வங்கிகள் தகுதிவாய்ந்த பிணையங்களைப் பெற்றுக் கொண்டு, தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது.
- ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையினை, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் கடன் வழங்குவதை,இது குறிக்கிறது.

  1. வீட்டுக் கடன் 2. நுகர்வோர் கடன் 3. வாகனக் கடன் 4. கல்விக் கடன் 5. நகைக் கடன்

## III. கடனை உருவாக்குதல்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதோடு, ரொக்கக் கடன் சுழற்சிகளை, வணிக வங்கிகளின் மூலம் உருவாக்கி, பெரிய அளவில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.**

* இந்தச் சேவைகளைப் பொதுவாக,

I. முகமைசெயல்பாடுகள் மற்றும் II. பொதுப் பயன்பாட்டு செயல்பாடுகள் என வகைப்படுத்தலாம்.

I. முகமை பணிகள்

- வங்கிகள் வாடிக்கையாளர்களின் முகவர்களாகச் செயல்பட்டுச் சில சேவைகளை வழங்குகின்றன. அவை முகமைசெயல்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு,

1. நிதி பரிமாற்றம்
- வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள், பயணிகள் காசோலைகள் பொன்றவைகளை வெளியிடுவதுடன்,
- ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது.
- இந்தச் சேவைக்காக வங்கிகள்,ஒரு சிறிய தரகுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது.

2. காலமுறையில் செலுத்தும் முனைமம், வாடகை, முதலியன
- வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி, காப்பீட்டு முனைமம், வாடகை, தொலைபேசி கட்டணம் பொன்றவைகளை வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மாதந்தோறும் செலுத்தும் பணியை வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன.

3. காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்
- வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள்,மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து, வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது.
- இதேபோல் வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட காசோலை சரிபார்க்கப்பட்டவுடன் வாடிக்கையாளர் அறிவுறுத்தல்படி பணம் வழங்கப்படுகிறது.

4. பங்கு சந்தை பரிவர்த்தனைகளை நடத்துதல்
- ஒரு டீமேட் மின்னணு கணக்கு வைப்பாளரால் தொடங்கப்பட வேண்டும்.
- அதன் பின்பு வாடிக்கையாளர் கேட்டுக் கொள்வதற்கு இணங்க,அவர் சார்பில் வங்கி இணையம் மூலம் பங்குப் பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்கும் பணியைச் செய்கிறது.

5. வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்
- வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வருமானவரிக் கணக்கினை ஆண்டுதோறும் தயாரிக்கின்றன.
- அவர்களுக்கு வரி சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குகின்றன.

6. அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்
- வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியை செய்கிறது.

## அத்தியாயம் 13. பண்டகக்காப்பு

### குறு வினாக்கள்

1. **பண்டகக் காப்பகம் என்றால் என்ன?** ( மார்ச் 2020 )
   - பண்டக காப்பகம் என்பது, பொருட்களைப் பாதுகாத்து வைக்கும் இடம் ஆகும்

2. **பண்டகக் காப்பகத்தின் பல்வேறு வகைகள் யாவை?**

   I. உரிமையின் அடிப்படையில்
   1. தனியார் பண்டகக் காப்பகங்கள்
   2. அரசு பண்டகக் காப்பகங்கள்
   3. பொதுப் பண்டகக் காப்பகங்கள்
   4. கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்
   5. பிணையகாப்பு பண்டகக் காப்பகங்கள்
   6. நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்
   7. விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்

   II. பண்டங்களின் களின் அடிப்படையில்
   1. பொதுப் பண்டகக் காப்பகங்கள்
   2. சிறப்புபொருள் பண்டகக் காப்பகங்கள்
   3. குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்
   4. தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகக் காப்பகங்கள்
   5. தானியங்கி பண்டகக் காப்பகங்கள்

3. **பண்டக் காப்பகத்தின் மூன்று பணிகள் குறிப்பிடுக.**
   1) பொருட்களை பாதுக்காத்தல்
   2) விலைகளை நிலைப்படுத்தல்
   3) தேவை மற்றும் வழங்கலையும் சமன்படுத்துதல்
   4) இடர்களை ஏற்றல்
   5) விற்பனைக்கு முன்னேற்பாடு

4. **பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபடுகளை கூறுக.** ( செப் 2020 )

| பண்டக சான்றானை | பண்டக காப்பாளர் இரசீது |
|---|---|
| 1. உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் அல்ல. |
| 2. மற்றவர்களுக்கு இதை மாற்றி தர இயலும் | இதை மாற்றித் தர இயலாது |
| 3. இதை பிணையமாக வைக்க முடியும் | இதை பிணையமாக வைக்க முடியாது |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. **இந்திய உணவு கழகம் பற்றி குறிப்பு வரைக.**

- இது உணவு தானியங்களைப் பாதுகாக்கும் வசதிகளை வழங்குகிறது.
- பொருட்களை பாதுகாக்கும் வசதியை மாநில, மத்திய பண்டக காப்பகங்கள், மாநில அரசுகள் மற்றும் தனியார்களிடமிருந்து வாடைக்கு எடுத்துக் கொள்கிறது.
- 1964 ஆம் ஆண்டின் உணவுச் சட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகம் அமைக்கப்பட்டது.

## சிறு வினாக்கள்

1. **பண்டக இரசீதிலிருந்து பண்டக சான்றானை வேறுபடுத்துக.**

| பண்டக சான்றானை | பண்டக காப்பாளர் இரசீது |
|---|---|
| 1. உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் அல்ல. |
| 2. மற்றவர்களுக்கு இதை மாற்றி தர இயலும் | இதை மாற்றித் தர இயலாது |
| 3. இதை பிணையமாக வைக்க முடியும் | இதை பிணையமாக வைக்க முடியாது |
| 4. சரக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒரு அத்தாட்சி மற்றும் சரக்கைப் பெறுவதற்கான அதிகாரத்தை தரும் அவணம் ஆகும். | சரக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆகும் |
| 5. பண்டக சான்றாணையை மேலெழுதி கொடுப்பதன் மூலம், பொருட்களை பண்டகக் காப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். | இந்த இரசீதையும், பொருட்களின் உரிமையாளா் கடிதத்தையும் இணைத்தால் மட்டுமே பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் |

2. **குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?** ( செப் 2020 )

- பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகசாலைகளில் சேமிக்கப்படுகின்றன.
- பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி, போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## பெரு வினாக்கள்

1. **பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை?** ( ஜூன் 2019 )

**I. உரிமையின் அடிப்படையில்**

1. **தனியார் பண்டகக் காப்பகங்கள்**

- இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை.
- இவை, அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **அரசு பண்டகக் காப்பகங்கள்**

- அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டகக் காப்பாகங்கள் உருவாக்கி நடத்தி வருகிறது.
- இதன் சேவைகள்,பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

3. **பொதுப் பண்டகக் காப்பகங்கள்**

- இது பெரிய அளவில், பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.
- சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகக் காப்பாகங்கள் சொந்தமாக அமைக்க முடியாது.
- அவர்கள் இம் மாதிரியான பண்டகக் காப்பாகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

4. **கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்**

- இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

5. **பிணையகாப்பு பண்டகக் காப்பகங்கள்**

- இவ்வகை பண்டகக் காப்பகங்கள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.

6. **நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்**

- ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டகக் காப்பாகங்களை வைத்திருக்கின்றன.

7. **விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்**

- தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும் , இவ்வகை பண்டகக் காப்பாகங்கள் பயன்படுகின்றன.

**II. பண்டங்களின் களின் அடிப்படையில்**

1. **பொதுப் பண்டகக் காப்பகங்கள்**

- இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பண்டகக் காப்பாகங்கள் ஆகும்.

2. **சிறப்புபொருள் பண்டகக் காப்பகங்கள்**

- புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்டவகை பொருட்களை பாதுகாப்பதற்காக, இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

3. **குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்**

- பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன. மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பாகங்களில் சேமிக்கப்படுகின்றன.
- பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி, போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

4. **தட்பவெப்பநிலை பண்டகக் காப்பகங்கள்**

- தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.

5. **தானியங்கி பண்டகக் காப்பகங்கள்**

- ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்டவசதிகள் இங்கு உண்டு.
- இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில்நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்கவேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. இந்தியாவில் உள்ள பண்டகக் காப்பகங்களை விளக்குக.

(அ) இந்திய உணவுக் கழகம் (FCI)

- இது உணவு தானியங்களைப் பாதுகாக்கும் வசதிகளை வழங்குகிறது.
- இந்நிறுவனம் பொருட்களை பாதுகாக்கும் வசதியை மாநில, மத்திய பண்டக காப்பகங்கள், மாநில அரசுகள் மற்றும் தனியார்களிடமிருந்து வாடைக்கு எடுத்துக் கொள்கிறது.
- பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற, 1964 ஆம் ஆண்டின் உணவுச் சட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகம் அமைக்கப்பட்டது.
  - i) பொது விநியோக திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உணவு தானியங்கள் விநியோகம்.
  - ii) விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், குறைந்த வாடகையில் பொருட்களை பாதுகாத்தல்.

(ஆ) மத்திய பண்டக காப்பக கழகம் (CWC)

- இது 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மத்திய பண்டக காப்பகத்தின் பணிகள்:

1. வேளாண்பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய கருவிகள் மற்றும் பிற பொருட்களின் சேமிப்பிற்கான முகமைகள் ஏற்படுத்துவது.
2. பொருட்களின் உரிமையாளர்களிடம் கடன் வாங்குவதற்கான மாற்றத்தக்க பண்டக இரசீதுகள் வழங்குதல்.

(இ) மாநில பண்டக காப்பக கழகங்கள் (SWC)

- மத்திய பண்டக காப்பக கழகத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு, ஒவ்வாரு மாநில அரசும் அதன் சொந்த பண்டக காப்பக கழகத்தை நிறுவ முடியும்.
- இதை நிறுவதற்கான நிதியை 50 விழுக்காடு மத்திய பண்டக காப்பக கழகமும் மற்றும் மீதி 50 விழுக்காடு மாநில அரசும் தருகின்றது.

(ஈ) தமிழ்நாடு பண்டக காப்பக கழகங்கள் (TNWC)

- இது 1959 ஆம் ஆணடு நிறுவப்பட்டது.
- 7 பிராந்திய அலுவலகங்கள், 256 கோட்டங்கள் உள்ளன.
- இது மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது.

## கூடுதல் வினா

1. பண்டக் காப்பகங்களின் பணிகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

1) பொருட்களை பாதுக்காத்தல் ( மார்ச் 2020 )

- உற்பத்தி காலம், நுகர்வு, தேவை, மற்றும் விநியோகத்திற்கு இடையே இடைவெளி அதிகமாக உள்ளது.
- உபரி பொருட்கள் சரியான இடம் மற்றும் சரியான நேரத்தில் வழங்கும் நோக்கத்திற்காக பாதுகாப்பான முறையில் இங்கு சேமிக்கப்படுகின்றன.

2) விலைகளை நிலைப்படுத்தல்

- சரக்குகள்தேவைப்படும் போது தொடர்ந்து வழங்குவதன் மூலம் பண்டக காப்பகங்கள் விலைகளை நிலைப்படுத்துவதற்கு உதவுகிறது.
- விலை ஏற்ற இறக்கங்களை சமாளித்து ஆண்டு முழுவதும் ஏறக்குறைய ஒரே சீரான விலைகளில் பொருட்கள் கிடைக்க பண்டக காப்பகங்கள் ஒரு கருவியாக செயல்படுகிறது.

3) தேவைமற்றும் வழங்கலையும் சமன்படுத்துதல்

- சந்தையில் பொருட்களின் தேவையையும், பகிர்வையும் பண்டக காப்பகங்கள் சமன் செய்கிறது.

- அதாவது பொருட்கள் தேவை இல்லாத போது பண்டக சாலையில் பாதுகாத்து பின்னர் பொருட்கள் தேவைப்படும் பொழுது விநியோகிக்கப் படுகின்றது.
- குறிப்பிட்ட பருவ காலங்களில் விளையும் பொருட்கள் பிற பருவகாலங்களில் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்க உதவுகின்றது.

4) **வியாபார நிதி பெற உதவுதல்**

- பண்டக காப்பகத்தில் வைக்கப்பட்ட பொருட்களுக்கு ஆதாரமாக வழங்கப்பட்ட பண்டகக் காப்பக ரசீதை அடிப்படையாக வைத்து அப்பொருட்களின் உரிமையாளர் வங்கிகள் மற்றும் பிறநிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறமுடியும்.

5) **இடர்களை ஏற்றல்**

- பண்டகக் காப்பகத்தில் உள்ள பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டால் பண்டக் காப்பக உரிமையாளர் பொருட்களின் உரிமையாளருக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்கிறார்.
- இதனால், பண்டகக் காப்பகத்தில் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படுகின்றது.

6) **விற்பனைக்கு முன்னேற்பாடு**

- பொருட்களை சந்தையிடுவதற்கு ஏற்ப நவீனகால பண்டகக் காப்பகங்கள் பொருட்களை வகைப்படுத்துதல், கட்டுமம் செய்தல், குறியீடு செய்தல் ஆகிய பணிகளை செய்கின்றன.
- எனவே பொருட்களை விற்பனைக்கு தகுதியாக்கம் செய்யும் பணிகள் பண்டகக் காப்பகத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

7) **சந்தை எல்லையை விரிவுபடுத்துதல்**

- உற்பத்தியாளர் பொருட்களை வெவ்வேறு இடங்களில் விற்பதற்காக பண்டகக் காப்பகங்களை நிறுவியும் அல்லது தேவையான இடங்களில் பண்டகக் காப்பக சேவையைப் வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதன் மூலமும் பொருட்களுக்கான சந்தை விரிவடைகிறது.

8) **மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள்**

- பொருட்களை கலக்குதல், வகைப்படுத்துதல், கட்டுமம் செய்தல் மற்றும் குறியீடு செய்தல் போன்றவற்றை செய்ய பண்டக காப்பகங்கள் உதவி செய்கின்றன. இது பொருட்களை விற்பனை செய்யும் நிலைக்கு கொண்டு செல்ல உதவுகிறது.

# அத்தியாயம் 14. போக்குவரத்து

## குறுவிடை வினாக்கள்

1. **போக்குவரத்து - வரையறு.** ( ஜூன் 2019 , மார்ச் 2020 )
   - கே.கே. செக்சேனாவின் கூற்றுபடி, " ஓர் இருட்டறையில், மெழுகு வர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது".

2. **போக்குவரத்து மூலம் வழங்கப்படும் ஏதேனும் இரண்டு சேவைகளைப் பற்றிக் கூறுக.**

   அ) உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.
   - பொருளின் உற்பத்தியின் நோக்கம் நுகர்வு ஆகும்.
   - பயனுள்ள போக்குவரத்து முறை, காலம் மற்றும் இடவசதிகளை உருவாக்குவதன் மூலம், பொருட்களின் தேவை மற்றும் பொருட்களின் மதிப்பு ஆகியவற்றில் குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

ஆ) <u>அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது.</u>

- பொருந்தாத இயற்கை நிலைமைகள் உள்ள அல்லது ஒரு பிராந்தியத்தில் உற்பத்தி செய்ய முடியாத நுகர்வுப் பொருள்களைப் பெற இது உதவுகிறது.

3. **நிலப் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.**
   - வாணிபம், சமுதாயம், பண்பாடு போன்றவற்றை பலதரப்பட்ட மக்களிடம் ஒன்றாக்குகிறது.
   - பல்வேறு இடங்களில் சாலைகளை இணைப்பதன் மூலம், நாட்டிலுள்ள பிரதான தேசிய வழியில் இணையாமல், தொலைதூரத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழும் பெரும்பாலான மக்களை இணைத்து, அடிப்படை உள்கட்டமைப்புகளை இது வழங்குகிறது.

## <u>சிறுவிடை வினாக்கள்</u>

1. **ஒப்பந்த இரசீது என்றால் என்ன?**
   - சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.
   - எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது ‘கப்பல் வாடகை ஒப்பாவணம்’ என்று அழைக்கப்படும்.
   - பொருட்களை உரிய துறைமுகத்தில் சேர்க்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் கப்பல் உரிமையாளரோ அல்லது அவரது முகவர்களாலோ வழங்கப்படும் இரசீதினையே ஒப்பந்த இரசீது எனப்படுகின்றது.

2. **கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?**
   - சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.
   - எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது ‘கப்பல் வாடகை ஒப்பாவணம்’ என்று அழைக்கப்படும்.
   - மேலும் இது ‘பயண ஒப்பந்தம்’ அல்லது ‘கால ஒப்பந்தம்’ என்றும் அழைக்கப்படும்.

## <u>கூடுதல் வினா</u>

1. **வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து என்பது எது? அதன் இரண்டு நன்மைகளை எழுதுக. ( செப் 2020 )**
   1) வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து **விமான போக்குவரத்து** ஆகும்.
   2) **<u>நன்மைகள்</u>**
      (i) இது ஒரு வழக்கமான, வசதியான, திறமையான மற்றும் விரைவான சேவையை வழங்குகிறது.
      (ii) பழங்கள், காய்கறிகள், முட்டை, இறைச்சி போன்ற அழிந்து போகும் பொருட்களை விரைவாக எடுத்துச்செல்ல முடியும்.
      (iii) இரயில்வே போன்ற துறைகளைப் போல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பிற்கு அதிக முதலீடு இதற்கு தேவையில்லை.
      (iv) பயணிகளுக்கு வசதியான சேவைகளையும் மற்றும் பொருட்களுக்கான பாதுகாப்பையும் வழங்குகின்றன.
      (v) மற்ற போக்குவரத்து மூலம் அனுப்பி வைக்க முடியாத பகுதிகளுக்கு பொருட்களை அனுப்புவதற்கு இதனைப் பயன்படுத்தி அனுப்ப முடியும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

(vi) வெள்ளம் அல்லது நிலச்சரிவு மற்றும் போர் போன்ற ஆபத்துகளில் இருந்து மனித உயிர்களை காப்பாற்ற பெரிதும் உதவுகிறது.

## பெருவிடை வினாக்கள்

1. **போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்க./ நிலப்போக்குவரத்தின் ஏதேனும் ஐந்து வகைகளை விளக்குக.** ( மார்ச் 2019 , 2020 )

A. **நிலப் போக்குவரத்து**

1. **பொதி விலங்குகள்**
   - மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும், சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்,
   - குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்று அழைக்கப்படுகின்றது.
2. **மாட்டு வண்டிகள்**
   - இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளேஆகும்.
   - இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது
3. **சாலை போக்குவரத்து**
   - சாலை போக்குவரத்து என்பது, குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது.
   - மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும், அதற்கு துணை புரியவும் உதவுகிறது.
4. **இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்**
   - நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.
5. **டிராம் வண்டிகள்**
   - 19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது.
   - டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும், பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.
6. **தொடர்வண்டி போக்குவரத்து**
   - ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது.
   - தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது.
   - நீண்டதூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழி வகைகளாக இருக்கின்றன.

**போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்**

1. மெட்ரோ இரயில் 2. மோனா இரயில் 3. புல்லட் இரயில் 4. குழாய் போக்குவரத்து

5. கன்வேயர் போக்குவரத்து 6. கயிறு வழி போக்குவரத்து 7. உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக.**

1) நீண்ட தூரத்திற்கு, கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2) தடையற்ற சேவைகளால், நீண்ட தொலைவு பயணத்தை, பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3) இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன், ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
4) இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.
5) மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்கு சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
6) ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர் வண்டி ஓட்ட செலவினங்கள், தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும்.
7) சரக்குகள், பொதுவாக மூடப்பட்ட பெட்டிகளில் சுமந்து செல்லப்படுவதால் வெயில் மற்றும் மழை போன்றவைகளால் பாதிக்கப்படுவது கிடையாது.
8) அதிக வேகத்துடன், நீண்ட தூரத்தில் சரக்குகளை சுமந்து செல்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட, குறைவான நேரமே தேவைப்படுகிறது.

---

**கூடுதல் வினா**

1. **உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து என்றால் என்ன? அவற்றின் நன்மைகளை எழுதுக.** ( செப் 2020 )

❖ உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து என்பது, உள்நாட்டு நீர்வழிகளான நதிகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவை அடங்கும். இது உள்நீர் போக்குவரத்து என்றும் அழைக்கப்படுகிறது.

**உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தின் நன்மைகள்**

1) இது பிறமுறைகள் போக்குவரத்தைவிட மலிவான பயணமாக கருதப்படுகிறது.
2) இந்த பயணத்தின் போது நடுக்கம் மற்றும் குதித்தல் இல்லாத காரணத்தால், சுலபமாக பொருட்களை கொண்டு செல்கிறது. இது சேதமாகமால் இருக்கவேண்டிய, கண்ணாடியால் செய்யப்பட்ட பொருட்கள், மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் போன்ற பலவீனமான பொருட்களை கொண்டு செல்ல மிகவும் பொருத்தமானது.
3) இது கனரக சுமைகளுக்கு மிகவும் பொருத்தமானது.
4) நீர் போக்குவரத்துகளில் குறைந்தளவே மாசு உள்ளது.
5) ஆற்றின் சேவைகள் மற்றும் முதலீட்டின் ஆரம்ப முதலீடு மற்றும் சாலை பராமரிப்பு மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியவற்றோடு ஒப்பிடும் போது செலவுகள் குறைவாகவே உள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அத்தியாயம் 15. காப்பீடு

## குறு விடை வினாக்கள்

1. **ஆயுள காப்பீடுத்திட்டாவண வகைகளைக் குறிப்பிடுக.**
    1. முழு ஆயுள் திட்டாவணம்.
    2. குறித்த வயது திட்டாவணம்.
    3. கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டாவணம்.
    4. ஆண்டுத் தொகை திட்டாவணம்.
    5. குழந்தைகளுக்கான குறித்த வயது திட்டாவணம்.

2. **மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?**
    - மருத்துவக் காப்பீடு என்பது, காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனிநபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் ஆகும்.
    - இந்த ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் குறிப்பிட்ட அளவு முனைமம் பெற்றுக் கொண்டு குறித்தகாலத்திற்கு உடல் நலக் காப்பீட்டை வழங்க ஒப்புக்கொள்கிறார்.

## சிறுவிடை வினாக்கள்

1. **காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.**
    - ஜான் மெர்ஜ் என்பவரது கூற்றுப்படி " தனி ஒருவருக்கு ஏற்படும் இடரை, பலர் ஒன்றிணைந்து தங்களது தோள்களில் பகிர்ந்து கொள்ளும் திட்டமே காப்பீடு" ஆகும்.

2. **பயிர்க் காப்பிட்டின் பொருள் தருக. (அல்லது) வேளாண்மைக் காப்பீடு என்றால் என்ன?** ( மார்ச் 2019 )
    - வறட்சி வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு வேளாண்மைக் காப்பீடு ஆகும்.

3. **IRDAI - என்பது என்ன?**

    ( இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் - Insurance Rgualtory Development Authority of India )
    - இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிறுவனங்கள் யாவும், மேற்பார்வை செய்து, ஒழுங்குபடுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக, தனித்துச் செயல்படும் சட்டப்படியான ஆணையம், இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி ஒழுங்கமைப்பு ஆணையம் ஆகும்.
    - இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட (IRDAI ACT 1999) சட்டத்தின்படி 2000-ம் ஆண்டில் உருவாக்கபட்டது.
    - இதன் தலைமை அலுவலம் தெலுங்கான மாநிலத்தில் உள்ள ஹைதாரபாத் நகரில் உள்ளது.

## கூடுதல் வினா

1. **தீபக் தன்னுடைய தொழிற்சாலைய ரூ. 5 இலட்சத்திற்கு தீக் காப்பீடு செய்திருக்கிறார். தீயினால் ரூ. 2 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. காப்பீடு நிறுமத்திடமிருந்து எவ்வளவு தொகை பெறுவார்? ஏன்?** ( ஜூன் 2019 )
    1) காப்பீடு நிறுமத்திடமிருந்து ரூ. 2 இலட்சம் தொகை பெறுவார்.

2) ஏனெனில், ஈட்டுறுதி கோட்பாட்டின்படி,காப்பீடு செய்த தொகை, உண்மையான இழப்பு இதில் எது குறைவோ, அத்தொகை மட்டுமே இழப்பீடாகப் பெற முடியும்.

**2. இந்திய காப்பீட்டு நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் ஆணையத்தின் உறுப்பினர்கள் யாவர்?** ( மார்ச் 2020 )

1) நடுவண் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர்
2) ஐந்து முழுநேர உறுப்பினர்கள்
3) நான்கு பகுதிநேர உறுப்பினர்கள்

**3. கடனீந்தோர் ஒருவர் கடனாளியின் மீது காப்பீடு எடுப்பது எந்த கோட்பாட்டின் அடிப்படையில்? விளக்குக.** ( செப் 2020 )

1) **காப்பீடு பெறுநலன்** கோட்பாட்டின் அடிப்படியில்.
2) **விளக்கம்**
   - ❖ காப்பீடு பெறுநலன் என்பது, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது.

## பெருவிடை வினாக்கள்

**1. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.** ( ஜூன் 2019 ), ( செப் 2020 )

1) **மிக்க நம்பிக்கை (Utmost good faith)**
   - ❖ இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.
   - ❖ காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும்,
   - ❖ காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்துவிட வேண்டும்.
2) **காப்பீடு பெறுநலன் (Insurable Interest)**
   - ❖ காப்பீடு பெறுநலன் என்பது, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது.
   - ❖ காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்கவேண்டும்.
3) **ஈட்டுறுதி (Indemnity)**
   - ❖ ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்.
   - ❖ காப்பீடு பெறுநருக்கு, உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கவேண்டும்.
   - ❖ இழப்பைவிட கூடுதலான தொகை வழங்கப்படாது.
4) **அண்மைக் காரணம் (Causa Proxima)**
   - ❖ ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காணவேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5) **பகிர்ந்தளித்தல்** ( Contribution)

- ஒரே கருப்பொருள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைகாப்பீடு என்று பெயர்.
- காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை, சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

6) **பகர உரிமை** (subrogation)

- பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.
- காப்பீடு பெறுநர், தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும், கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.
- அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்து விடும்.

---

2. **காப்பீட்டின் வகைகளை விளக்குக.**

➢ **காப்பீட்டில் பலவகைகள் உள்ளன. அவையாவன.**

1. ஆயுள்காப்பீடு அல்லது ஆயுள்காப்பீட்டுறுதி
2. ஆயுள்சராக் காப்பீடு அல்லது பொதுக்காப்பீடு. இது பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது அவையாவன (i) தீக்காப்பீடு (ii) கடல்சார் காப்பீடு
3. உடல்நலக் காப்பீடு மற்றும் இதரக் காப்பீடுகள்.

1. **ஆயுள்காப்பீடு அல்லது ஆயுள் காப்பீட்டுறுதி**

- ஆயுள்காப்பீடு என்பது, காப்பீடு நிறுவனம் எனும் காப்பீடு தருநர், காப்பீடு பெறுநர் செலுத்தும் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு அல்லது ஆண்டு முனைமம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையை முனைமமாகப் பெற்றுக்கொண்டு அவரது ஆயுளை காப்பீடு செய்யும் ஒரு ஒப்பந்தம் ஆகும்.

**ஆயுள் காப்பீடுத் திட்டாவண வகைகள்**

i. **முழு ஆயுள் திட்டாவணம்**

- இவ்வகைத் திட்டாவணத்தில், முதிர்வுத்தொகை காப்பீடு பெறுநர் மரணமடைந்த பிறகு, அவரின் பயனாளிக்கோ அல்லது அவரின் சட்ட வாரிசுக்கோ அளிக்கப்படும்.

ii. **குறித்த வயதுத்திட்டாவணம்**

- இத்திட்டாவணத்தில் காப்பீடு பெறுநர், ஒரு குறுப்பிட்ட காலம் முடியும் வரை அல்லது அவரது மரணம் வரை இதில் எது முதலில் வருகிறதோ,அதுவரை முனைமத் தொகை செலுத்த வேண்டும்
- அக் குறிப்பிட்டகாலம் முடிவதற்குள்,காப்பீடு பெறுநர் மரணமடைந்து விட்டால், காப்பீடு செய்தத் தொகை, அவரது சட்டபூர்வ வாரிசுகளுக்கு வழங்கப்படும்.

iii. **கூட்டு ஆயுள் காப்பீடுத் திட்டாவணம்**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஆயுளுக்கு கூட்டாக, ஆயுள்காப்பீடு செய்வது கூட்டு ஆயுள் காப்பீடுத் திட்டாவணம் எனப்படும்.

iv. **குழந்தைகளுக்கான குறித்த வயது திட்டாவணம்.**

- குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்ற செலவுகளை ஈடுகட்டுவதற்காக இத்திட்டாவணம் எடுக்கப்படுகிறது. உதாரணம் : ஜீவன் அனதராக் பாலிசி.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**2. ஆயுள் சாராக் காப்பீடுகள் (Non – life insurance)**

**அ) தீக்காப்பீடு (Fire Insurance)**

- காப்பீடு தருநர், காப்பீடு பெறுநரிடம் முனைமம் பெற்றுக் கொண்டு, அவரின் சொத்துக்களுக்கு ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு தீயினால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டுவதற்காக செய்து கொள்ளும் ஒப்பந்தம் தீக்காப்பீடு ஆகும்.

**ஆ. கடல் சார் காப்பீடு (Marine Insurance)**

- காப்பீடு தருநர், காப்பீடு பெறுநருக்கு கடல் பயணங்களின் போது ஏற்படும் இழப்புகளுக்கு, ஈடு அளிப்பதாக செய்து கொள்ளும் ஒப்பந்தம் ஆகும்.

➢ **கடல்சார் காப்பீட்டுத் திட்டாவண வகைகள்**

1. கப்பல்சார் காப்பீடு 2. பொருள்சார் காப்பீடு 3. கப்பல் சத்தக் காப்பீடு

**3. உடல்நல காப்பீடு**

➢ **மருத்துவக் காப்பீட்டின் வகைகள்**

1. தனிநபர் மருத்துவக் காப்பீடு 2. குடும்ப நல திட்டாவணம் 3. முதலீடு இணைந்த காப்பீட்டுத் திட்டங்கள்.

**4. இதரக் காப்பீடுகள்**

1. மோட்டார் வாகனக் காப்பீடு
2. கொள்ளைசார் காப்பீடு
3. கால்நடைக் காப்பீடு
4. பயிர் காப்பீடு
5. விளையாட்டு காப்பீடு
6. அமர்த்தியா சென் கல்வி திட்டம்
7. ராஜேஸ்வரி மகிளா கல்யாண பீமா யோஜனா

---

**3. இடர்களுக்கான காரணங்களை விவரி.** ( மார்ச் 2019 )

➢ தொழில் இடர்கள் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவையாவன:

**1. இயற்கை காரணிகள் (Natural Causes)**

- இயற்கை பேரிடர்களான பெருவெள்ளம், பூகம்பம், மின்னல், பெருமழை, பஞ்சம், புயல் போன்றவை மனிதனால் குறைந்த அளவே கட்டுப் படுத்தக் கூடியவை.
- இதன் காரணமாக அதிக மனித உயிரிழப்புகள், சொத்துகள் சேதமடைதல் மற்றும் வியாபாரத்தில் அதிக நட்டம் ஆகியவை ஏற்படுகிறது.

**2. மனித காரணிகள் (Human Causes)**

- பணியாளர்களின் நேர்மையற்ற தன்மை, கவனக்குறைவு, அறியாமை, மின்தடை காரணமாக பணி தடைபடுதல், வேலைநிறுத்தம், கலகம் மற்றும் திறமையற்ற மேலாண்மை ஆகியவை மனித காரணிகளாகும்.

**3. பொருளாதார காரணிகள் (Economic Causes)**

- பொருட்களின் தேவை, விலை, போட்டி, வாடிக்கையாளர்களிடம் கடனை வசூல் செய்தல், தொழில் நுட்பமாற்றம், உற்பத்தி முறையில் மாற்றம் போன்றவற்றில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் இதில் அடங்கும்.
- மேலும் வட்டி வீதம் அதிகரிப்பு, அதிக வரிவிதிப்பு ஆகிய நிதி பிரச்னைகளும் இதில் அடங்கும்.

**4. பிற காரணங்கள்**

- எதிர்பாராத அரசியல் பிரச்னைகள், இயந்திரக்கோளாறு, பரிமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அலகு - 4 சேவைத் தொழில்கள் II

## அத்தியாயம் 16. இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

### குறுவிடை வினாக்கள்

1. **தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்? ( மார்ச் 2019 )**
   - **ஒரு வியாபார நிறுவனத்தில், அதன் வாணிப நடவடிக்கைகளைக் மேற்கொள்ளும் அனைத்து உரிமையையும், தொடர் உறவு முறையின் அடிப்படையில், ஒருவருக்கு வழங்கப்படுமாயின், அந்த நபரை தனிமையாளன் அல்லது தனி உரிமம் பெற்றவர் என்று அழைக்கிறோம்.**

2. **தனி உரிமையியல் இரண்டு நன்மைகளைக் கூறு? ( செப் 2020 )**

   1. இடர்களை குறைத்தல் 2. வணிக விரிவாக்கம் 3. விளம்பரச் செலவு
   4. செயல் பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்

3. **ஏட்டு கடன் தரகு முகவர் என்பவர் யார்?**
   - ஒரு நிறுவனம் தனது பொருட்களை ரொக்கம் மற்றும் கடன் அடிப்படையில் விற்பனை செய்கிறது.
   - கடன் விற்பனையினால், சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் நடப்பு மூலதனமானது கணிசமான அளவு பெறுவதற்குரிய மாற்றுச் சீட்டுகளாக மாறிவிடுவதால் நீர்மை தன்மை பாதிக்கிறது.
   - இதனால் அதன் சீரான செயல்கள் பாதிக்கப்பட்டு, வாணிக இடர்பாடுகள் ஏற்படுகின்றன.
   - இவற்றை சமாளிக்கும் பொருட்டு, ஒரு தரகு நீதி சேவை செயல்படுகிறது.
   - அதுவே ஏட்டு கடன் தரகு முகவர் ஆவார்.

4. **புற திறனீட்டல் வரையறுக்க**
   - வெளியாட்களிடம் பணியை ஒப்படைப்பு செய்து, அதை தன் நிறுவனத்தின் மூலம் எப்போதும் போல் சந்தையிடுதலை புற திறனீட்டல் அல்லது புற ஒப்படைப்பு என அழைக்கப்படுகிறது.

5. **புற ஒப்படைப்பின் தேவைகள் என்ன?**

   1. **இணை மற்றும் கூடுதல் செயல்களை வெளியாட்களுக்கு மாற்றிவிடுதல்**
   2. **ஒப்பந்தத்தின் மூலம் புற ஒப்படைப்புச் செய்ய முடியும்**
   3. **புற ஒப்படைப்பினால், நிறுவனத்தின் செயல்பாட்டுத்திறன் மேம்படுகிறது**
   4. **வாடிக்கையாளர்களின் திருப்தி மேம்படுகிறது**
   5. **செலவு குறைகின்றது**

6. **எந்த வகையில் தொழில் செயல்முறை புற ஒப்படைப்பு முக்கியமென நினைக்கிறாய்?**
   - வெளி நிறுவனங்களிடமிருந்து, ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை **அல்லது** செயல்களை பெறுவதற்கு தொழில் செயல்முறை புற திறனீட்டல் என்று பெயர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- **புற ஒப்படைப்பு செய்வதனால், அந்நிறுவனம் தன்னுடைய வழக்கமான பணிகளை, கால நேரத்தை வீண் செய்யாமல், முக்கிய சிக்கல்கள் நிறைந்த செயல்களில் தன் கவனத்தை செலுத்த இயலும்.**
- இதனால் நிறுவனங்களின் செலவும் குறைகின்றது.

**7. அறிவுசார் செயல்முறை புற ஒப்படைப்புச் செய்தலின் நன்மைகள் என்ன?**

- இம்முறையினால் வாணிபத்தை வெற்றிகரமாக குறைந்த செலவில் நடத்தி செல்லலாம்.
- அறிவு சார்ந்த, தகவல் தொடர்பு சார்ந்த மற்றும் சிறந்த மதி நுட்பம் கொண்ட வேலைகளில், வெளிநபர்களை அவர்களின் திறமைகளைக் கொண்டு மதிப்பு மிக்க செயலை செய்யலாம்.

**8. பெயர்ச்சியியல் - வரையறை தருக.**

- சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்துப் பணி பெயர்ச்சியில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் ஆகும்.

**9. பெயர்ச்சியியல் தேவை யாது?**

- ஒரு நிறுவனம் சிறந்த பெயர்ச்சியியல் மேலாண்மையை நல்ல ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட போக்குவரத்து, பண்டகக் காப்பு, உற்பத்தி பொருட்களை கையாளுதல் சிறந்த தகவல்களுடன் கூடிய தேவை, பெயர்ச்சியியலில் தேவைப்படுகிறது.
- மேலும், இந்தியாவை பொருத்தமட்டில் பெரும்பான்மையான போக்குவரத்து முறைகள் சாலை மற்றும் இரயில் வழியாகவே நடைபெறுகிறது.

**10. பெயர்ச்சியியல் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.**

- பெயர்ச்சியியல் தொடர்புடைய பல உற்பத்தி சார்புடைய செயல்களின் முடிவுகளை ஆய்வு செய்து தீர்மானித்து, தேவைக்கேற்ப தளர்த்தி, ஒருங்கிணைந்த அமைப்பு முறையாக உற்பத்தி பொருட்களை பகிர்ந்தளித்தலில் ஈடுபடுகிறது.

**11. பெயர்ச்சியியல் வகைகள் யாவை?**

1. முடிவெடுத்தலின் அடிப்படையில்
2. பங்கெடுக்கும் நபர்களின் அடிப்படையில்
3. பெயர்ச்சியியலின் இணைந்து கொள்ள செயல்களின் அடிப்படையில்
4. பெயர்ச்சியியலில் சேராத செயல்களின் அடிப்படையில்

**12. மின்னனு வணிகம் பற்றி நீவிர் அறிவது யாது?** ( ஜூன் 2019 )

- மின்னனு வலைத்தளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றலுக்கு மின்னனு வர்த்தகம் எனப்படுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவிடை வினாக்கள்

1. **தனி உரிமையியலின் வகைகள் யாவை?** ( ஜூன் 2019, மார்ச் 2020 )
   * தனி உரிமையியல் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவை
   (அ) தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தக பெயர் தனி உரிமையாக்கல்
   (ஆ) வணிக வடிவமைப்பு தனி உரிமை.

2. **ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை?**
   1. பொதுவாக நிதிநிறுவனங்கள், சரக்குப்பட்டியலில் உள்ள தொகையைத் திரும்ப பெறுவதற்காக, உரிமைப் பேராளுடன் செய்து கொள்ளப்படும் ஒரு முகமை ஏற்பாடாகும்.
   2. எப்போதெல்லாம் கடனுக்கு பொருட்கள் விற்கப்படுகின்றனவோ, அதனடிப்படையில் இடாப்பு அல்லது சரக்குபட்டியல் தயாரிக்கப்பட்டு, அதனுடைய நகல் ஒன்றினை உரிமைப் போராளுக்கு அனுப்பப்படும்.
   3. கடன் வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை, பேராளுக்கு மாற்றப்பட்டு, அந்த விவரம் வாடிக்**கையா**ளருக்கு தெரியப்படுத்தப்படும்.
   4. குறிப்பிட்ட தவணை நாள் அன்று, உரிமைப் பேராள் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து தொகை வசூலிக்கப்படும்.
   5. பின்னர் உரிமைப் பேராள் தனக்குரிய சேவைக் கட்டணத்தைப் பிடித்துக்கொண்டு, மீதமுள்ள தொகையை கடன் வழங்கிய நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பார்.

3. **பெயர்ச்சியியலின் நன்மைகளை விவரி?**
   ❖ பொருட்களின் தயாரிப்பு வடிவமைப்பு, தளவாட அமைவிடம், சந்தை மூலங்களை தெரிவு செய்தல், உற்பத்தி கட்டமைப்பு, விநியோகஸ்தர் (அ) வணிகர் வலையமைப்பு, வடிவமைப்பது, பண்டகச்சாலை அமைவிடம், தளவாட வரைபடம் மற்றும் பெயர்ச்சி பங்கீட்டு வடிவமைப்பு உற்பத்தி திட்டம், சரக்கிருப்பு மேலாண்மை, சரக்கிருப்பின் நிலைகள் போக்குவரத்து வகையைத் தேர்வு செய்தல் சரக்கை கப்பலில் ஏற்றுதலின் அளவு, வழித்தடத்தை முடிவு செய்தல் மேலும் போக்குவரத்து ஒப்பந்தவியல் தொகுப்பு மூலப்பொருளை கையாளுதல் ஆகும்.

4. **பெயர்ச்சியியல் மேலாண்மைக்கும், வழங்கல் வழி சங்கிலி மேலாண்மைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை கூறு**

| பெயர்ச்சியியல் மேலாண்மை | வழங்கல் வழி சங்கிலி மேலாண்மை |
|---|---|
| 1. தேவைக்கும், அளிப்புக்கும் இடையே உள்ள நிலையான இடைவெளி சரி செய்தல் **அல்லது** நிர்வகித்தலுடன் தொடர்புடையது | மாறும் இயல்பு கொண்ட மதிப்பை மேம்படுத்தும் செயல்களான பொறுப்பேற்றல் தரம் மற்றும் வடிவமைப்பு போன்ற செயல்களை கண்டறிய தொடர்ந்து முயற்சிக்கிறது. |
| 2. அடக்கவிலை குறைப்பதில் கவனம் செலுத்துகிறது | அடக்கவிலையை குறைப்பதில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இலாபத்தை மிகைப்படுத்துதலை நோக்கி (அ) மையப்படுத்தி |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| | இயங்குகிறது. |
| 3. அளிப்பு செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | தேவை செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டது |

**5. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகம் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

1. **உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருள்களைப் பற்றி, வாங்குபவர்கள் மின்னணு வணிகம் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.**
2. **பொருட்களை எப்போது வேண்டுமானாலும் வாங்கும் வாய்ப்பை, மின்னணு வணிகம் வழங்குகிறது.**
3. **பொருட்களின் விலை, கடையில் சென்று வாங்குவதைவிட, குறைவான விலையிலேயே மின்னணு வணிகத்தில் கிடைக்கின்றன.**
4. **மின்னனு மூலமாக புத்தகம் வாங்குதல், மென்பொருட்கள் வாங்குதல் என்பது கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம்.**

## பெருவிடை வினாக்கள்

**1. தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக.**

1) தனி உரிமையியல் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உடன்படிக்கை அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது.
2) தனி உரிமையியல் கால அளவு 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக இருக்கலாம்.
3) இத்தகைய தனி உரிமை காலத்தில், எந்த ஒரு போட்டி வாணிபத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நடந்த, தனி உரிமம் பெற்றவருக்கு உரிமை இல்லை.
4) தனி உரிமை ஒப்பந்தப்படி, தனி உரிமம் பெற்றவர் குறிப்பிட்ட தொகையை, தனி உரிமம் அளித்தவருக்கு செலுத்த ஒப்புக் கொள்கிறார்.
5) தனி உரிமம் கோட்பாட்டின்படி, தனி உரிமம் அளித்தவர் தன்னுடைய பொருள் அல்லது சேவையை எந்த முறையில் வழங்குகிறாரோ அல்லது எம் மாதிரியான படிநிலைகளை பின்பற்றுகிறாரோ அதில் சற்றும் வழுவாமல் அவருக்காக வாணிபத்தை ஏற்பாடு செய்து நடத்த உடன்படுகிறார்.
6) தனி உரிமம் பெற்றவர், தலைமை நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இணங்க தன்னுடைய வாணிபத்தை தனி உரிமை ஒப்பந்த சரத்துகள்படி முறையாக செயல்படுத்த வேண்டும்.

**2. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக.** ( மார்ச் 2019 ), ( செப் 2020 )

1. **கடன் ஏடுகளை பராமரித்தல்:**
   - ❖ தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக் கடன்களை பராமரிக்கும் முழு பொறுப்பினை தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார்.
2. **கடன் எல்லைகளை நிர்வகித்தல்:**
   - ❖ வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையை, தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ இதனால் வணிகத் தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

3. **<u>ரொக்க முன்பணம்</u>**:
   - ❖ கடன் விற்பனையில் ஏறக்குறைய **80%** முன் கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார்.
4. **<u>வசூல் சேவை</u>**:
   - ❖ வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும், இந்த சேவையில் அடங்கும்.
5. **<u>தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்</u>**:
   - ❖ தனி உரிமை பேராள், கடந்த காலங்களில் வாடிக்கையாளரிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபாரச் செய்திகளை உடனுக்குடன் வழங்குகிறார்.

---

### 3. புற ஒப்படைப்பின் நன்மைகளை விவரிக்க ( ஜூன் 2019 )

1. **<u>முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது</u>**:
   - ❖ இதர இணை நடவடிக்கைகளை வெளி நிறுவனங்களிடம் புற ஒப்படைப்பு செய்வதன் காரணமாக, நிறுவனங்கள் தங்களிடம் உள்ள சில தனித்துவமான திறனை செவ்வனே பயன்படுத்தி முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நோக்கங்கள் அடைய இது உதவுகிறது.
2. **<u>பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கிறது</u>**:
   - ❖ புற ஒப்படைப்புச் செய்வதனால், தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
   - ❖ வேலை வாய்ப்புகளை உருவாக்கி ஊக்கம் அளிக்கிறது.
   - ❖ ஏற்றுமதியை விரிவாக்கம் செய்து, பொருளாதாரத்தின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு உதவுகிறது.
3. **<u>வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கிறது</u>**:
   - ❖ நிறுவனங்கள் தங்களின் இணை நடவடிக்கைகளை, வெளிநபர்களுக்குப் புறஒப்படைப்பு மூலம் தொடர் வாய்ப்பு அளிப்பதனால், சிறு வாணிப நிறுவனங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கின்றன.
   - ❖ இது புதிய வேலை வாப்பை ஏற்படுத்துவதற்கான வழியாக அமைவதுடன் அதிக அளவிளான வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வழிவகுக்கிறது.
4. **<u>குறைவான முதலீடுகள்</u>**:
   - ❖ வெளிநபர்களின் திறமைகளை புற ஒப்படைப்பின் மூலம் பயன்படுத்துவதனால், நிறுவனங்கள் தங்கள் இணை நடவடிக்கைகளுக்காக செய்ய வேண்டிய முதலீட்டு தொகை குறைகிறது.
   - ❖ இதன் காரணமாக அத்தொகையை வேறு செயலுக்கு பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியை பெருக்கி இலாபத்தை உயர்த்த இயலுகிறது.
5. **<u>சிறந்த செயலாக்கம்</u>** :
   - ❖ புற ஒப்படைப்பின் மூலம் நிறுவனங்கள் இரண்டு பயன்களை அடைகின்றது.
   - ❖ ஒன்று புற ஒப்படைப்புச் செய்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் முதன்மை செயல்களை திறம்பட செய்து, தங்களை உயர்த்திக் கொள்வது,
   - ❖ இரண்டாவது புற ஒப்படைப்பு பெற்ற நிறுவனங்கள், தங்கள் திறன்களை விரிவாக்குவதன் மூலம், புற ஒப்படைப்புக்கான வாய்ப்புகள் மேலும் பெறும் அளவிற்கு உயர்கின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**4. தொழில் செயல்முறை புறத் திறனீட்டல், அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக**

| தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் | அறிவுசார் செயல்முறை புறத்திறனீட்டல் |
|---|---|
| 1. வெளி நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை அல்லது செயல்களை பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் என்று பெயர் | அறிவு அடிப்படையிலான செயல்களை வெளிநபர்களைப் பயன்படுத்தி தங்களின் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதை அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் என்கிறோம். |
| 2. முதன்மைச் செயல்பாடுகளில் கவனம் செலுத்துதல் | சிறந்த திறமைகளைப் பயன்படுத்துதல் |
| 3. திறனை உயர்த்திக் கொள்ளுதல் | அறிவு மட்டும் பயன்படுத்தும் நோக்கம் |
| 4. அதிக இலாபம் ஈட்டுதல் | **சிக்கலான் பிரச்சினைகளுக்கு, தீர்வைக் கண்டறிதல்.** |
| 5. பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடைதல் | முக்கிய செயல்பாடுகளில் சிறப்பு கவனம் செலுத்துதல் |
| 6. **வளர்ந்து வரும் தெவைகளுக்கு ஏற்ப, சேவைகளை பரிமாற்றம் செய்து கொள்ளுதல்** | இடர்படுகளைக் குறைத்தல் |

**5. மின்னணு வணிக மாதிரிகள் பற்றிக் குறிப்பு வரைக**

1. **<u>தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான வணிகம்</u>** :
   - ❖ இம்முறையில் தொழில் நிறுவனம், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நேரடியாக பொருளை விற்கின்றது.
2. **<u>தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான வணிகம்</u>** :
   - ❖ வியாபார நிறுவனங்கள் தங்களுக்கிடையேயான பொருள் வாங்கல் விற்றல்களை மின்னணு வர்த்தகத்தின் மூலம் செய்து கொள்வது இம்முறையில் அடங்கும்.

   <u>எ.கா</u> : ஸ்னாப்டீல், பிளிப்கார்ட், அலிபாபா, இண்டியாமார்ட், டிரேட் இந்தியாகாம்
3. **<u>நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம்</u>** :
   - ❖ இம்முறையில் கைபேசி மூலமாகவோ, இணையதள விளம்பரத்தைப் பார்த்தோ, மின்னணு ஏல முறையிலோ அல்லது ஒரு இடத்தில் இருக்கும் வாடிக்கையாளருக்கோ பொருள்களை விற்க முடியும்.

   <u>எ.கா</u> : ஒன்ஸ் அகெயின் ஸ்டோர் டாட் காம் என்பது பெண்களுக்கான நவீன பயன்படுத்தப்பட்ட பொருட்கள் வாங்குவதற்கான இணையதளம், மற்றவர்கள் குயிக்கர், ஒ.எல்.எக்ஸ், ஈபே மூலம் பயன்பெறலாம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **வாடிக்கையாளருக்கும் தொழில் நிறுவனத்திற்கும் இடையேயான வணிகம்** :
   - ❖ தானியங்கள், மின்னணு பொருட்கள், அறைகலன் மற்றும் இதர பொருட்கள் இணையதளம் மூலம், வாடிக்கையாளரால் தேவைப்படும் தொழில்களுக்கு விற்கப்படுவது இம்முறையில் அடங்கும்.

   எ.கா : நாக்ரி டாட் காம் மற்றும் மான்ஸ்டர் டாட்காம்

5. **தொழிற் நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையேயான வணிகம்** :
   - ❖ பொருள் மற்றும் சேவைகள் அரசுத் துறைக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர்.

   எ.கா : டி.சி.எஸ். நிறுமம் கடவுச் சீட்டு உரிம விண்ணப்ப நடைமுறையினை வெளிநாட்டு உரிமம் வழங்கிட இந்திய அரசுக்காக தன்னுடைய மென் பொருள் மூலம் பணியை முடித்து வழங்குகிறது.

# அலகு - 5 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள் மற்றும் தொழில் நன்னெறிகள்

## அத்தியாயம் 17. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள்

## குறுவிடை வினாக்கள்

1. **சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் யாது?**
   - ❖ ஒவ்வொரு தொழில் உரிமையாளர்களும், தங்கள் தொழில் மூலம் பெறும் இலாபத்தில் ஒரு பகுதியை சமுதாய மேம்பாட்டிற்கே செலவழிக்கின்றனர்.
   - ❖ இத்தகையப் பயன்பாட்டிற்கு தொழில் ஒழுங்குணர்வு பொறுப்பாகும்.
   - ❖ இதனையே தொழில் சமூகப் பொறுப்புணர்வு என்று அழைக்கின்றோம்.

2. **சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக.**
   - ❖ தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது.
   - ❖ அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக அமைகிறது.
   - ❖ நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்து தரப்பினருக்கும் வருமானத்தை பகிர்ந்தளித்தல் போன்றவை தீர்மானிக்கும் உயர் பொறுப்பு தொழில் நிறுவனங்களுக்கு உண்டு.

3. **தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?**
   - ❖ சமூகக் கடமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு, நிறைவேற்றும் தொழில் நிறுவனங்கள் அதிக சுதந்திரத்தைப் பெறுகின்றன.

   எ.கா:

   - அரசாங்கம் கலப்படம், கள்ளச்சந்தை மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளை வியாபாரிகள் ஈடுபடாமல் இருக்க, நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை இயற்றியது.

- ஆகவே, நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்க்க சமூக பொறுப்புணர்வு அவசியமாகும்.

**4. பங்குதாரர்கள் என்று யாரை அழைக்கலாம்?**

❖ ஒரு தொழில் **அமைப்பின்** உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், பணியாளர்கள், சரக்கு அளிப்போர், வாடிக்கையாளர்கள் **ஆகியோர்களை** பங்குதாரர்கள் என அழைக்கப்படுகின்றன.

**5. நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?** ( மார்ச் 2020 )

❖ இது சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும்.

❖ ஆனால், இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடாதவையாகும்.

எ.கா:

- ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்த விளம்பரம் மேற்கொள்ளும்போது அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்கத்தக்க வகையில் இருத்தல் வேண்டும்.
- இத்தகைய பொறுப்புகளை, தொழில் அமைப்புகள் தானே விருப்பப்பட்டு கடைப்பிடிக்க வேண்டும்

## சிறுவிடை வினாக்கள்

**1. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.**

❖ பீட்டர் எஃப் டிரக்கர் **அவர்களின் கூற்றுப்படி**, "சமுதாய பொது நலன் மேம்பாடு கருதி, உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை உறுதித்தன்மை மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்".

**2. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் தேவை என்ன என்பது பற்றி நீர் ஏன் சிந்தனை செய்யக் கூடாது? சமூகப் பொறுப்புணர்வின் தேவைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.**

( ஜூன் 2019 )

(i) சுய ஆர்வம் (ii) சமுதாய உருவாக்கம் (iii) சமூக அதிகாரம் (iv) சமுதாயத்தின் உருவகம்
(v) பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு (vi) தடையற்ற நிறுவனம்
(vii) சட்டம் மற்றும் ஒழுங்கு (viii) தார்மீக பொறுப்புணர்வு (ix) சமூக கலாச்சார நெறிமுறைகள் (x) தொழில் முறைமை (xi) பொறுப்பாண்மை தத்துவ நெறி
ஆகியவை தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் தேவையாகும்

**3. சமூக பொறுப்புணர்வு சார்ந்த தொழில் நிறுவனங்கள் மூலம் பணியாளர்கள் பெறும் நன்மைகள் யாவை?**

1) பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்.
2) பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்
3) நல்ல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல்
4) பணிப்பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல். அதாவது வருங்கால



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

வைப்பு நிதி, குழுக் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் பணி ஓய்வு பயன்பாடு போன்ற வசதிகள்

5) அவர்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் அதாவது வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, சிற்றுண்டி, சாலை வசதி, குழந்தை காப்பகங்கள் மற்றும் பிற வசதிகள்

6) குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்

**4. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக** ( செப் 2020 )


(i) பொருளாதார பொறுப்புணர்வு

(ii) சட்டப் பொறுப்புணர்வு

(iii) தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு

(iv) தன் விருப்ப பொறுப்புணர்வு

**5. தொழில் அமைப்புகளுக்கு சமூக பொறுப்புணர்வின் அவசியம் யாது என்பதை வெளிக் கொணர்க**






Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெருவிடை வினாக்கள்

1. **சமூகப் பொறுப்புணர்வின் பொருள் மற்றும் அதன் தேவைகள் பற்றி தெளிவாக விளக்குக**

* ஒவ்வொரு தொழில் உரிமையாளர்களும், தங்கள் தொழில் மூலம் பெறும் இலாபத்தில் ஒரு பகுதியை, சமுதாய மேம்பாட்டிற்கே செலவழிக்கின்றனர்.
* இத்தகையப் பயன்பாட்டிற்கு தொழில் ஒழுங்குணர்வு பொறுப்பாகும்.

1 <u>சுய ஆர்வம்</u> :

- ❖ தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு, சமுதாய எதிர்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன.
- ❖ பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்

  <u>எ.கா</u>: அதிக ஊதியம் வழங்குதல், சாதகமான பணிச்சூழலை ஏற்படுத்துதல், தொழிலாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியை அதிகரித்தல், பணியாளர் சுழற்சி மற்றும் வருகைப் பதிவு இன்மையை குறைத்தல்.

2 <u>சமுதாய உருவாக்கம்</u> :

- ❖ நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றன.
- ❖ எனவே, தொழில் நிறுமங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும்.

3 <u>சமூக அதிகாரம்</u> :

- ❖ தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது.
- ❖ அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக அமைகிறது.

4 <u>சமுதாயத்தின் உருவகம்</u> :

- ❖ சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்.
- ❖ ஒரு வெற்றிகரமான தொழில் மூலம், தொழிலாளர் மத்தியில் நல்ல உறவு முறை ஏற்படுத்துதல் நுகர்வோர் மற்றும் பொருள் பகிர்வாளர்களுக்கும் உதவி புரிய இயலும்.

5 <u>பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு</u> :

- ❖ தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர்.
- ❖ நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றன.

6 <u>சட்டம் மற்றும் ஒழுங்கு</u> :

- ❖ நாட்டின் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதன் மூலம், தொழில் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட இயலும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. சமூகப் பொறுப்புணர்வின் சாதகமான விவாதங்களை புரிந்து கொள்ளுமாறு எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க

1. பங்குநர்களின் நலன் பாதுகாத்தல் :
   - ❖ ஒரு தொழில் நிறுவனம் அதன் கூட்டாளிகளின் அல்லது பங்குதாரர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் செயல்படுகின்றன.

     எ.கா : பங்குதாரர்கள், கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் மற்றும் விநியோகிப்பாளர்கள் போன்றவர்கள்
2. சமுதாய மேம்பாடு :
   - ❖ தொழில், சமுதாயத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது.
   - ❖ இது சமுதாயத்தின் ஆதரவு உள்ளீடாக விளங்குகிறது.
   - ❖ சமூகப் பொறுப்புணர்வின் நடத்தையானது தொழில் மற்றும் சமூகத்திற்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு அவசியமானதாக கருதப்படுகிறது.
3. சமுதாய தாக்கத்தை அளவிடுதல் :
   - ❖ ஒரு தொழில் நிறுவனம், தனது செயல்பாட்டிற்கு உட்பட்ட காலத்தில் பல முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.
   - ❖ இத்தகைய செயல் நடவடிக்கைகள், சமுதாயத்தின் நலன்கள் மற்றும் மதிப்புகள் மீது நிலையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
4. முறையான சமூக அதிகாரம் :
   - ❖ பெரும்பாலான நிறுவனங்கள் சமூக அதிகாரத்தின் மூலம், பலதரப்பட்ட செயல்பாடுகளை போற்றத்தக்க வகையில் மேற்கொள்கின்றன.
   - ❖ சமுதாய பொறுப்புணர்வு இன்மையின் மூலம், சமூக அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுகிறது.
   - ❖ இத்தகைய சூழலில் சமுதாய பொறுப்புணர்வு மற்றும் சமுதாய அதிகாரம் இடைய சமநிலை இருத்தல் வேண்டும்.
5. சட்டபூர்வ தன்மை :
   - ❖ இது நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வைப் போற்றத்தக்க ஒரு பண்பாக விளங்குகிறது.
   - ❖ சமூகப் பொறுப்புணர்வு தொழிலின் பொருளாதார நோக்கங்களை அடைய பெரிதும் உதவுகிறது.
   - ❖ மேலும் சமூக வாழ்க்கையை உயர்த்துவதன் மூலம், தொழிலின் சிறந்த வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் நல்ல நண்பர்களை பெற முடிகின்றது.
6. தொழில்முறை நடத்தைகள் :
   - ❖ தொழிலில் பண்பட்ட மேலாளர்கள் ஒரு சிறந்த சமூக உணர்வை கொண்டவராக இருத்தல் விரும்பத்தக்கது.
7. பொதுக்கருத்து :
   - ❖ சமூகப் பொறுப்பை ஒரு நோக்கமாக ஏற்றுக் கொள்வதன் மூலம், பொதுமக்களின் கருத்துகளை மேம்படுத்த உதவும்.
   - ❖ அதன் மூலம் தொழிலுக்கான ஒரு நல்ல மதிப்பை ஏற்படுத்த முடியும்.

     எ.கா : பூங்கா அமைத்தல், விழிப்புணர்வு முகாம் ஏற்படுத்துதல்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**3. சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான விவாதங்கள் யாவை? ( செப் 2020 )**

1. **கருத்து தெளிவின்மை** :
   - ❖ சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் தெளிவாக வரையறுக்கப்படா**ததால்**, சமூகப் பொறுப்புணர்வு கோட்பாட்டை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது
2. **பொருளாதார இலக்குகளை தளர்த்தல்** :
   - ❖ சமூகப் பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்வதன் மூலம், வணிக பொருளாதார இலக்குகளையும் சமரசம் செய்கின்றன.
   - ❖ தொழில் என்பது, ஒரு பொருளாதாரம் சார்ந்த நிறுவனமாகும். மேலும் அதன் உரிமையாளருக்கு அதிகபட்சம் இலாபம் ஈட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படு**வதால்,பொருளாதாரக் கொள்கைகள் பின்னடைவு செய்கிறது.**
3. **சமூகத்திறன் இன்மை** :
   - ❖ தொழில் அமைப்புகள் மற்றும் அதன் மேலாளர்கள் சமூகம் சார்ந்த கடமைகள் பற்றி நன்கு அறிவதில்லை.
   - ❖ இதனால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம் போன்ற சிறப்பு சமூக சேவை நிறுமங்கள் சமூகப் பிரச்சனைகளை அல்லது சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது.
4. **நுகர்வோர் மீதான சுமை** :
   - ❖ தொழில் அமைப்புகள் சமூகம் சார்ந்த பிரச்சனைகளில் ஈடுபடுகின்ற போது அதற்கான செலவு அதிகரிக்கின்றது.
   - ❖ அத்தகைய செலவினங்களை ஈடுகட்ட, தொழில் நிறுவனங்கள் பொருளின் விலையை உயர்த்தி அந்த சுமையை நுகர்வோர்களுக்கு மாற்றிவிடுகின்றன.
5. **அதிகாரமற்ற பொறுப்பு** :
   - ❖ தொழில் அமைப்புகள் பொருளாதாரம் சார்ந்த அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது.
   - ❖ ஆனால், அது சமூகம் சார்ந்த அதிகாரங்கள் கொண்டவை அல்ல.
   - ❖ சமூக அதிகாரத்தை சமூகப் பொறுப்புணர்வுடன் திணிப்பது நியாயமற்றதாகும்.
6. **பொறுப்புகளை தவறாகப் பயன்படுத்துதல்** :
   - ❖ சமூகப் பொறுப்புகளை ஏற்பதன் மூலம், நிறுமத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதன் நேரம் மற்றும் வளங்கள் குறைகின்றன.
   - ❖ இதனால் தொழில் அமைப்புகள் மேலும் நலிவடைய வாய்ப்பு உள்ளது.

---

**4. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் குழுக்களை விவரி?**

1) **உரிமையாளர்கள் மீதான பொறுப்புணர்வு** :
   - ❖ எவர் ஒருவர் சொந்த மூலதனம் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்கி, அதில் ஏற்படும் இடர்களை ஏற்கின்றாறோ அவரே தொழிலின் உரிமையாளராவார்.
   - ➢ உரிமையாளர்கள் ஏற்கும் தொழில் தொடர்பான பொறுப்புணர்வுகள் கீழ்வருமாறு

      1. தொழிலை சிறப்பாக இயக்குதல்
      2. மூலதனம் மற்றும் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தலாம்.
      3. மூலதனத்தின் மீதான வளர்ச்சியை வரவேற்கும் வகையில் இருத்தல்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. நியாயமான வருமானம் தொடர்ந்து அளிக்கத்தக்க வகையில் மூலதனத்தை முறையாக முதலீடு செய்து கொள்வதாகும்.

2) <u>முதலீட்டாளர்கள் மீதான பொறுப்புணர்வு</u>:

❖ தொழிலுக்கு தேவையான நிதியினை மூலதனமாக கீழ்க்கண்ட வழிகளில் எவர் ஒருவர் அளிக்கின்றாரோ அவரே முதலீட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றார்.

❖ அதாவது, பங்குகள், பத்திரங்கள், வைப்புகள் மற்றும் பிற. மேலும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களும் இத்தகைய பிரிவில் உள்ளடங்குவார்கள்.

➢ முதலீட்டாளர்களின் பொறுப்புகள் பின்வருமாறு

1. மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல்
2. முதலீட்டின் மீதான வட்டியை தொடர்ந்து செலுத்துதல்
3. குறித்த காலத்திற்குள் மூலதனத் தொகையை திருப்பிச் செலுத்துதல் போன்றவைகள் ஆகும்.

3) <u>பணியாளர்கள் மீதான பொறுப்புகள் பின்வருமாறு</u> :

❖ எந்த ஒரு தொழில் அமைப்பிற்கும் பணியாளர்கள் அல்லது தொழிலாளர்கள் மிகவும் அவசியமாகும்.

❖ பணியாளர்கள் மன நிறைவு பெறுவதன் மூலம் நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும் வெற்றி பெறுகின்றன.

➢ <u>பணியாளர்கள் பொறுப்புகள்</u>

1. பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்.
2. பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்.
3. நல்ல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல்.
4. பணிப்பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல்.
5. அவர்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.
6. குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்

4) <u>பொருள் அளிப்பார்கள் தொடர்பான பொறுப்புணர்வு</u> :

❖ உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு தேவையான, கச்சாப் பொருட்களை யார் வழங்குகின்றாரோ அவரே பொருள் வழங்குநர் எனப்படுவார்.

❖ நுகர்வோர்களுக்கு தேவையான முடிவுப் பொருட்களை வழங்கும் சிலரை பதிவாளர் என அழைக்கப்படுகிறார்கள்.

➢ <u>வழங்குநரின் பொறுப்புகள்</u>

1. பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொடர் ஆணையை வழங்குதல்.
2. நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்புறுதிகளை வழங்குதல்.
3. கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல்
4. கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல்

5) <u>வாடிக்கையாளர் தொடர்பான பொறுப்புகள்</u> :

❖ வாடிக்கையாளரின் ஆதரவு இல்லாமல், எந்த தொழிலும் செயல்படுவதில்லை. தொழில் சமூகப் பொறுப்புணர்வில் வாடிக்கையாளர்கள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர்.

1. பொருட்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்க, வகை செய்ய வேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்தில் மேம்பாடு இருத்தல் வேண்டும்.
3. பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

**5. சமூகப் பொறுப்புணர்வை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? (மார்ச் 2019)**

1. **பொருளாதார பொறுப்புணர்வு** :
   - ❖ அடிப்படையில் தொழில் அமைப்புகள் அனைத்தும் தங்களின் பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ள இயங்கிவரும் அமைப்புகளாகும்.
   - ❖ அப்படி பொருளாதார நலனை அடைய முனையும் பொழுது, சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன.

   எ.கா : மக்களுக்கு தேவைப்படும் பொருள்களை தரமாக வழங்குவதில், நியாயமான இலாபம் ஈட்டல், நுகர்வோரின் புகார்களை தீர்த்தல் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்ற பல சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன.

2. **சட்டப் பொறுப்புணர்வு** :
   - ❖ ஒவ்வொரு தொழில் அமைப்புகளும் அதற்கான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கான வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டும்.
   - ❖ அத்தகைய சட்ட திட்டங்கள் சமுதாய நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே, எந்த ஒரு வியாபார அமைப்பும் ஒரு சமூக பொறுப்புணர்வை உள்ளுணர்வாகக் கொண்டு செயல்படும் அமைப்பாக இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

3. **தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு** :
   - ❖ இது சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும்.
   - ❖ ஆனால், இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும்.

   எ.கா : ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது, அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்க தக்க வகையில் இருத்தல் வேண்டும்.

4. **தன் விருப்ப பொறுப்புணர்வு** :
   - ❖ இத்தகைய பொறுப்பு ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் நன்கொடை அளித்தல் அல்லது வெள்ளம் மற்றும் நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவி செய்தல்,
   - ❖ மேலும், தொழில் அமைப்புகள் தங்கள் மூலதனத்தை, ஊக வாணிபத்தில் முதலீடு செய்வதை தவிர்த்து, ஒரு நல்ல பலன் தரத்தக்க வகையில் நிறுவனத்தில் முதலீடு செய்வது முதலீட்டாளர்களின் வருமானத்தை உயர்த்துதல் போன்ற பொறுப்புகள் தன் விருப்ப பொறுப்புகளாகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அத்தியாயம் 18. தொழில் நன்னெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை

## குறுவிடை வினாக்கள்

1. **நெறிமுறை என்றால் என்ன? ( ஜூன் 2019 )**
   - ❖ ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய தரம் பற்றி தெளிவான கருத்தை தெரிவிப்பதையே நெறிமுறை எனப்படும்

2. **குறியீடு என்பதன் பொருள் என்ன?**
   - ❖ தொழில் நடைமுறைகள் மற்றும் அதன் செயல்திறன் போன்ற அளவீடுகளை நிறுமம் தன்னை மற்ற நிறுவனங்கள் பின்பற்றி வரும் சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிட்டு பார்க்க வகை செய்வது குறியீடு ஆகும்

3. **நெறிமுறை நடத்தைகள் பாதிக்கும் காரணிகள் இரண்டைக் கூறுக.**
   1. பொருட்களை, நியாமற்ற விலையில் விற்பது.
   2. நுகர்வோரின் குறைகளை தீர்க்கப்படாமல் இருப்பது.
   3. தரமான பொருட்களைக் வழங்காமல் இருத்தல்.

4. **பெருநிறுவன ஆளுமையின் தேவை என்ன?**
   - ❖ நிறுமத்தின் நோக்கங்களை வடிவமைத்து அதன் செயல்பாடுகளை உன்னிப்பாக கண்காணிக்க உதவுகிறது.
   - ❖ இதன் மூலம் தனிப்பட்ட நபரின் இலக்குகள், சமுதாயத்தின் இலக்குகள் மற்றும் பொருளாதார இலக்குகள் ஆகியவற்றிற்கிடையே சமநிலை பெற்றிட இக்கோட்பாடு வழிகோலுகிறது.
   - ❖ பெருநிறுவன ஆளுமை கோட்பாட்டின் மூலம், அனைத்து பங்குதாரர்களின் நலம் மற்றும் பாதுகாப்பு பெருமளவு பேணிக்காக்கப்படுகிறது.

5. **பன்னாட்டு நிறுவனங்கள் என்றால் என்ன? ( மார்ச் 2019 )**
   - ❖ ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தொழில் செய்யும் ஓர் அமைப்பே, பன்னாட்டு நிறுமம் ஆகும்.
   - ❖ பன்னாட்டு நிறுமம், பல நாடுகளில் செயல்படும்.
   - ❖ ஆனால், அதன் தலைமை நிர்வாகம், ஒரு நாட்டிலிருந்து மட்டுமே நிர்வகிக்கப் படுகிறது.

## சிறுவிடை வினாக்கள்

1. **தொழில் நெறிமுறைகள் - வரையறுக்க.**
   - ❖ டாடா குழுமத்தலைவர் திரு.ரத்தன் டாடா குறிப்பிடும்பொழுது "தொழில் அமைப்புகள் தங்களின் தனிப்பட்ட நலனுக்கு அப்பாற்பட்டு சமுதாய நலனை உள்ளடக்கி செயல்படவேண்டும்".
   - ❖ மேலும், பணம் சம்பாதிப்பது மட்டுமே குறிக்கோளாக கொண்டுள்ள ஒரு தொழிலை ஓர் ஏழ்மை வகை தொழில்" எனலாம் என்று ஹென்றி போர்டு குறிப்பிடுகிறார்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **தொழில் நெறிமுறைகளின் கருத்து என்ன?**
   - ❖ **தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில்** செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குணர்வு தரமே வியாபார நன்னெறி என இலக்கணம் தரப்பட்டுள்ளது.
   - ❖ இத்தகைய தர நிலைகள், தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன.
   - ❖ மேலும் தொழில் நெறிமுறைகள், வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது.

3. **வணிகத்தில் நெறிமுறைகள் ஏன் அவசியம்?**
   - ❖ நன்னெறி செயல்கள், எப்போதும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படும் தன்மை கொண்டது.
   - ❖ உதாரணமாக, வாடிக்கையாளரிடமிருந்து நியாயமான விலையை வசூலிப்பதோடு, பொருட்களை சரியான எடையில் அளித்தல், தொழிலாளர்களை சரியான முறையில் வழி நடத்துவது மற்றும் நியாயமான முறையில் இலாபம் ஈட்டுவது போன்றவையாகும்.
   - ❖ **இது, வாழ்க்கை தரம் மற்றும் தொழிலின் தரத்தையும் மேம்படுத்துகிறது.**

4. **பெருநிறுவன ஆளுகை மூலம் பங்குதாரர்கள் பெரும் நன்மைகள் யாவை?**

   **( மார்ச் 2020 )**

   1. பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல்
   2. முதலீட்டாளர்களின் (அ) பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை மற்றும் பங்குகளை வாங்கச் செய்தல்
   3. அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது.
   4. வள ஆதாரங்கள், சிறந்த முறையில் பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.
   5. **தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.**

5. **பன்னாட்டு நிறுவனத்தின் வேலைவாய்ப்புப் பற்றி ஒரு உதாரணத்துடன் விளக்குக.**
   - ❖ இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் ஊடுருவல், அதன் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மிகவும் பயன் உள்ளதாகவும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புகளையும் அளித்து வருகிறது.

     ஏ.கா : ஐ.பி.எம். (IBM), மைக்ரோசாப்ட் நிறுவனம், பெப்சிகோ, சோனி, வோடபோன், ரிபோக்

## பெருவிடை வினாக்கள்

1. **தொழில் நெறிமுறைகளின் பல்வேறு முக்கியக் கூறுகளை விளக்கவும்.**

   **( ஜூன் 2019, மார்ச் 2020 )**

   1. **உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு :**
      - ❖ நன்னெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும்.
      - ❖ தார்மீக நன்னெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி, அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம்பெறச் செய்ய வேண்டும்.
   2. **நன்னெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்:**
      - ❖ தொழில் அமைப்புகள், நன்னெறி விதிகளை உருவாக்கி, அதை எழுத்து வடிவில், பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ இந்த நன்னெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும்.

3. **நன்னெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்** :
   - ❖ நன்னெறி விதிமுறைகளை, ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைப்பிடிக்கின்றனவா என ஆய்வு செய்ய கண்காணிப்பு அவசியம்.
   - ❖ இதனை நன்னெரி கண்காணிப்பு என்று அழைப்பர்.
4. **அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்** :
   - ❖ நன்னெறி விதிகளுக்கு, பணியாளர்கள் முழு ஆதரவைத் திரட்ட, நன்னெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப்பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி, அவர்களின் எண்ணப் போக்கை அறிந்து, அதற்கு ஏற்றபடி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு குழு மூலம் நன்னெறி விதிகளை உருவாக்கப்பட வேண்டும்.
5. **நன்னெறி பலனை அளித்தல்** :
   - ❖ நன்னெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய, நன்னெறி தணிக்கை அவசியம். ஆனால் சில வகை செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம்.

<u>எ.கா</u> : ஊழியர்களின் ஆற்றல், ஒழுக்கம், பொருளின் தரம் கவனம் போன்றவைகள்.

- * இருப்பினும் அவைகளுக்கும் எண் வடிவம் அளித்து தொழிலமைப்பின் ஒவ்வொரு செயலையும், நன்னெறி விதிகள் என்ற தர அளவுகோல்களைக் கொண்டு அளத்தல் அவசியம்.

---

## 2. தொழில் நெறிமுறையின் குறியீடு பற்றி விவரிக்கவும்.

- ❖ தொழில் நடைமுறைகள் மற்றும் அதன் செயல்திறன் போன்ற அளவீடுகளை நிறுமம் தன்னை மற்ற நிறுவனங்கள் பின்பற்றி வரும் சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிட்டு பார்க்க வகை செய்கிறது.
- ❖ நான்கு வகையான அடிப்படை தரக்குறியீடுகள் நடைமுறையில் உள்ளன. அவைகள் உள்நாட்டு தரக்குறியீடு, போட்டிக்குறிய தரக்குறியீடு, செயல்பாட்டு தரக்குறியீடு மற்றும் பொதுவான தரக்குறியீடு எனப்படும்.
- ❖ உள்நாட்டு தரக்குறியீடு ஒரு தொழிலின் செயல் மற்றும் அதன் அமைப்பில் உள்ள செயல்முறைகளையும் ஒப்பிடப்படுகிறது.
- ❖ போட்டி தரக்குறியீடு ஒரு போட்டியாளரின் மற்றும் ஒரு போட்டியாளருடன் நேரடியாக போட்டியிடுவதை ஒப்பிடப்படுகிறது.

1) ஒரு பொருள், சேவை அல்லது அதன் நடைமுறை போன்றவற்றை தரக்குறியீட்டுக்கு தேர்வு செய்யப்படுகிறது.
2) முக்கிய செயலாக்கத்தின் அடிப்படை அளவீட்டை, அடையாளம் காணல்.
3) நிறுமம் தேர்ந்தெடுக்கும் இடம் அதன் உட்புற பகுதியே தரக்குறியீடு ஆகும்.
4) செயலாக்கம் மற்றும் நடைமுறை மீதான தகவல் சேகரிப்பு.
5) உலகின் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்புகள் பற்றி கண்டறிதல் மற்றும் தகவல் பகுப்பாய்வு.

**<u>உலகின் பல்வேறு பகுதியில் உள்ள தரக்குறியீடுகள்</u>**:

- ❖ அனைத்து ஆசிய நாடுகளில் இயங்கி வரும் பட்டியல் இடப்பட்ட நிறுவனங்களுக்கு, தன்னிச்சையுடன் செயல்படும் இயக்குநர்கள் தேவைப்படுகின்றன.

- குறைந்தபட்சம், நிர்வாகக்குழுவில் மூன்றில் ஒரு பங்கு இயக்குநர்கள் தன்னிச்சையுடன் செயல்படும் நபர்களாக இருக்க வேண்டும்.
- 2012ல் சிங்கப்பூர் ஆளுகை குறியீடு அமைப்பு தன்னிச்சையாக செயல்படும் இயக்குநர்களை பரிந்துரை செய்கிறது.
- இருப்பினும் குழுவின் தலைவருக்கு போதிய சுதந்திரம் அளிப்பதில்லை.
- வியட்நாம் தவிர்த்து மற்ற அனைத்து ஆசிய நாடுகளிலும் பொருளாதாரத்தில் தணிக்கை மற்றும் ஊதியம் போன்றவற்றில் குழுக்களின் பரிந்துரை தேவைப்படுகிறது.
- சீனாவில் தணிக்கை குழுவின் மூலமே தன்னிச்சையாக செயல்படும் இயக்குநர்கள் உருவாக்கப்படுகிறார்கள்

**3. நிறுவன ஆளுகையின் முக்கியத்துவத்தை பங்குதாரர்களின் நிலையிலிருந்து விளக்குக.**

- பெருநிறுவன ஆளுகை கோட்பாட்டின் மூலம் அனைத்து பங்குதாரர்களின் நலம் மற்றும் பாதுகாப்பு பெருமளவு பேணிக் காக்கப்படுகிறது.

1) நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம், நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.
2) தொழில் வளர்ச்சியின் நிலையான நலன்களை சீரமைத்தல்.
3) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல்.
4) முதலீட்டாளர்களின் மத்தியில், நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கச் செய்தல்.
5) நிறுமங்களுக்கான மூலதன செலவினை குறைக்கின்றன.
6) பங்கு விலையின் மீது எதிர்மறை தாக்கத்தை கொண்டுள்ளது.
7) பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள், தங்களின் குறிக் கோள்கள் அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது.
8) தேவையற்ற கழிவு / விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்.
9) நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் கூட்டுகிறது.
10) அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது.
11) வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.
12) தொழில் நெறிமுறைகளை நெறிப்படுத்துகிறது.

**4. அதிகரித்து வரும் பன்னாட்டு நிறுவனங்களின் பலன்களை விவரி.**

1) உலகளாவிய வாய்ப்புகள் இருப்பதாக கருதினாலும், சில நாடுகளில் மட்டுமே இந்நிறுவனங்கள் தொழிலை நடத்துகிறது.
2) பன்னாட்டு அளவில், தங்கள் சொத்துகளில் ஒரு கணிசமான பகுதியை முதலீடு செய்கிறது.
3) இவ்வகை நிறுவனங்கள், மிகப்பெரிய நிறுவனங்கள் / தொழில் அமைப்புகளைக் கொண்டு இயங்கி வருகிறது.
4) இந்நிறுவனங்கள் பன்னாட்டு அளவில், உற்பத்தியை மேற்கொள்கிறது மற்றும் பல நாடுகளில் தொழிற் கூடங்களையும் இயக்கி வருகின்றது.
5) உலகளாவிய கண்ணோட்டத்தில், நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள பன்னாட்டு நிறுமங்கள் வகை செய்கிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

6) பன்னாட்டு நிறுமங்கள், ஒரு சில நாடுகளில் மட்டும் உற்பத்தி செய்து பல்வேறு நாடுகளில் விற்பனையை மேற்கொள்கிறது.
7) பன்னாட்டு நிறுமங்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக பெருநிறுவனங்களின் தொழிலில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

---

**5. இந்தியாவில் உள்ள நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள் பற்றி சர்வதேச தர நிர்ணயத்தின் பங்கு பற்றி விவாதிக்க.**

**ஆசியா**:

- அனைத்து ஆசிய நாடுகளில் இயங்கி வரும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு, தன்னிச்சையுடன் செயல்படும் இயக்குநர்கள் தேவைப்படுகின்றனர்.
- குறைந்தபட்சம் நிர்வாகக் குழுவில் மூன்றில் ஒரு பங்கு இயக்குநர்கள் தன்னிச்சையுடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்.
- 2012ல் சிங்கப்பூர் ஆளுகை குறியீடு அமைப்பு தன்னிச்சையாக செயல்படும் இயக்குநர்களை பரிந்துரை செய்கிறது.
- இருப்பினும் குழுவின் தலைவருக்கு போதிய சுதந்திரம் அளிப்பதில்லை.
- வியட்நாம் தவிர்த்து மற்ற அனைத்து ஆசிய நாடுகளிலும் பொருளாதாரத்தில் தணிக்கை மற்றும் ஊதியம் போன்றவற்றில் குழுக்களின் பரிந்துரை தேவைப்படுகிறது.
- சீனாவில் தணிக்கை குழுவின் மூலமே தன்னிச்சையாக செயல்படும் இயக்குநர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்**:

- நிறுவனங்களின் முதலீட்டாளர்களின் குழுவால் சி.ஐ.ஐ. (CII) நிறுமங்களின் ஆளுமைக்கான கொள்கை குறைந்தபட்சம் 2/3 பங்கு இயக்குனர்கள் சுதந்திரத்தன்மை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.
- ஒரு நியமனக் குழு மற்றும் நிறுவன ஆளுகைக்கு ஆகியவை மூன்று தரநிலைக் குழுக்களில் ஒன்றாகும்.
- மேலும் என்.ஒய்.எஸ்.இ. (NYSE) தணிக்கைக்குழு மற்றும் இழப்பீட்டுக் குழுவோடு சேர்ந்து முற்றிலும் சுதந்திரமான இயக்குநர்கள் உருவாக்கப்படவேண்டும்.
- ஜீ 20 ஓ, இ, சி, டி, கோட்பாடுகள் நியமனக் குழு உருவாக்கம் இணக்கமான முறையில் உருவாக்கப்பட்ட நடைமுறைகளை ஊக்கப்படுத்துகிறது.
- சீரான மற்றும் தகுதியான குழுக்கள் தேடலை ஒருங்கிணைக்கவும் வசதியளிக்கிறது.

**ஜப்பான்** :

- **2014 - ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்கள், தன்னார்வ இலக்குகளைக் முதலில் கொண்டிருந்தன.**
- **2015 - ஆம் ஆண்டில், எப்.டி.எஸ்.சி 100 ( FTSE 100 ) பைனாசியல் டைம்ஸ் ஸ்டாக் எக்ஸ் செஞ்ச் வங்கிகளில் 25 விழுக்காடு பெண்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என குழுவால் முடிவு செய்யப்பட்டது.**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அலகு - 6 தொழில் நிதியியல்

## அத்தியாயம் 19. தொழில் நிதிமூலங்கள்

### குறு விடைவினாக்கள்

1. **கடன் பத்திரங்கள் பற்றி குறிப்பு வரைக.**
   - ❖ கடன்பத்திரம் என்பது, நிறுமத்தின் மூலம் திரட்டப்பட்ட கடன்கள் குறித்த வெளிப்படையான அத்தாட்சியாகும்.
   - ❖ கடன்பத்திரங்கள், நிறுமத்திற்கு தேவையான நீண்டகால முதலைத் திரட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.
   - ❖ கடன்பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கடன்பத்திரதாரர் என்று அழைக்கப்படுகிறார்.
   - ❖ நிறுமம் இலாபம் ஈட்டினாலும் அல்லது நட்டம் ஏற்பட்டாலும் கடன்பத்திரதாரர்களுக்குக் கண்டிப்பாக வட்டி வழங்கப்பட வேண்டும்.
   - ❖ வட்டியைச் செலுத்தத் தவறினால் நிறுமம் கலைப்புக்குள்ளாக நேரிடும்.

---

2. **பொது வைப்பு என்றால் என்ன?** ( செப் 2020 )
   - ❖ பொது மக்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம், தங்கள் சேமிப்பை, வைப்பு தொகையாக முதலீடு செய்வதற்கு பொது வைப்பு என்று பெயர்.

---

3. **கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.**
   - ❖ கடனாகப் பெறப்பட்ட நிதிகள் எனபது, கடன் அல்லது புறமூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது.

   ஏடுத்துக்காட்டு :

   1. கடன் பத்திரங்கள் 2. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன்
   3. பொது வைப்பு 4. வணிகக் கடன் 5. குத்தகை நிதி 6. வணிகத் தாள்
   7. கடன வசூல் முகமை

---

4. **உட்புற நிதி மூலங்களின் கீழ் வகைப்படுத்தப்படும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிபிடுக.**
   1. இறுத்தி வைக்கப்பட்ட ஆதாயம்
   2. பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்
   3. கடனாளிடமிருந்து பெற வேண்டிய தொகை
   4. பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் ஆதாயம்.

---

5. **தொழில் நிதி மூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகளில், ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

   1. நிதி திரட்டும் செலவு
      - ❖ வணிக நிறுவனங்கள் , நிதி திரட்டுவதற்கு முன்பாக, அதனை திரட்ட ஆகும் செலவுகளை ஆய்வு செய்ய வேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- பங்குகள் வெளியிட செய்ய வேண்டிய செலவினைவிட, பொது வைப்பு, கடன்பத்திரங்கள் வெளியிடல் வழிமுறைகளில் பணம் திரட்டும் செலவு மிகவும் குறைவானதாகவே உள்ளது.

2. **நிறுவனத்தின் நிதித் திறன்**

- நிதிநிலையில் வலுவாக உள்ள நிறுவனங்கள், உடனடியாக வட்டி செலுத்தவும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் மூலதனத்தைத் திரும்பப் பெறும் திறனைனையும் கொண்டுள்ளன.

## சிறு விடைவினாக்கள்

1. **தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.** ( மார்ச் 2020 )

- **ஆர்.சி. ஆஸ்போர்ன்** அவர்களின் கூற்றுப்படி, "நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி, அதை முறையாகப்பயன்படுத்துவதற்கான செயலினை குறிப்பதாகும்."

2. **அடகு கடன் என்றால் என்ன?** ( செப் 2020 )

- கடன்பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுவதற்கு அடகு கடன் எனப்படும்.

3. **நீண்டகால மற்றும் குறுகிய கால நிதிகளுக்கான மூலங்களைப் பட்டியலிடுக.**

அ. **நீண்டகால நிதி மூலங்கள்:**

i) பங்குகள்:
   1) நேர்மைப் பங்குகள் 2) முன்னுரிமைப் பங்குகள்
ii) கடன் பத்திரங்கள்
iii) இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்
iv) பொது வைப்பு
v) வணிக வங்கிகளில் இருந்து நீண்டகாலக் கடன் பெறுதல்
vi) நிதி நிறுவனக் கடன்கள்

ஆ. **குறுகியகால நிதி மூலங்கள்**

1) கடன்களும் முன்பணங்களும் 2) வங்கி மேல்வரைப்பற்று 3) மாற்றுச்சீட்டை வட்டம் செய்தல் 4) வியாபாரக் கடன் 5) அடகு கடன் 6) பந்தக கடன் 7) அடமானம் கடன் 7) பிணையக்கடன் 9) தூய கடன் 10) வணிகத்தாள் 11) வாடகைகொள்முதல் நிதி 12) கடன் வசூல் முகமை

4. **தொழிலில் எந்த நோக்கத்திற்காக நிலைமுதல் தேவைப்படுகிறது?**

- பொறிகலன், இயந்திரம், அறைகலன் கட்டுமானப் பொருத்துகள், வாகனங்கள் போன்றவற்றை வாங்கத் தேவைப்படும் முதல், நிலை முதலிருந்தே எடுக்கப்படுகின்றன.
- மேற்கண்ட நோக்கத்திற்காகவே, நிலைமுதல் தேவைப்படுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. **தொழிலில் நடைமுறை முதலின் தேவை என்ன?**

❖ நடைமுறைமுதல் என்பது, வணிகத்தின் அன்றாட செலவுகளான...........

1. கச்சா பொருட்கள் வாங்குதல் 2. பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் கூலி வழங்குதல்
3. தொலைபேசி கட்டணம் 4. உள்தூக்கு கூலி 5. வெளிதுக்கு கூலி,
6. மின்சாரக் கட்டணம் 7. காப்பீட்டு முனைமம் 8. எழுதுபொருள் செலவுகள்

ஆகியவற்றை செய்ய தேவைப்படும் முதல், நடைமுறை முதல் ஆகும்.

## பெரு விடைவினாக்கள்

**1. பல்வேறு நிதி ஆதாரங்களை வகைப்படுத்திப் பட்டியலிடுக.**

வணிக நிதிகளின் பல்வேறு ஆதாரங்களை பின்வரும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

i) கால அளவின் அடிப்படையில் ii) உரிமை அடிப்படையில் iii) உருவாக்க அடிப்படையில்

அ. **கால அளவின் அடிப்படையில்**

* கால அளவின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை:

i) குறுகிய கால நிதி ii) நடுத்தர கால நிதி iii) நீண்டகால நிதி

i) **குறுகிய கால நிதி**

1) கடன்களும் முன்பணங்களும் 2) வங்கி மேல்வரைப்பற்று 3) மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் 4) வியாபாரக் கடன் 5) அடகு கடன் 6) பந்தக கடன் 7) அடமானம் கடன் 7) பிணையக்கடன் 9) தூய கடன் 10) வணிகத்தாள் 11) வாடகைகொள்முதல் நிதி 12) கடன் வசூல் முகமை

ii) **நடுத்தர கால நிதி**

1. வங்கிக் கடன் 2. நிறுவனக் கடன் 3. குத்தகை நிதி

iii) **நீண்டகால நிதி :**

i) பங்குகள்:
   1) நேர்மைப் பங்குகள் 2) முன்னுரிமைப் பங்குகள்
ii) கடன் பத்திரங்கள்
iii) இருத்திவைக்கப்பட்டஆதாயம்
iv) பொது வைப்பு
v) வணிக வங்கிகளில் இருந்து நீண்டகாலக் கடன் பெறுதல்
vi) நிதி நிறுவனக் கடன்கள்

ஆ. **உரிமை அடிப்படையில்:**

❖ உரிமை அடிப்படையில், தொழிலின் நிதியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உரிமையாளர் நிதி 2. கடனாகப் பெறப்பட்ட நிதிகள்.

இ. **உருவாக்கத்தின் அடிபடையில்:**

1. அக நிதி ஆதாரங்கள் 2. புற நிதி ஆதாரங்கள்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **வணிக வங்கிகளால் வழங்கப்படும் குறுகிய கால நிதி ஆதாரங்களைச் சுருக்கமாக விளக்குக.**

1. **கடன்களும் முன்பணங்களும்**
   - கடன் என்பது, கடன் கோருபவரின் கடன் கணக்கில், ஒட்டு மொத்தக் கடன் தொகையையும், ஒரே வீச்சில் வரவு வைக்கப்பட்ட தொகையைக் குறிக்கும்.
   - கடன் மற்றும் முன்பணங்கள் வழக்கமாக நிலை வைப்பு ரசீது, சரக்குரிமை ஆவணங்கள், பங்குகள், மற்றும் கடன்பத்திரங்கள் போன்ற ஒரு சில பிணையங்களை ஈடாக பெற்றுக்கொண்டு வழங்கப்படுகிறது.
2. **வங்கி மேல்வரைப்பற்று**
   - வங்கி மேல்வரைப்பற்று என்பது, வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு, ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில், வரவில் இருக்கும் தொகையைவிட, அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும்.
   - எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறதோ, அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது.
3. **மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்**
   - சரக்குகளை கடன் அடிப்படையில் விற்கும்போது, விற்பவர் வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார்.
   - மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.
4. **வியாபாரக் கடன்**
   - வியாபாரக்கடன் என்பது, ஒரு வணிகர் பிறிதொருவருக்கு சரக்கு மற்றும் சேவையைப் பெறுவதற்காகத் தருகின்ற கடனைக் குறிக்கும்.
5. **அடகு கடன்**
   - கடன்பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்து பெறக்கூடிய கடன் அடகு கடன் ஆகும்
   - கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை, அடகு வைக்கப்பட்ட பொருள், கடனாளரிடமே இருக்கும்.
6. **அடமானம் கடன்**
   - அசையா சொத்தினை ஈடாக வைத்து நிதி திரட்டும் முறைக்கு அடமானம் என்று பெயர்.
7. **பந்தக கடன்**
   - பந்தக கடன் என்பது, அசையும் சொத்துக்களின், மூல ஆவணங்களை கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடனாகும்.

---

3. **குறிப்பு வரைக: அ) இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் ஆ) குத்தகைநிதி**

( மார்ச் 2019 ), ( செப் 2020 )

அ) **இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்** :
- எந்த ஒரு நிறுமமும் தான் ஈட்டிய, ஒட்டு மொத்த லாபத்தையும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதில்லை.
- மாறாக ஈட்டிய வருவாயின், ஒரு பகுதியைப் பங்குநர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள இலாபத்தைச் சேமித்து நிறும வளர்ச்சியில் மறுமுதலீடு செய்கின்றன.
- இதற்கு இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் அல்லது இலாபத்தை மறு உழவு செய்தல் என்று பெயர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- இவ்வகை நிதியைப் பயன்படுத்துவதில், எந்தவிதச் சட்டச் சடங்குகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை.
- எனவே, இவ்வகை நிதி மிகவும் எளிதாக திரட்டக் கூடியதாகவும் மற்றும் சிக்கனமானதாகவும் கருதப்படுகிறது.

ஆ) <u>குத்தகை நிதி:</u>

- குத்தகை நிதி என்பது, தேவைப்படும் சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்து, உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் செயலைக் குறிக்கும்.
- தொடக்க நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் பொறுத்த வரையில் தளவாடங்கள், கருவிகள் மற்றும் இதர சொத்துகளை ஒட்டு மொத்தமாக பணம் செலுத்தி வாங்குவது என்பது கடினமான ஒன்றாகும்.
- இப்படிப்பட்ட சூழ்நிலையில் குத்தகை நிதி முறை , இந்நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வரமாக விளங்குகிறது.

---

4. **<u>குறிப்பு வரைக</u>: அ) உரிமையாளர் நிதி ஆ) கடனாகப் பெறப்பட்ட நிதிகள்**

அ) <u>உரிமையாளர் நிதி</u> :

- நிறுவனங்களின் உரிமையாளரால் வழங்கப்படும் நிதி, உரிமையாளர் நிதி எனப்படும்.
- உரிமையாளர் என்பவர், ஒரு தனி மனிதராகவோ, நிறுவனத்தின் கூட்டாளிகளாகவோ அல்லது நிறும பங்குதாரர்களாகவோ இருக்கலாம்.
- இது தனி நபர் முதல், கூட்டாளிகள் முதல், அல்லது பங்குகள் மூலம் திரட்டப்பட்ட நிதியைக் குறிக்கிறது.
- இருத்திவைக்கப்பட்ட இலாபத்தை, தொழிலில் மறுமுதலீடு செய்தல் உரிமையாளர் நிதியின் கீழ் வகைகப்படுத்தப்பட்டுள்ளது.
- தொழில் நிறுவனங்களின் வாழ்நாளில், இந்த நிதி திருப்பித் தரப்பட வேண்டியதில்லை.
- நிறுவனத்தின் நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் உரிமையை, உரிமையாளர் நிதி வழங்குகிறது.

ஆ) <u>கடனாகப் பெறப்பட்ட நிதிகள்:</u>

- கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது, கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது.
- எடுத்துக்காட்டாக, கடன் பத்திரங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன், பொது வைப்பு, வணிகக் கடன், குத்தகை நிதி, வணிகத் தாள், கடன் வசூல் முகமை, முதலியவற்றக்க் கூறலாம்.
    1. இந்தக் கடன்கள் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.
    2. கடனாளி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒப்புக் கொண்ட வட்டியைச் செலுத்துவதற்குச் சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார்.
    3. பத்திரங்கள், நிலம், கட்டிடம், ரொக்கிருப்பு, வாகனங்கள், இயந்திரம், நிலைச்சொத்து ஆவணங்கள் போன்றவற்றைப் பிணையமாக வைத்து நிதி பெறப்படுகிறது.

---

5. **ஏதேனும் நான்கு / ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.** ( மார்ச் 2020 )

1) **<u>பொது வருங்கால வைப்பு நிதி</u> :**

- இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப் பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும்.
- இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.
- இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.
- இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெறமுடியாது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால், இந்தக் கணக்கிலிருந்து கடன்பெற்று நிதிக் நெருக்கடியை சமாளித்துக் கொள்ளவாய்ப்பு உள்ளது.

2) **பரஸ்பரநிதிகள்**

- பரஸ்பர நிதி என்பது, நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து, பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச்சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.
- இதன்மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச்சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.
- பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டார்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.

3) **நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்**

- தனிநபர், பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாகப் பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்துச் சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம்.

4) **அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்**

- அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும்.
- ஒரு வீட்டு மனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது.

5) **விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்**

- தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும்.
- சந்தை நிலைக்கேற்றார் போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

6) **அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்**

- அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன.
- அவை 1. அஞ்சலக சேமிப்பு கணக்கு
  2. அஞ்சலக தொடர் வைப்புக்
  3. அஞ்சலக நிலைவைப்பு கணக்கு
  4. அஞ்சலக மாதாந்திர வருவாய்கணக்கு திட்டம்
  5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்
  6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு
  7. தேசியச்சேமிப்பு பத்திரங்கள் ஆகியவை ஆகும்.
- அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டார்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.

7) **பொது வைப்புகள்**

- வங்கிகளில் நிலைவைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட, பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.
- இதில் முதலீட்டாளர், முதலீட்டு கால அளவை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
- முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- நீண்டகாலத்திற்கு முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.

8) <u>நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள்</u> **(Bonds)**

- தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிறும முறிகள்(பத்திரங்கள்) சீரிய முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும்.

9) <u>காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி</u> (Unit Linked Insurance Plans)

- ULIP என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும்.
- இது காப்பீடு செய்பவருக்கு, இழப்பை ஈடுசெய்வதோடு பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களில், பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பைஅளிக்கிறது.

# <u>அத்தியாயம் 20. பன்னாட்டு நிதி</u>

## <u>குறு விடைவினாக்கள்</u>

**1. அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் என்பது குறித்து நீ அறிவது யாது?**

- ஒரு தனிப்பட்ட முதலீட்டு நிறுவனம், முதலீட்டு நிதி, ஓய்வு கால நிதி ஆகியவை, வேறு நாட்டின் நிதிச்சந்தையில் முதலீடு செய்வதே, அயல்நாட்டு நிறுவன முதலீடு ஆகும்.
- இது குறுகிய காலத்தில், திரும்பப் பெறும் வாய்ப்பு உள்ள முதலீடு ஆகும்.
- அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள், இந்தியப் பொருளாதாரத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

**2. வைப்பு இரசீது என்றால் என்ன?** ( ஜூன் 2019 )

- ஒரு வைப்புத் தொகை ரசீது எனபது, வெளிநாட்டு நிறுவனத்தின நேர்மை பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும், ஒரு மாற்று முறை ஆவணம் ஆகும்.

**3. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?**

- அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து, நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு ரசீது எனப்படும்.

**4. அமெரிக்க வைப்பு இரசீது என்றால் என்ன?**

- அமெரிக்காவைச் சேராத ஒரு நிறுமம், அமெரிக்க நிதிசந்தையில் கலந்து கொள்ளும் பொருட்டும், அமெரிக்கக் குடிமக்கள், அந்நியப் பிணையங்களில் முதலீடு செய்யும் வகையிலும், டாலரில் மதிப்பிடப்பட்டிருக்கும் மாற்றத்தக்க பிணையமாகும்.

**5. அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்றால் என்ன?** ( மார்ச் 2020 )

- அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது, உள்நாட்டு பணத்தைத் தவிர, பிறநாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகை பத்திரம் ஆகும்.

( அல்லது )

- நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காக வெளியிடப்படுவதே அந்நியச்செலாவணி மாற்றுப்பத்திரம் ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவிடைவினாக்கள்

1. **பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது?**

1) பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீட்டு மதிப்புக்களையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களையும் நிர்ணயிப்பதில் உதவி புரிகிறது.
2) இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை, முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.
3) இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் , சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.
4) பன்னாட்டு நிதி அறிக்கை அமைப்பின் (IFRS) மூலம், பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கைகளை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது.
5) இது பன்னாட்டு நிதி அமைப்புக்களின் அடிப்படை கட்டமைப்புகளைப் அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றிடையே சீர்நிலையைப் பராமரிப்பதற்கும் உதவுகிறது.
6) பன்னாட்டுப் பணவியல் நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள், பல்வேறு நாடுகளிடையே எழும் நிதி சார்ந்த பிரச்சனைகளில் தலையிட்டு, அவற்றை சுமூகமாக தீர்க்க உதவுகின்றன.

---

2. **அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்றால் என்ன?** ( மார்ச் 2020 )

- அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது, உள்நாட்டு பணத்தைத் தவிர, பிறநாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகை பத்திரம் ஆகும்.

( அல்லது )

- நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காக வெளியிடப்படுவதே அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரம் ஆகும்.

---

3. **அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று நன்மைகளை விளக்குக.**

1. <u>தேசிய வருமானத்தை உயர்த்துதல்</u>
   - வளர்ந்து வரும் நாடுகள், தங்களின் தேசியப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக் கொள்ள இந்த அந்நிய நேரடி முதலீடுகள் பெரிதும் உதவுகின்றன.
2. <u>பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல்</u>
   - அந்நிய நேரடி முதலீடு, ஒரு நாட்டிற்கு, அயல்நாட்டு செலவாணிகளைப் பெற்றுத்தருகிறது.
   - இது அந்த நாட்டின் பாதகமான அயல்நாட்டு செலுத்து நிலையைத் தீர்க்க உதவுகிறது.
3. <u>பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல்</u>
   - அந்நிய நேரடி முதலீடு தொழில்நுட்பம், புதிய மேலாண்மைத்திறன், சந்தையிடுகை திறன்கள் ஆகியவற்றை முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகிறது.
   - இவை வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகின்றன.
4. <u>வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்</u>
   - வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில், ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.** ( செப் 2020 )

1) அமெரிக்க வைப்பு இரசீதுகள் அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்டும்.
2) அமெரிக்கக் குடிமக்களாக இருக்கிற முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும்.
3) வெளியிடும் வைப்பக வங்கி, அமெரிக்காவில் இருக்க வேண்டும்.

5. **உலகளாவிய வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.**

1) இது மற்ற மாற்றுமுறை சாதனங்களைப் போலவே, தடையின்றி வியாபாரம் செய்யப்படும் மாற்றுமுறை பிணையமாகும்.
2) கடந்த மூன்று ஆண்டுகளாக, வலுவான நிதிநிலையில் செயல்பட்டு வரும் நிறுமங்களுக்கு, பன்னாட்டு உலகளாவிய வைப்பு இரசீதுகள் மூலம், நிதிச் சந்தையில் நுழைய அனுமதி தரப்படுகிறது.
3) உலகளாவிய வைப்பு இரசீதுகள், அனைத்து நாட்டு முதலீட்டாளர்களுக்கும், அவர்கள் நாட்டு செலாவணியில் அல்லது பொதுவாக ஏற்கப்படும் செலாவணியில் வெளியிடப்படுகிறது.

## பெருவிடை வினாக்கள்

1. **பன்னாட்டு நிதியின் முக்கியத்துவத்தை விவரி.**
( சிறுவிடை வினாக்கள் - வினா எண் 1 -ஐ பார்க்கவும் )

2. **உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?** ( ஜூன் 2019 )

| வ.எண் | வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது GDR | அமெரிக்க வைப்பு இரசீது ADR |
|---|---|---|---|
| 1 | மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும் |
| 2 | யாருக்கு இது வெளியிடப் படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும் |
| 3 | எங்குப் பட்டியலிடப் படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப் படும் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப் படும் |
| 4 | ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை | இதனை வெளியிட, அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | இல்லை | இயக்ககத்தின் ஒப்புதல் தேவை. |
| 5 | வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும் |
| 6 | மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்றகூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

3. **அந்நியச் செலாவணி மாற்று பத்திரத்தின் ஏதேனும் 5 சிறப்புக் கூறுகளை விவரி.**

1) இது, இந்திய நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும் ஒரு வகை பத்திரம் ஆகும்.
2) இவை, கடனீட்டுப்பத்திரங்களைப் போல பட்டியலிடப்பட்டு, அயல்நாட்டு பங்கு மாற்றகங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.
3) இது மாற்றத்தக்க கடன் ஆவணமாகும். இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.
4) இதனை வைத்திருப்பவர்களுக்கு, முன் குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக் கொள்ளவும் உரிமை தரப்படுகிறது.
5) குறிப்பிட்டகாலத்திற்கு பின், இவைகளை நேர்மைபங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக்கொள்ள முடியும்.
6) இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறி முறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.

4. **அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகளை விவரி.**

1. **<u>தேசிய வருமானத்தை உயர்த்துதல்</u>**

❖ வளர்ந்து வரும் நாடுகள், தங்களின் தேசியப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக் கொள்ள, இவை பெரிதும் உதவுகின்றன.

2 .**<u>பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல்</u>**

❖ அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு, அயல்நாட்டு செலவாணிகளைப் பெற்றுத்தருகிறது.
❖ இது அந்த நாட்டின் பாதகமான அயல்நாட்டு செலுத்து நிலையைத் தீர்க்க உதவுகிறது.

3. **<u>பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துதல்</u>**

❖ அந்நிய நேரடி முதலீடு தொழில்நுட்பம், புதிய மேலாண்மைத் திறன், சந்தையிடுகை திறன்கள் ஆகியவற்றை முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகிறது.
❖ இவை, வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகின்றன.

4. **<u>வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்</u>**

❖ வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில், ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.

5. **வரவேற்கும் நாட்டில் போட்டியை ஊக்குவித்தல்**

- ❖ இதனை வரவேற்கும் நாட்டில், ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாகும் வாய்ப்பு உள்ளது.
- ❖ இதனால், வளரும் நாடுகளில் உள்ள நிறுவனங்கள், மிகுந்த செயல்திறனோடும் ஆற்றலோடும் செயல்பட வாய்ப்பு ஏற்படுகிறது.
- ❖ இதனால், நுகர்வோர்களுக்குப் பலதரப்பட்ட பொருட்கள் உயர் தரத்துடன், நியாயமான விலையில் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

---

## அத்தியாயம் 21.குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்.

### குறுவிடைவினாக்கள்

1. **உற்பத்தி நிறுவனங்கள் என்றால் என்ன?**
   - ❖ தொழில்துறையின் நிறுவனங்கள் ( அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை ) சட்டம், 1951 ன் படி, முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழிற்துறை தொடர்பான உற்பத்தி அல்லது உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் குறிக்கின்றன.

---

2. **குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.** ( மார்ச் 2019 )
   - ❖ மண்பாண்டங்கள் செய்தல்,
   - ❖ பழங்கள் மற்றும் காய்கறி விற்பனை செய்தல்,
   - ❖ போக்குவரத்து ( மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள் ) ,
   - ❖ பழுது பார்க்கும் கடைகள்,
   - ❖ குடிசைத் தொழில்கள்,
   - ❖ சிறிய கைத்தொழில்கள்,
   - ❖ கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

---

3. **புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் நோக்கம் என்ன?**
   - ❖ படித்த இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்,
   - ❖ தொழில் தொடங்கத் திட்டங்கள் தயாரித்தல்,
   - ❖ புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ள, நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும்
   - ❖ பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிகத் தொடர்பு அமைத்துத் தருதல் ஆகிய உதவிகளை அளித்து வருகிறது.

---

4. **சுய உதவி குழு என்றால் என்ன?**
   - ❖ உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்து கொள்ளவும், ஒருமைப்பாடு மற்றும் கூட்டுப் பொறுப்பு ஆகிய பண்புகளைப் பெறவும் உருவாக்கப்பட்ட குழுவிற்கு, சுய உதவி குழு எனப்படும்.

---



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. **உற்பத்தி மற்றும் பணி துறையில் சிறு நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக.**
    1. உற்பத்தி தொழில் நிறுவனங்களில், சிறு நிறுவனங்களின் முதலீடு ரூ. 25 இலட்சங்களுக்கு மேல் ரூ. 5 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
    2. சேவைத் தொழில் நிறுவனங்களில், சிறு நிறுவனங்களின் முதலீடு ரூ. 10 இலட்சங்களுக்கு மேல் ரூ. 2 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## சிறுவிடைவினாக்கள்

1. **உற்பத்தி மற்றும் பணி துறையில் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக.**
    1) உற்பத்தி தொழில் நிறுவனங்களில், நடுத்தர நிறுவனங்களின் முதலீடு ரூ. 5 கோடிக்கு மேல் ரூ. 10 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
    2) சேவைத் தொழில் நிறுவனங்களில், நடுத்தர நிறுவனங்களின் முதலீடு ரூ. 2 கோடிக்கு மேல் ரூ. 5 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. **தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.**
    - ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள்

3. **இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கினை விளக்குக.**
    - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமும்,
    - நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றுமதியில் 40 சதவீதமும் இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது.
    - 6000 க்கு மேற்பட்ட பொருட்களை இவை உற்பத்தி செய்கின்றன.
    - 3.6 கோடி நிறுவனங்கள் வாயிலாக, 8 கோடி நபர்களுக்கு இவை வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

4. **சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.** ( ஜூன் 2019
    1) “முதலில் சேமிப்பு. பிறகு கடன்” என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.
    2) சுய உதவிக்குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை, உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
    3) சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
    4) குழுக்களைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை.
    5) அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்.
    6) ஒவ்வொரு குழுவிலும், ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

7) ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.

8) சுய உதவிக்குழு கூட்டமானது, ஒய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அதிகப் பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

5. **வங்கிகள் சுய உதவி குழுக்களுக்குக் கடன் வழங்கும் முறைகள் யாவை?**

* சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்அளிக்க மூன்று வெவ்வேறு முறைகள் உள்ளன.
- ❖ முதலாவது முறையில், வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு, நேரடியாக கடன் வழங்குகின்றன.
- ❖ இரண்டாவது முறையில், வங்கிகள் அரசு சாரா அமைப்புகள் (NGO) மூலம், சுய உதவிக்குழுக்களில் உள்ள சிறுதொழில் முனைவோருக்குக் கடன் வழங்குகின்றன.
- ❖ மூன்றாவது முறையில், அரசு சாரா அமைப்புகளைச் செயலாக்குநராகக் கொண்டு வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அளிக்கின்றன.
- ❖ இந்த மூன்று முறைகளில் அரசு சாரா நிறுவனங்களைச் செயலாக்குநராகக் கொண்டு நேரடியாகக் கடன் அளிக்கும் முறையே பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

## பெரு விடைவினாக்கள்

1. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் - வரையறை தருக.**

**குறு தொழில் நிறுவனம்:**

- ❖ ஒரு நிறுவனம் உற்பத்தி தொழில் துறையில், ரூ. 25 இலட்சத்திற்குள்ளும், சேவைத் தொழில் துறையில், ரூ. 10 இலட்சத்திற்குள்ளும் முதலீடு செய்திருந்தால், அது குறு தொழில் நிறுவனம் என அழைக்கப்படும்.

**சிறு தொழில் நிறுவனம்:**

- ❖ ஒரு நிறுவனம் உற்பத்தி தொழில் துறையில், இயந்திரம் மற்றும் ஆலைகளில் ரூ. 25 இலட்சத்திற்கு மேல், ரூ 5 கோடிக்கு மிகாமலும், சேவைத் தொழில் துறையில் உபகரணங்களில், ரூ. 10 இலட்சத்திற்கு மேல், ரூ 2 கோடிகளுக்கு மிகாமலும், முதலீடு செய்திருந்தால், அந் நிறுவனம் சிறு தொழில் நிறுவனம் என அழைக்கப்படும்.

**நடுத்தர தொழில் நிறுவனம்:**

- ❖ ஒரு நிறுவனம் உற்பத்தி தொழில் துறையில், இயந்திரம் மற்றும் ஆலைகளில் ரூ. 5 கோடிக்கு மேல், ரூ 10 கோடிக்கு மிகாமலும், சேவைத் தொழில் துறையில் உபகரணங்களில், ரூ. 2 கோடிக்கு மேல், ரூ 5 கோடிகளுக்கு மிகாமலும், முதலீடு செய்திருந்தால், அந் நிறுவனம் நடுத்தர தொழில் நிறுவனம் என அழைக்கப்படும்.

2. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.**

1. **அதிக வேலைவாய்ப்புகள்**

- ❖ இத்தகைய நிறுமங்கள், பெரும்பாலும் உள்ளூரில் கிடைக்கும் உழைப்பாற்றலை நம்பி இருப்பதால், நாட்டில் உள்ள ஏராளமான மக்களுக்கு, வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. <u>குறைந்த உற்பத்தி செலவு</u>

- ❖ இம்மாதிரியான நிறுமங்களை நடத்தப் பயிற்சி பெற்ற அல்லது அதிக ஆற்றல் படைத்த தொழிலாளர்களோ அல்லது தொழில் கல்வி பயின்ற உழைப்பாளர்களோ தேவைப்படுவது இல்லை.
- ❖ இந்நிறுமங்கள் குறைந்த ஊதியத்தில் பணியாளர்களை நியமிப்பதால், உற்பத்தி செலவுகள் வெகுவாக குறைகிறது.

3. <u>குறைந்த முதலீடு</u>

- ❖ இவற்றைத் தொடங்குவதற்குப் பேரளவு முதல் தேவைப்படுவதில்லை.
- ❖ இவைகளின் உரிமையாளர்கள் உள்ளூரில் இருப்பதால், தனக்கு அருகாமையில் உள்ள உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

4. <u>விரைந்து முடிவெடுத்தல்</u>

- ❖ பெரும்பாலும் இந்த நிறுவனங்களை, அவற்றின் உரிமையாளர்களே நிர்வாகம் செய்கின்றனர்.
- ❖ எனவே சிறந்த முடிவுகளை விரைந்து எடுப்பது சாத்தியமாகிறது.

5. <u>பங்களிப்பு உதவி</u>

- ❖ பெரிய உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் பிறபொருட்களை தயாரித்து கொடுத்து, பேரளவு உற்பத்திக்கு துணைபுரிவதில் இவை முக்கியப் பங்காற்றுகின்றன.

6. <u>சுய வேலைவாய்ப்பு உருவாக்கி, சுயசார்பை மேம்படுத்துதல்</u>

- ❖ இத்துறையானது, தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன.
- ❖ இது சமுதாயத்தில் சுய வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம், சுயசார்பை ஊக்குவிக்கிறது.
- ❖ இதன்மூலம், தனிநபர் வருமானம் வெகுவாக உயர்ந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது.

---

3. **சுய உதவி குழுக்களின் நோக்கங்கள் யாவை?**
    1. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.
    2. முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.
    3. பெண்களிடம் திறமையை உருவாக்கி, ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட செய்வது
    4. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மனங்களில், சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்
    5. பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.
    6. கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
    7. உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
    8. எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மைக்கான திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
    9. உறுப்பினர்கள், தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு, அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வு பயிற்சியினை அளித்தல்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

10. குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல். திறமையான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
11. உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்.
12. வாழ்க்கை சுழற்சியில் எல்லா நிலைகளிலும், பெண்களுக்கான மனித உரிமைகளை உறுதி செய்தல்.

# அலகு - 7 வியாபாரம்

## அத்தியாயம் 22. வியாபாரத்தின் வகைகள்

### குறு விடைவினாக்கள்

1. **வியாபாரத்தின் பொருள் யாது?**
   - ❖ இலாபம் ஈட்டும் நோக்கில், பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம் ஆகும்.

2. **உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?**
   - ❖ சந்தை நடவடிக்கைகளான, பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதும், விற்பதும் ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெற்றால், அது உள்நாட்டு வியாபாரம் எனப்படும்.
   - ❖ உள்நாட்டு வியாபாரத்தை, உள்ளூர் வியாபாரம் எனவும் அழைக்கலாம்.

ஒரே நாட்டிற்குள், ஒரே இடத்தில், கிராமத்தில், மாநிலத்தில், அல்லது பல்வேறு மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் இது ஆகும்.

3. **திரு. விக்ரம் என்பவர் தான் நடத்தி வரும் பின்னலாடை தொழிற்சாலைக்குத் தேவையான பஞ்சினை வெளிநாட்டில் இருந்து வாங்குகிறார். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

   விடை : இது இறக்குமதி வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

4. **இந்தியாவில் உள்ள திரு. விக்ரம் தனது தயாரிப்பான பருத்தியினால் தயாரிக்கப்பட்ட சட்டைகளை இங்கிலாந்தில் உள்ள நிறுவனத்திற்கு விற்கிறார். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

   விடை : இது ஏற்றுமதி வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

5. **வியாபாரத்தை எவ்வாறு வகைப்படுத்துவாய்?**
   - * வியாபாரத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன : -

   1. உள்நாட்டு வியாபாரம் 2. பன்னாட்டு வியாபாரம்

6. **உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?**
   - * உள்நாட்டு வியாபாரம் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

   1. மொத்த வியாபாரம் 2. சில்லறை வியாபாரம்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

7. **இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?**
   - ❖ உள்நாட்டுத் தேவைக்காக, வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே, இறக்குமதி வியாபாரம் ஆகும்.
   - ❖ உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறலாம்.

8. **மறு ஏற்றுமதி வியாபாரம் என்பதன் பொருள் யாது?**
   - ❖ ஒரு நாட்டில் இருந்து, பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

9. **TVS நிறுவனம் ஐரோப்பிய நாடுகளுக்கு மோட்டார் பைக்குகளை விற்பது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

   <u>விடை</u> : இது பன்னாட்டு வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

10. **பன்னாட்டு வணிகத்தில் இந்தியாவில் உபயோகிக்கப்படும் பணமதிப்பின் பெயர் என்ன?**
   - ❖ பன்னாட்டு வணிகத்தில் இந்தியாவில் உபயோகிக்கப்படும் பணமதிப்பின் பெயர் **இந்திய ரூபாய்.**

## <u>சிறுவிடை வினாக்கள்</u>

1. **வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?**

   <u>வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை</u> : -
   1) இறக்குமதி வியாபாரம்
   2) ஏற்றுமதி வியாபாரம்
   3) மறு ஏற்றுமதி வியாபாரம்.

2. **மறு ஏற்றுமதி வியாபாரத்திற்கு உதாரணங்கள் இரண்டினை தருக.**
   1) இந்தியாவில் சூரத், நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றை துண்டாக்கி, பட்டைதீட்டி, மீண்டும், ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு மறு ஏற்றுமதி செய்கிறார்கள்.
   2) இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள நாட்டிற்கு மறு ஏற்றுமதி செய்கிறது.
   3) சிங்கப்பூர், துபாய், ஹாங்காங் ஆகிய நாடுகள் உலகின் மிகப்பெரிய மறு ஏற்றுமதி மையங்கள் ஆகும்.

3. **ஏற்றுமதி வணிகம் என்றால் என்ன?** ( ஜூன் 2019 )
   - ❖ உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

   <u>உதாரணம்</u>

   1. இந்தியா இரும்பு, எஃகு போன்றவற்றை, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது.
   2. இந்தியா, ஜெர்மனி நாட்டிற்கு தேயிலை ஏற்றுமதி செய்கிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. மதுரையில் இருந்து சிங்கப்பூருக்கு மல்லிகைப் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

4. **மொத்த வியாபாரம் என்றால் என்ன? ( மார்ச் 2020 )**
   - மொத்த வியாபாரம் என்பது, பொருட்களை உற்பத்தி செய்பவரிடம் மொத்தமாக வாங்கி, சில்லறை வியாபாரிகளுக்கு குறைந்த அளவில் விற்கும் நடைமுறை வணிகச் செயலாகும்.

5. **சில்லறை வியாபாரத்தின் பொருள் தருக.**
   - சில்லறை வியாபாரம் என்பது, மொத்த வியாபாரியிடம் பொருட்களை வாங்கி, நுகர்வோருக்கு சிறிய அளவில், பொருட்களை வழங்கும் நடைமுறை வணிகச் செயலாகும்.

6. **உமது ஊரிலுள்ள சில்லறை நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக**
   1. மகேஸ்வரி மெடிக்கல் ஸ்டோர், காஞ்சிபுரம்.
   2. விக்டரி புக் ஸ்டோர், காஞ்சிபுரம்.
   3. காஞ்சி சூப்பர் மார்க்கெட், காஞ்சிபுரம்.
   4. சங்கீதா மொபைல் ஸ்டோர், காஞ்சிபுரம்.

   ( இம்மாதிரியே உங்கள் ஊரில் அமைந்துள்ள ஏதேனும் மூன்று விற்பனை நிலையங்களின் பெயர்களை எழுதவும்.)

7. **வியாபாரத்தின் முக்கியக் குறிக்கோள் யாது?**
   - இலாபம் ஈட்டும் நோக்கில், பொருட்களையும், சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பொருட்களைப் பரிமாற்றம் செய்வது,
   - பொருட்களையும், சேவைகளையும் தேவையுடையவர்கள் மற்றும் அதற்கான தொகையை செலுத்த தயாராக உள்ளவர்களுக்கு, வியாபாரப் பொருட்களையும், சேவைகளையும் கொண்டு சென்று சேர்ப்பது,
   - பொருட்களின் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கிடையில் வியாபாரம் இடையீட்டாளராகச் செயல்படுவது.

   மேற்கண்டவைகளே வியாபாரத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

## <u>பெருவிடைவினாக்கள்</u>

1. **உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? ( மார்ச் 2020 )**
   1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
   2. உள் நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
   3. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
   4. உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
   5. இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தைவிட குறைவாகவே உள்ளது.
   6. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
   7. இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
   8. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

9. ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்கள் வாங்கப்படுகிறது.
10. உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.
11. இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

2. **வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி?** ( மார்ச் 2019 )

வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை : -

அ) இறக்குமதி வியாபாரம் ஆ) ஏற்றுமதி வியாபாரம் இ) மறு ஏற்றுமதி வியாபாரம்.

**அ) இறக்குமதி வியாபாரம்**

- உள்நாட்டுத் தேவைக்காக, வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே, இறக்குமதி வியாபாரம் ஆகும்.
- உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து, பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறலாம்.

**ஆ) ஏற்றுமதி வியாபாரம்**

- உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது, ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

  உதாரணமாக, இந்தியா இரும்பு, எஃகு போன்றவற்றை, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

**இ) மறு ஏற்றுமதி வியாபாரம்**

- ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

  உதாரணமாக, இந்தியாவில் சூரத், நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றை துண்டாக்கி, பட்டைதீட்டி, மீண்டும், ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு மறு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

## அத்தியாயம் 23.வழங்கல் வழிகள்

### குறுவிடைவினாக்கள்

1. **இடைநிலையர் என்பவர் யார்?**
   - தொடக்க நிலை உற்பத்தியாளரிடமிருந்து, இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர் ஆவர்.

2. **மொத்த வியாபாரி வரையறு.**
   - கண்டிஃப் மற்றும் ஸ்டில் ஆகியோரது கூற்றின்படி, " மொத்த வியாபாரிகள், வணிகப் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து மொத்தமாக வாங்கி, சில்லறை வியாபாரிகளுக்கோ அல்லது பிற வியாபாரிகளுக்கோ விற்பனை செய்வார்களே தவிர, நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்யமாட்டார்".



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **சில்லறைவியாபாரி வரைவிலக்கணம் தருக. ( ஜூன் 2019 )**
   - ஈவ்லின் தாமஸ் என்பவரது கூற்றின்படி, "நுகர்வோரின் தேவைகளை செவ்வனே பூர்த்தி செய்யும் பொருளாதாரச் சங்கிலியில், இறுதியாக இருப்பவர் சில்லறை வியாபாரி ஆவார்"

4. **தரகர் என்பவர் யார்?**
   - மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி, வியாபாரத்தை இலாபக்கரமாக நிறைவேற்றி, அதற்கெனக் கழிவு பெறும் நபரையே தரகர் என்பர்.
   - அவரது சேவைக்கு வழங்கப்படும் ஊதியம் 'தரகு' ஆகும்.

5. **வியாபார இடைநிலையரின் வகைகள் யாவை?**
   - வியாபார இடைநிலையர்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

   1. மொத்த வியாபாரி 2. சில்லறைவியாபாரி

6. **வணிக முகவர்கள் என்பவர் யார்?**
   - வணிக முகவர்கள், பணி வழி இடைநிலையர்கள் என்று அழைக்கப்படுகினறனர்.
   - ஒரு வியாபாரி, தம் சார்பாகப் பொருட்களை வாங்கவும், விற்கவும் இவரை நியமிக்கிறார்.
   - இவருக்குப் பொருட்களை அடமானம் செய்து, கடன் பெறவும் உரிமையுண்டு.
   - ஆனால்,பொருட்களுக்கு உரிமையாளர் ஆக உரிமையில்லை.
   - இவர் செய்யும் வியாபாரத்தின் அடிப்படையில் இவர் 'கழிவு' பெறுகிறார்.

## சிறுவிடை வினாக்கள்

1. **வழங்கல் வழிகள் குறித்து நீவிர் அறிவது யாது?**
   - வழங்கல் வழி என்பது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள், உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரைச் சென்றடைய உதவும் பாதை ஆகும்.
   - இடைநிலையர் இன்றி, பொருட்களை நேரடியாக விநியோகித்தால், அது நேரடி வழங்கல் வழியாகும்.
   - வழங்கல் வழியில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைநிலையர் விநியோகப் பணிகளைச் செய்தால் மறைமுக வழங்கல் வழியாகும்.

2. **தன் பொறுப்பு முகவர் என்பவர் யார்?**
   - உற்பத்தியாளர், தம் பொருளை விற்பனை செய்ய நியமனம் செய்யப்படும் வணிக முகவர், தன் பொறுப்பு முகவர் ஆவார்.

3. **வணிக முகவர்களின் வகைகள் யாவை?**
   - வணிக முகவர்களை பின் வருமாறு வகைப் படுத்தப்படுகின்றது.

   1. தரகர்கள்
   2. தன்பொறுப்பு முகவர்கள்
   3. கழிவு முகவர்கள்
   4. பிணை முகவர்கள்
   5. ஏலமிடுநர்
   6. பண்டகக் காப்பாளர்கள்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது.**

( மார்ச் 2019 )

1. மொத்த வியாபாரிகள், உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
2. இவர்கள், பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. இவர்கள், ஒரு குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்கினறனர்.
4. பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
5. சில்லறைவியாபாரிகளுக்கு, இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
6. உற்பத்தியாளர்களுக்கும், இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.

5. **உற்பத்தியாளர்களுக்கு மொத்த வியாபாரிகள் ஆற்றிடும் சேவைகள் யாது?**

1. **பேரளவு நடவடிக்கையின் மூலம் சிக்கனம்:** ( மார்ச் 2020 )
   - ❖ மொத்த வியாபாரி, உற்பத்தியாளர் செய்த பொருட்களைப் பெருமளவில் வாங்கிக் கொள்வதால், உற்பத்தியாளர் பெருமளவு உற்பத்தியில் ஈடுபட முடிகிறது.
   - ❖ பேரளவு உற்பத்தியினால், பொருட்களின் உற்பத்திச் செலவு வெகுவாகக் குறைகிறது.
2. **சீரான விநியோகத்திற்கு உதவுதல்**
   - ❖ மொத்த வியாபாரி, உற்பத்தியாளர் உற்பத்தி செய்த பொருட்களைப் பெரிய அளவில் வாங்கி, அதனை நாடெங்கிலும் உள்ள சில்லறைவியாபாரிகளுக்கு அனுப்பி, அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக்கம் செய்கிறார்.
   - ❖ எனவே, உற்பத்தியாளர் தனது முழுக்கவனத்தையும், பொருட்களின் உற்பத்தியில் செலுத்த முடிகிறது.
3. **பண்டகக்காப்பு வசதி அளித்தல்**
   - ❖ மொத்த வியாபாரி, உற்பத்தியாளர் உற்பத்தி செய்த பொருட்களை வாங்கி, தமது பண்டகசாலையில் இருப்பு வைத்திருப்பதால், உற்பத்தியாளர் உற்பத்தி செய்த பொருட்களைப் பண்டககாப்பிடுதல் என்ற மிகமுக்கிய பணியிலிருந்து விடுவிக்கப் பெறுகிறார்.
4. **தேவை முன் கணிப்பு**
   - ❖ மொத்த வியாபாரி சந்தையில் ஏற்படும் மாற்றம், பொருட்களின் தேவை, விற்பனையில் நிலைமை, நாகரிக மாற்றம் ஆகிய தகவல்களைச் சில்லறை வியாபாரிகள் மூலம் பெற்று, அவற்றை உற்பத்தியாளருக்கு அனுப்பி வைத்து, உற்பத்தியாளர் நுகர்வோரின் சுவை, நாகரீகம் , விருப்பங்களுக்கு ஏற்ப பொருள்களை உற்பத்தி செய்ய உதவுகிறார்.
5. **விளம்பரம் செய்தல் அல்லது பொருள் குறித்துத் தகவல் பரப்புதல்**
   - ❖ மொத்த வியாபாரி பொருள்களை விளம்பரப்படுத்துவதன் மூலம், பொருள்களுக்கான தேவையை அதிகரிக்கச் செய்கிறார்.
   - ❖ எனவே, உற்பத்தியாளர் விளம்பரச் செலவு குறைவதன் மூலம் பயனடைகிறார்.
6. **நிதி வசதி நல்குதல்**
   - ❖ மொத்த வியாபாரி உற்பத்தியாளருக்கு முன்பணம் வழங்குகிறார்.
   - ❖ உற்பத்தியாளர், உற்பத்தி செய்தவுடன் பொருட்களை வாங்கிக் கொள்கிறார்.
   - ❖ எனவே உற்பத்தியாளர், தனது முதலீட்டினை, உற்பத்தி செய்த பொருட்களை இருப்பு வைப்பதில் முடக்குவதில்லை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

7. **இடர் ஏற்பாளர்**
   - ❖ உற்பத்தியாளர் பொருட்களை உற்பத்தி செய்தவுடன், மொத்த வியாபாரி வாங்கிக் கொள்வதால், பொருட்களை இருப்பு வைத்தல், பொருட்களின் தேவையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றில் இருந்து உற்பத்தியாளர் விடுவிக்கப்படுகிறார்.
8. **இணைப்புச் சங்கிலி**
   - ❖ உற்பத்தியாளருக்கும், சில்லறைவியாபாரிக்கும் இடையே, இடையீட்டாளராகச் செயல்பட்டு அவர்களை இணைக்கிறார்.

## பெருவிடைவினாக்கள்

### 1. சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை?

1. சில்லறை வியாபாரிகள் பல்வேறு பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.
2. சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகப் பொருட்களை வாங்கி, அவற்றைச் சிறு அளவில், நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.
3. முக்கியச் சந்தைப் பகுதிக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயோ சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.
4. பொதுவாக மொத்த வியாபாரியிடம், கடன் அடிப்படையில் சரக்குகளை வாங்கி, நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு விற்கின்றனர்.
5. சில்லறை வியாபாரிகள், நுகவோரிடம் நேரடித் தொடர்பிலும், உற்பத்தியாளரிடம் இருந்து விலகியும் இருப்பார்.

### 2. மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை? ( ஜூன் 2019 )

1) **பொருட்களை ஒன்று திரட்டல்**
   - ❖ உற்பத்தியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களிடமிருந்து, வியாபாரிகள் பல வகைப்பட்ட பொருட்களை வாங்கி ஒன்று திரட்டுகின்றனர்.
2) **பொருட்களை இருப்பு வைத்தல்**
   - ❖ உற்பத்தியாளரிடம் வாங்கிய பொருட்களை, விற்பனை வரையில், அதன் தரம் குறையாமல் சேமக்காப்பு செய்கின்றனர்.
3) **விநியோகம்**
   - ❖ மொத்த வியாபாரி நாடெங்கிலும் உள்ள சில்லறை வியாபாரிகளுக்கு, பொருட்களை விற்பனை செய்வதன் மூலம், திறம் பட விநியோகிக்கும் பணியை மேற்கொள்கிறார்.
4) **நிதிவசதி அளித்தல்**
   - ❖ மொத்த வியாபாரி உற்பத்தியாளருக்கும், தயாரிப்பாளருக்கும் முன்பணம் அளிப்பதன் மூலமி நிதி வசதி நல்குகிறார்.
   - ❖ அதுபோலவே, சில்லறை வியாபாரிகளுக்கு, கடன்விற்பனை செய்வதன் மூலம் இரு முனையிலும் நிதி வசதி அளிப்பவராகச் செயல்படுகிறார்
5) **இடர் ஏற்பு**
   - ❖ பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டவுடன், வாங்கி அவற்றைத் தமது பொறுப்பில் பண்டகக் காப்பு செய்வதால்,
   - ❖ விலைவீழ்ச்சி, பொருள் கெட்டுப்போதல், பொருட்களின் அழிவு, இருப்புவைப்பதால் ஏற்படும் பிற இழப்புகள், பொருட்களின் தேவையில் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை மொத்த வியாபாரியே ஏற்றுக் கொள்கிறார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

6) <u>தரப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், கட்டுமம் செய்தல்</u>

- தரம், வகை, வடிவு, கசிவு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிற்கு ஏற்ப உற்பத்திப் பொருட்களை மொத்த வியாபாரிகள் பிரித்து வகைப்படுத்தி வைக்கின்றனர்.
- பொருட்களைக் கட்டுமம் செய்தல், வணிகக் குறியீடுதல் ஆகிய பணிகளையும் மொத்த வியாபாரிகள் செய்கின்றனர்.

7) <u>போக்குவரத்து வசதி அளித்தல்</u>

- மொத்த வியாபாரி, உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை மொத்தமாக வாங்கி, தமது பண்டகச்சாலையில் இருந்து தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம், போக்குவரத்து வசதி அளிக்கிறார்.

**3. சில்லறை வியாபாரிகளின் பணிகள் யாவை?**

1) <u>வாங்குதல்</u>
- நுகர்வோரின் தேவையை மதிப்பீட்டு, மொத்த வியாபாரிகளிடமிருந்து, மிகச்சிறந்த பல்வேறு வகையான பொருட்களை வாங்கித் தமது கடைகளில் விற்பனைக்கு வைக்கின்றனர்.

2) <u>இருப்புவைத்தல்</u>
- பொருட்களை விற்பனைக்குத் தயார் நிலையில், காட்சிக்கு வைத்திருக்கின்றனர்.

3) <u>விற்பனை செய்தல்</u>
- நுகர்வோர்களுக்கு அவரது தேவைகள், சுவை, விருப்பம் மற்றும் முன்னுரிமைக்கேற்ப சிறு அளவுகளில் விற்பனை செய்கின்றனர்.

4) <u>வகைப்படுத்தல் மற்றும் கட்டுமம் செய்தல்</u>
- உற்பத்தியாளர் மற்றும் மொத்த வியாபாரிகளால் வகைப்படுத்தப் படாத பொருட்களை அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி, அவற்றைக் கட்டுமம் செய்கின்றனர்

5) <u>இடர் ஏற்றல்</u>
- சில்லறை வியாபாரி, நுகர்வோரின் எதிர்காலத் தேவைகேற்ப பொருட்களை வாங்கி இருப்பு வைக்கிறார்.
- இதனால் தீயினால் அழிவு, திருட்டு, தரக்குறைவு, கெட்டுப்போதல் மற்றும் விலை ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் விளையும் இடர்களை ஏற்றுக் கொள்கிறார்.

6) <u>போக்குவரத்து செய்தல்</u>
- சில்லறை வியாபாரி உற்பத்தியாரிடமிருந்து, பொருட்களைத் தமது சில்லறை விற்பனையகங்களுக்கு எடுத்துச் செல்வதன் மூலம் போக்குவரத்துப் பணியினை மேற்கொள்கிறார்.

7) <u>நிதியளிப்பு</u>
- சில சில்லறை வியாபாரிகள், தமது வாடிக்கையாளருக்குக் கடன் விற்பனை, விற்பனைக்குப் பின், குறைபாடுடைய பொருட்களை மாற்றித்தருதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **சில்லறை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் ஆற்றிடும் பணிகள் யாவை?**

1) **நிதி வசதி அளித்தல்**
   - ❖ மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் விற்பனை செய்வதன் மூலம் நிதி வசதி நல்குகிறார்.

2) **தேவையைப் பூர்த்தி செய்தல்**
   - ❖ மொத்த வியாபாரி சில்லறை வியாபாருக்கு அவரின் தேவைக்கு ஏற்பச் சிறிய அளவில் பொருள்களை விற்பதால், அவரின் இட இடர்பாட்டை போக்குகிறார்.

3) **புதிய பொருட்களை அறிமுகம் செய்தல்**
   - ❖ மொத்த வியாபாரி, புதிய பொருள்கள் மற்றும் அவற்றின் உபயோகம் குறித்த தகவல்களை, சில்லறை வியாபாரியின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்.
   - ❖ எனவே, பொருளைப் பற்றிய சிறப்பறிவு, ஆலோசனைகளை சில்லறை வியாபாரி பெறுகிறார்

4) **விலை நிலைப்பாடு**
   - ❖ மொத்த வியாபாரி, சந்தையின் தேவையை அறிந்து, அதற்கேற்பப் பொருள்களை அளிப்பதால், விலை வேறுபாடுகள் மூலம் ஏற்படும் நட்டத்தில் இருந்து சில்லறை வியாபாரிகளைப் பாதுகாக்கிறார்.

5) **போக்குவரத்து சிக்கனம்**
   - ❖ மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரியின் இடத்திற்கே சென்று பொருட்களை வழங்குவதன் மூலம், சில்லரைவியாபாரயின் நேரத்தையும், போக்குவரத்துச் செலவையும் மிச்சப்படுத்துகிறார்.

6) **முறையான விநியோகம்**
   - ❖ சில்லறை வியாபாரிகள், பெருமளவில் பொருட்களை வாங்கி, இருப்பு வைத்துக் கொள்ளாமல், தனது தேவைக் கேற்ப அவ்வப்போது சிறு, சிறு அளவில் பொருட்களை வாங்கிக்கொள்ள மொத்த வியாபாரி உதவுகிறார்.

---

5. **நுகர்வோர்களுக்குச் சில்லறை வியாபாரிகள் ஆற்றிடும் சேவைகள் யாவை?**

1) **தொடர்அளிப்பு**
   - ❖ சில்லறைவியாபாரி, பல்வேறு தயாரிப்பாளர்களின் பல்வேறு வகைப் பொருட்களை வாங்கி, ஒன்று திரட்டி நுகர்வோருக்கு விற்பதற்காக, எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்கிறார்.
   - ❖ இதனால் வாங்குபவர், தனக்கு தேவைப்படும் பொருட்களை, தேவைப்படும் நேரத்தில், தேவைப்படும் அளவுகளில் வாங்க முடிகிறது.

2) **புதிய பொருட்கள் குறித்த தகவல்கள்**
   - ❖ சில்லறை வியாபாரி, திறம்படப் பொருட்களைக் காட்சிப்படுத்துதல் மூலமாக, சந்தையில் அறிமுகமாகும் புதிய பொருட்கள் குறித்துத் தகவல்களைப் பரப்புகிறார்.

3) **கடன் வசதிகள்**
   - ❖ சில வேளைகளில், சில்லறை வியாபாரிகள் தனது வாடிக்கையருக்கு, கடன்வசதி அளித்தல் மூலம், அவர்களின் அன்றாட செயல்பாட்டிற்கு உதவுகின்றனர்.

4) **தேர்ந்தெடுத்து வாங்கும் வசதியளித்தல்**
   - ❖ சில்லறை வியாபரிகள், தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களின் பல்வேறு வகைகளை, ஒன்று திரட்டி வைப்பதன் மூலம் , வாடிக்கையளார் பொருட்களை மனநிறைவுடன் தேர்ந்தெடுத்து வாங்க வசதியளிக்கிறார்.

5) **<u>இதர சேவைகள்</u>**

1. வாடிக்கையர் வாங்கும் பொருட்களை, அவர்களின் இருப்பிடத்திற்கே கொண்டு சென்று வழங்குதல்
2. வாடிக்கையருக்கு விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை அளித்தல்.
3. தமது வாடிக்கையருக்கு, ரொக்கக் கழிவு வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து தருகின்றனர்.

**6. வழங்கல் வழியினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

1) **<u>பொருட்களின் தன்மைகள்</u>**

- ❖ பருவகால உற்பத்திப் பொருட்களைக் குறுகிய வழங்கல் வழி மூலமே வினியோகிக்க முடியும்.
- ❖ நுகர்வோரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும், தரம் குறைந்த பொருட்கள் நேரடியாக நுகர்வோருக்கு அளிக்கப்படுகிறது.
- ❖ தரமான பொருட்கள் இடைநிலையர் மூலமாகவே விநியோகிக்கப்பட வேண்டும்.
- ❖ பூக்கள், பால் முதலிய விரைவில் அழியும் தன்மையுடைய பொருட்களை விரைவாக நுகர்வோரைச் சென்றடைய வேண்டும்.
- ❖ குளிர்சாதனப் பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம் போன்ற தொழில் நுட்பப் பொருட்களுக்கு விற்பனைக்கு முன்னும், பின்னும் தொழில் நுட்ப ஆலோசனைகள் தேவைப்படுவதால், அவை உற்பத்தியாளரால் நேரடியாகவோ அல்லது குறைந்தபட்ச இடைநிலையர் வாயிலாகவோ விநியோகிக்கப் படவேண்டும்.

2) **<u>சந்தையின் தன்மைகள்</u>**

- ❖ பொருட்களுக்கான சந்தையின் அளவு, வழங்கல் வழியைத் தீர்மானிக்கிறது.
- ❖ பொருட்கள் அதிகமான பரப்பில், விநியோகிக்கப் பட்டால், அதிக எண்ணிக்கையிலான இடைநிலையர் வேண்டும்.
- ❖ குறைந்த பரப்பளவில் மட்டுமே வினியோகிக்கப் பட்டால், இடைநிலையர் இன்றி நேரடியாகவே விநியோக்கலாம்.

3) **<u>நுகர்வோர் எண்ணிக்கை</u>**

- ❖ சில வாடிக்கையாளர்களால் மட்டும், பெருமளவு பொருட்கள் வாங்கப்படுமானால் மையப்படுத்தப்பட்ட விநியோக அமைப்பே போதுமானது.
- ❖ பெருமளவு நுகர்வோரால் குறைந்த அளவுப் பொருட்கள் மட்டுமே வாங்கப்படுமானால், அதிக எண்ணிக்கையிலான இடைநிலையர் தேவைப்படுவர்.

4) **<u>இடைநிலையர் காரணி</u>**

- ❖ அனுபவமுள்ள மற்றும் அதிக அளவில் பொருட்களை விற்கும் திறமையுடைய இடைநிலையர் மட்டுமே உற்பத்தியாளரால் விரும்பப்படுவர்.
- ❖ இடைநிலையர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, பொருள்களின் அடக்க விலையும் அதிகரித்து விடும்.
- ❖ எனவே, குறைந்த எண்ணிக்கையிலான இடைநிலையர்கள் மட்டுமே பொருள்களை விநியோகிக்கப் பயன்படுத்த வேண்டும்.
- ❖ விநியோகச் செலவைக் குறைப்பதன் மூலம், விற்பனை விலையும் குறையும்.

5) **<u>தயாரிப்பாளரின் திறன்</u>**

- ❖ நிதிவளம் நிறைந்த உற்பத்தியாளர், உயர் தொழில் நுட்ப வழங்கல் வழியினை உருவாக்கி, பொருட்களின் அடக்க விலையினைக் குறைக்கிறார்.

6) **<u>வழங்கல் வழியின் செலவும், நேரமும்</u>**

- ❖ இடைநிலையர் வழங்கும் தரமான சேவையுடன், வழங்கல் வழியின் செலவினம் தொடர்புடையது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ சாதாரணமான பொருட்கள், சிக்கனமான விலையில் உரிய நேரத்தில் நுகர்வோரைச் சென்றடைய வேண்டும்.

7) **பொருளுக்கான சேவைகளின் தேவை**

- ❖ நிறுவுதல், இயக்கிக் காண்பித்தல் முதலான சேவைகள் தேவைப்படும் இயந்திரச் சாதனங்கள் போன்றவற்றை விநியோகிக்க, குறைந்த அளவிலான வழங்கல் வழி தான் உகந்தது.

8) **பொருளின் வாழ்க்கை சுழற்சி**

- ❖ ஏற்கனவே சந்தையில் நன்கு அறிமுகப் படுத்தப்பட்ட பொருட்களுக்குச் சாதாராண வழங்கல் வழியே போதுமானது.
- ❖ ஆனால், சந்தையில் புதிதாக அறிமுகமாகும் பொருட்களுக்கு, அனுபவமுள்ள இடைநி-லையர் மூலம் சந்தை இடல் வேண்டும்.

---

## கூடுதல் வினா

1. **வணிக முகவர்களின் வகைகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.**

( செப் 2020 )

1) **தரகர்கள்**

- ❖ மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி வியாபாரத்தை இலாபக்கரமாக நிறைவேற்றி அதற்கெனக் கழிவு பெறும் நபரையே தரகர் என்பர்.
- ❖ அவரது சேவைக்கு வழங்கப்படும் ஊதியம் 'தரகு' ஆகும்.
- ❖ அவர் வாங்குபவரையும், விற்பவரையும் ஒன்றிணைந்து பேரத்தை முடித்து ஒப்பந்தத்தை இறுதி செய்கிறார்.

2) **தன் பொறுப்பு முகவர்கள்**

- ❖ உற்பத்தியாளர் தம் பொருளை விற்பனை செய்யப் பொருட்களை ஒப்படைத்து நியமனம் செய்யப்படும் வணிக முகவர் தன் பொறுப்பு முகவர் ஆவார்.
- ❖ பொருட்களின் உரிமையைப் பெறாமல் பொருட்களைப் பெற்று இருப்பு வைத்துக் கொண்டு செயல்படுகிறார்.

3) **கழிவு முகவர் அல்லது அனுப்பீடு பெறுநர்**

- ❖ தனக்கு கிடைக்கும் கழிவிற்காகப் பொருட்களை வாங்கி விற்பவரே கழிவு முகவர் ஆவார்.
- ❖ இவரது நடவடிக்கை தொடர்பான அனைத்து இடர்களையும் பொருளின் உரிமையாளர் ஏற்கிறார்.
- ❖ இவர் எவ்வித இடர்களையும் ஏற்பது இல்லை.

4) **பிணைமுகவர்**

- ❖ எந்த ஒரு முகவர் கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருளுக்கு உரிய விலையை வசூலித்துத் தருவதாகத் தன்னுடைய முதல்வருக்கு உத்தரவாதம் அளிக்கிறாரோ அவரே பிணைமுகவர் ஆவார்.
- ❖ கடனுக்குப் பொருட்களை வாங்கியவர் உரிய விலையைச் செலுத்தத் தவறும் போது அந்த நட்டத்தைப் பிணைமுகவரே ஏற்கிறார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5) **ஏலதாரர்**

- பொருட்களின் உரிமையாளர் சார்பாகப் பொருட்களை ஏலத்தின் மூலம் விற்றுத் தரும் பணியை மேற்கொள்பவரே ஏலதாரர் ஆவார்.

6) **பண்டகக்காப்பாளர்**

- பண்டகக் காப்பக உரிமையாளர் தமது பண்டகச்சாலையில் வியாபாரியின் பொருளை வைத்துக் காப்பிடுவதற்காக பொருட்களைப் பெற்றுக் கொள்கிறார்.
- மிகுந்த கவனத்துடனும், பொறுப்புணர்வுடனும் அப்பொருளைத் தமது பண்டகச்சாலையில் பாதுகாக்கிறார்.
- அவரின் இப்பணிக்காக ஒரு தொகை ஊதியமாக வழங்கப்படும்.
- தமக்குரிய தொகை கிடைக்காத போது அப்பொருளைத் தம்மிடமே வைத்துக்கொள்ள அப்பொருள் மீது இவருக்கு 'பற்றுரிமை' உண்டு.

# அத்தியாயம் 24.சில்லறை வியாபாரம் செய்தல்

## குறுவிடைவினாக்கள்

1. **சில்லறை வியாபாரம் செய்தல் என்றால் என்ன?**

- நுகர்வோருக்கு நேரடியாக பொருள்களையும், சேவைகளையும் சிறிய அளவில் விற்பனை செய்யும் நடைமுறை சில்லறை வியாபாரம் செய்தல் ஆகும்.

2. **மடங்குக் கடையின் பொருள் யாது?**

- தயாரிப்பாளர்கள் (அ) இடைநிலையர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ், பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான கடைகளை அமைத்து, தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லரை கடைகள் மடங்கு கடைகள் என்கிறோம்.
- இதனை, தொடர் பண்டகச்சாலைகள் எனவும் அழைக்கப்படுகிறது.

3. **விற்பனை எந்திரத்தின் இரண்டு நன்மைகளைக் கூறுக.**

- நாணயங்கள், அட்டைகள் அல்லது வில்லைகள் கொண்டு இயக்கக்கூடியது. வாங்குபவர் நாணயம் அல்லது அட்டையை எந்திரத்தினுள் செலுத்தினால், குறிப்பிட்ட அளவுள்ள பொருள் வெளியில் வரும். அதைப் பெற்றுக் கொள்வர்.
- இவை வங்கிகளில் தானியங்கி ரொக்கம் எடுக்கும் எந்திரம் (ATM) போன்று செயல்படுகிறது. இதனால், எப்பொழுதும், எங்கும் பணம் எடுத்துக்கொள்ளலாம்.
- தொடர்வண்டி நிலையங்கள், விமான நிலையங்கள், பெட்ரோல் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் இத்தகைய எந்திரங்கள் அமைக்கப்பட்டு,எந்த நேரத்திலும் பொருட்களை வாங்கும் வசதியை தருகிறது.

4. **சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- ஒருவகைப் பொருட்களில், ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும், விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள், சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்.

  **உதாரணம்** :

  1) இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர்
  2) துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினா

1. **பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான பொருட்களை விற்பனை செய்யும் சில்லறை கடையின் பெயர் என்ன? ஓர் உதாரணம் தருக.**
   1) மடங்கு கடைகள் அல்லது தொடர் பண்டக சாலைகள் ( மார்ச் 2020 )
   2) **உதாரணம்** : பாட்டா ஷூ கம்பெனி

## சிறுவிடை வினாக்கள்

1. **பொதுப் பண்டக சாலைகளின் இயல்புகளைக் கூறுக.**
   - நுகர்வோர்களுக்கு வசதியாக, பெரும்பாலான நேரங்களில் கடை திறந்திருக்கும்.
   - தெரிந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதியும் உண்டு.
   - பல சரக்கு, மளிகை, அழகு சாதனங்கள், தின்பண்டங்கள், எழுதுபொருட்கள், குளிர்பானங்கள் போன்ற பொருட்கள் விற்பனை செய்வர்.

2. **வாடகைக் கொள்முதல் முறைக்கும் தவணை விற்பனை முறைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

| வ.எண் | வாடகை கொள்முதல் முறை | தவணைமுறை விற்பனை |
|---|---|---|
| 1 | *விற்பனை ஒப்பந்தம் :* இது ஒப்பந்த விற்பனை அல்ல. ஏனெனில் இறுதி தவணையை செலுத்தும் வரை பொருளின் உரிமை விற்பனையாளரிடமே உள்ளது. | இது ஒப்பந்த விற்பனை ஆகும். ஏனெனில் முதல் தவணைத் தொகையை செலுத்திய உடனேயே வாங்குநர் உரிமையாளர் ஆகிறார். |
| 2 | *பொருளை வாங்கியவரின் உரிமைகள் :* பொருளை வாங்கியவர், அதை வாடகைக்கோ அல்லது விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது. | பொருளைவாங்கியவருக்கு, அப்பொருளின் மீது முழு உரிமை இருப்பதால், அவர் அப்பொருளை எதுவும் செய்யலாம். |
| 3 | *நடவடிக்கை :* தவணைத் தொகையை செலுத்தத் தவறினால், வாங்கியவரிடமிருந்து பொருட்களை திரும்ப எடுத்துக் கொள்ளவும், இதுவரை செலுத்திய தொகையை திருப்பி அளிக்காமலும் இருக்க விற்பனையாளருக்கு உரிமை உண்டு. | தவணைத் தொகையை வாங்கியவர் செலுத்தத் தவறினால், அப்பொருளை மீண்டும் திரும்ப எடுத்துக் கொள்ள விற்பனையாளரால் முடியாது. ஆனால் தனது தொகையைப் பெற சட்டப்படியான நடவடிக்கையை வாங்கியவர் மீது எடுக்கலாம். |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 4 | *வாராக் கடன் :* விற்ற பொருளின் உரிமை விற்பனையாளரிடமே இருப்பதால் வாராக் கடன் ஏற்படுவதில்லை. | பொருட்களை வாங்கியவர் முழுதொகையும் செலுத்தும் முன் பொருளின் உரிமையாளர் ஆவதால் வாராக் கடன் ஏற்பட அதிக வாய்ப்புண்டு. |

3. **சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.** ( மார்ச் 2019 ), ( செப் 2020 )

1) சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.
2) பொருள்கள் யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக, அறைகலன்கள் மீது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
3) வாடிக்கையாளர்கள் தேவையான பொருள்களை, தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்திவிட்டு, வீட்டுக்கு எடுத்துச்செல்வர்.
4) இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
5) துறைவாரிப் பண்டகசாலை போன்று அமைந்திருப்பதால், ஒரே கூரையின் கீழ், அனைத்து வகைப் பொருள்களையும், வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது.
6) இதை அமைக்க, அதிக முதலீடு தேவைப்படுகிறது.

4. **அஞ்சல் வழி வியாபாரத்தைப் பற்றி விளக்குக.**

- வாடிக்கையாளரிடமிருந்து ஆணைகளைப் பெற்று, பொருள்களை அஞ்சல் வழியாக அவர்களின் வீட்டிற்கே அனுப்பி, வியாபாரம் செய்வதை அஞ்சல்வழி வியாபாரம் என்கிறோம்.
- இவ்வகையில் வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.

<u>செயல்முறை</u>

1. <u>விளம்பரம் செய்தல்</u>

- விற்கப்படும் பொருள்களைப் பற்றிய விவரம் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, கைபேசி போன்றவைகள் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது.

2. <u>ஆணைகளைப் பெற்று சரக்கை அனுப்புதல்</u>

- சரக்கனுப்பக் கோரும் ஆணைகளைப் பெற்றவுடன், முறையாகக் கட்டுமம் செய்யப்பட்டு, பதிவுப் பார்சல் அஞ்சல் வழியில், வாடிக்கையாளரின் அஞ்சல் நிலையத்திற்கோ, வங்கிக்கோ ( மதிப்பு, செலுத்தத்தக்க அஞ்சல் Value Payable Post ) அனுப்பப்படுகிறது.

3. <u>உரிய தொகையைப் பெறுதல்</u>

- வாடிக்கையாளர், பொருள்களின் விலையை முன்கூட்டியே முழுவதுமாகவோ அல்லது சரக்கைப் பெற்ற உடனேயோ செலுத்தலாம். இவ்வகையில் வாரக் கடன் ஏற்படுவதில்லை.
- அழுகும் பொருள்கள் யாவும் அஞ்சல் வழி வணிகத்துக்கு உகந்தது அல்ல.
- புத்தகங்கள், கைக்கடிகாரங்கள் போன்ற எடைகுறைவான, சிறிய பொருட்கள் மட்டுமே ஏற்றவை.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெருவிடைவினாக்கள்

1. **துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக. ( மார்ச் 2019 )**

**1. பேரளவு அமைப்பு**

❖ அதிக முதலீடு செய்து, உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும், பெரிய சில்லறைவியாபார நிறுவனம், துறைவாரிப் பண்டசாலை ஆகும்.

**2. பல்பொருள் விற்பனை**

❖ மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும், ஒரே இடத்தில் 'குண்டூசி முதல் வாகனம் வரை' விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன்பெற முடியும்.

❖ மேலும் ஒரே பொருளின் பலவகைகளும் இங்கு கிடைக்கும்.

**3. துறைகளின் ஒருங்கிணைப்பு**

❖ பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு வகையான பொருள்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.

**4. வாங்கும் வசதிகள்**

❖ வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச்சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுது போக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால், குடும்பமாக வந்து பொருள்களை வாங்க முடிகிறது.

**5. மையக் கொள்முதல்**

❖ அனைத்து வகைப் பொருள்களும், ஒரு மையத்தின் மூலம் நேரடியாக தயாரிப்பாளிடமிருந்து, பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

---

2. **நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை என்றால் என்ன? அதன் நன்மைகள் யாவை?**

❖ நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை, ஒரு சில்லறை விற்பனை நிலையமாகும்.

❖ நுகர்வோர்கள் அனைவரும், தாங்களாகவே ஒன்று சேர்ந்து தொடங்கி, தாமாகவே நடத்தி, தங்களின் உறுப்பினர்களுக்கே பொருட்களையும், சேவைகளையும் குறைந்த விலையில் விற்பனை செய்து பயனடைகிறார்கள்.

❖ இது குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினர் ஒன்று சேர்ந்து, குறைந்த பட்சம் 25 நபர்களைக் கொண்டு, கூட்டுறவு சட்டத்தின்கீழ் பதிவு செய்து உருவாக்கப்படுகிறது.

**நன்மைகள்:**

❖ கூட்டுறவு பண்டகசாலையின் தொடக்கமுதல், உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் பங்குகளின் மூலம் கிடைக்கிறது.

❖ உறுப்பினர்களால், ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற விதிப்படி, மக்களாட்சி முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட குழு மூலம் மேலாண்மை செய்யப்படுகிறது.

❖ இங்கு, கலப்படம் அற்றப் பொருட்கள், விற்பனை செய்யப் படுகின்றன.

❖ ரொக்க விற்பனை நடைபெறுவதால், வாராக்கடன் ஏற்படுவதில்லை.

❖ தமிழ்நாட்டில் இவ்வகை கூட்டுறவு பண்டகசாலைகள் மிகவும் புகழ் பெற்று விளங்குகின்றன.

எடுத்துக்காட்டாக, சென்னை காமதேனு மற்றும் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடிகள், வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி முதலியன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **உள்நாட்டு வியாபாரத்தில் தொழில் வர்த்தகச் சங்கங்களின் பங்கினை விவரி.**

❖ வாணிகம் மற்றும் தொழிலமைப்புகளின் கூட்டமைப்பு என்பது ஒரு நாட்டின், மாநிலத்தின் அல்லது மாவட்டத்தின் தொழிலதிபர்கள், வியாபாரிகள், நிதியாளர்கள் அனைவரும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஓர் சங்கம் ஆகும்.

❖ அனைத்து தொழிலமைப்புகளும், சங்க உறுப்பினர்களாகச் செயல்பட்டு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் நல்லுறவு கொண்டு, பிரச்னைகளைத் தீர்த்து, வளர்ச்சி பெறுவது இதன் முக்கிய நோக்கமாகும்.

❖ வாணிபம் மற்றும் தொழில் நலன்காக்கும் இலாப நோக்கற்ற அமைப்பாகச் செயல்படுகிறது.

**செயல்பாடுகள்**

1) இச்சங்கமானது, நாட்டிலுள்ள வியாபார, வர்த்தக மற்றும் தொழிற்சாலைகளுக்கு பாதுகாவலாகச் செயல்படுகிறது.
2) நாட்டின் உள்நாட்டு வியாபார பெருக்கத்திற்கு, செயல் ஊக்கியாக திகழ்கிறது.
3) வியாபாரம், தொழில் மற்றும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளை, திட்டங்களை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் அரசுடன் இணைந்து செயல்படுகிறது.

**இந்தியாவில் உள்ள சில சங்கங்கள்**

1. இந்தியத் தொழில் வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பு (FICCI)
2. தொழில் வர்த்தக அமைப்புகளின் கூட்டமைப்பு (ASSOCHAM)
3. இந்தியத் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு (CII)
4. தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கம்
5. தமிழ்நாடு வணிகர் சங்கங்கள்

**சங்கங்களின் பங்கு**

1. மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து விதிமுறைகள், நெடுந்சாலைகள், சரக்குகள் பரிமாற்றத்திற்கான வசதிகளை உருவாக்குதல்.
2. மத்திய சரக்கு மற்றும் சேவைவரி, மாநில சரக்கு மற்றும் சேவை வரி ஒருங்கிணைத்தல் (GST)
3. வேளாண் பொருட்களை மற்றும் வேளாண் சம்பந்தப்பட்ட பொருள்கள் விற்பனைக்கு திட்டமிட்டு, அரசுகளுக்கு ஆலோசனை வழங்குதல்
4. சரியான அளவுகள் மற்றும் எடை போடுதல், கலப்படம் போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணுதல்
5. அரசுகளுடன் பேசி மின்சாரம், சாலைவசதி, தொடர் வண்டி வசதி, துறைமுகங்கள் போன்வற்றை விரிவாக்கம் செய்தல்.
6. தொழிலாளர் சட்டங்கள், வேலைவாய்ப்பு, வேலைக் குறைப்பு, ஈடுகட்டுதல் போன்றவைகளைப் பற்றி அரசுடன் பேசி, சரியான முடிவு எடுத்தல்.

---

**கூடுதல் வினா**

1. **ஒரே மாதிரியான கடைகளை அமைத்துத் தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லறை கடையின் பெயரை எழுதி அதன் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.** ( ஜூன் 2019 )

1) கடையின் பெயர் - மடங்கு கடைகள் அல்லது தொடர் பண்டக சாலைகள்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறப்பியல்புகள்

1) **அமைவிடம்**

❖ போதுமான அளவுக்கு வாடிக்கையாளர்கள் அணுகுவதற்கு ஏற்றவாறு மக்கள் நெருக்கம் மிகுந்த வாழ்விடங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் இவ்வகைக் கடைகள் அமைந்திருக்கும்.

2) **பொருளின் தன்மை**

❖ அன்றாட வாழ்வில் தேவைப்படுகின்ற நீண்டகாலம் பயன்படும் ஒரு சில வகையான பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படும்

❖ எடுத்துக்காட்டாக பாட்டாஷூ கம்பெனி காலணிகள், பாலிஷ், சாக்ஸ் வகைகள் அடங்கியவை மட்டும் விற்கப்படுவது.

3) **மைய மேலாண்மை**

❖ இக்கடைகளில் விற்கப்படும் பொருள்கள் யாவும் ஓரிடத்தில் தயாரிக்கப் படுவதாகவோ அல்லது மையக் கொள்முதல் செய்யப்படுவதாகவோ இருக்கும்.

4) **ஒரேவிலை, ரொக்க விற்பனை**

❖ அனைத்துக் கடைகளிலும் பொருட்களுக்கு, ஒரே விலையை நிர்ணயித்து ரொக்கத்திற்கு மட்டும் விற்கப்படுகின்றன.

5) **விற்பனையாளரின் பணி**

❖ வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பொருள்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவதற்கு முழு ஒத்துழைப்பையும் இங்குள்ள விற்பனையாளர்கள் நல்குவர்.

6) **நெகிழ்வுத் தன்மை**

❖ விற்பனையின் அளவைப் பொறுத்தும், வாடிக்கையாளரின் வசதிக்கேற்றவாறும் நகரின் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம் அல்லது புதிய கிளைகளைத் திறக்கலாம்.

---

# அலகு – 8. பன்னாட்டுவணிகம்

## அத்தியாயம் 25. பன்னாட்டு வணிகம்

## குறு வினாக்கள்

1. **பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?**

❖ நாடுகளின் எல்லைகளை கடந்து, செயல்படும் அனைத்து வணிக நடவடிக்கைகளும் பன்னாட்டு வணிகம் எனப்படுகிறது.

---

2. **ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?**

❖ உள் நாட்டிலிருந்து, சரக்கு மற்றும் சேவைகளை அயல் நாட்டிற்கு விற்பனை செய்வது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

---

3. **இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?**

❖ அயல் நாட்டிலிருந்து, பொருட்களை வாங்கி, உள் நாட்டிற்கு கொண்டு வருவது இறக்குமதி வியாபாரம் ஆகும்.

---



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?**

❖ ஒரு நிறுவனம், ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பொருட்களை மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மறு ஏற்றுமதி வணிகம் என்று பெயர்.

5. **பன்னாட்டு வணிகத்திற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.**

❖ உபரியான வளங்களை கொண்டுள்ள நாடுகள், அந்த வளங்களை, பற்றாக்குறையான நாடுகளுக்கு கொண்டு செல்ல பன்னாட்டு வணிகம் அவசியம் ஆகிறது.

❖ வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகள் தொழில் நுட்பவளர்சியின்மை காரணமாக, பொருட்கள் மற்றும் சேவைகளை குறைவான விலைக்கு உற்பத்தி செய்ய முடிவதில்லை. இது போன்ற சூழ்நிலையில்தான், இந்த நாடுகள் தமக்கு தேவையான பொருட்களை, மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தினை கொண்டுள்ள மற்ற நாடுகளிருந்து வாங்குவதற்கு பன்னாட்டு வியாபாரம் அவசியம் ஆகிறது.

## சிறு வினாக்கள்

1. **ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி வணிகத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.**

1) **வளங்களின் சமமற்ற பகிர்வு**

❖ உலக நாடுகள் அனைத்தும், எல்லா இயற்கை வளங்களையும் சமமாகவோ அல்லது சமனற்ற முறையிலோ வளங்களை பெற்றிருக்கின்றன.

❖ இதன்காரணமாக இயற்கைவளங்களை உபரியாக கொண்டுள்ள நாடுகள், தங்கள் நாட்டில் கிடைக்காத, பற்றாக்குறையான வளங்களை கொண்டுள்ள நாடுகளோடு பரிமாற்றம் செய்து கொள்ளவேண்டியதாகிறது.

2) **உற்பத்திக்காரணிகளின் சீரற்ற கிடைப்புத்தன்மை**

❖ நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் ( நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம் ) கிடைப்புத்தனமை சீரற்ற முறையில் அமைந்துள்ளது.

❖ பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்தி காரணியை தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழிவகுக்கிறது.

3) **சிறப்புத் தேர்ச்சி**

❖ சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள், திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவ நிலை, இயற்கை வளங்களின்கிடைப்புத்தன்மை, மற்றும் தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால், சில பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

4) **அடக்கவிலை குறைவு**

❖ உலக நாடுகளுக்கிடையே பொருட்களுக்கான உற்பத்தி செலவு, சமூக பொருளாதார, புவியியல், மக்கள்தொகை, தொழில்நுட்ப மற்றும் நிலவும் அரசியல் சூழல் காரணமாக வேறுபடுகிறது.

❖ இதன்காரணமாக சில நாடுகள் மற்ற நாடுகளைவிட மிக விலை குறைவாகவும் தரமானதாகவும் பொருட்களை உற்பத்தி செய்கின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **மறு ஏற்றுமதி வியாபாரத்தின் தேவை என்ன?**
   1) ஒரு நாடு, பொருட்களை இறக்குமதி செய்யும் நாட்டோடு, எந்த வணிக வழித்தடமும் இல்லாமல் இருந்தால்,
   2) பொருட்களை இறக்குமதி செய்த பிறகு அவற்றை மேலும் மாற்றம் செய்வதற்கோ அல்லது முடிவுற்ற பொருளாக மாற்றவோ போதிய வசதிகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகளில் இல்லாமல் இருந்தால்,
   4) இரண்டு நாடுகளுக்கிடையே வணிக ஒப்பந்தம் இல்லாமல் இருந்தால்,
   5) ஏற்றுமதியாளருக்கும், இறக்குமதியாளருக்கும் இடையே சரியான பொருளாதார உறவு இல்லாமல் இருந்தால், மறு ஏற்றுமதி வியாபாரம் தேவையாகிறது.

3. **பன்னாட்டு வணிகத்தின் வரையறைகள் யாவை?** ( மார்ச் 2020 )
   - ❖ ரோஜர் பென்னட் கூற்றுப்படி, "நாட்டின் எல்லைகளை கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளே பன்னாட்டு வணிகம் ஆகும்".
   - ❖ ஜான்டி டேனியல் மற்றும் லீ எச்ரேடெப் அவர்களின்கூற்றுப்படி, "பன்னாட்டு வணிகம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நடைபெறும் வணிக நடவடிக்கைகள் ஆகும்".

- **பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் ( வரையறைகள் )**
  1) பொருளாதார சார்பு
  2) உள்நாட்டுத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு
  3) ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல்
  4) இயற்கைவளங்களை தவறாக பயன்படுத்துதல்
  5) அரசியல் சுரண்டல்
  6) நாடுகளுக்கிடையே போட்டி
  7) கலாச்சார சீரழிவு

## பெரு வினாக்கள்

1. **பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை?** ( செப் 2020 )
   1) நிலவியல் சிறப்புத் தேர்ச்சி
      - ❖ உலக நாடுகள் ஒவ்வொன்றும், மக்களின் வாழ்க்கைத் தேவைக்காக, தன்னிடம் உபரியாக உள்ள வளங்களை கொடுத்து, பற்றாக்குறையான வளங்களை மற்ற நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு பன்னாட்டு வணிகம் தேவையாகிறது.
   2) இயற்கைவளங்களை முழுமையாக பயன்படுத்துதல்
      - ❖ ஒவ்வொரு நாடும், தன்னிடம் இயற்கையாகவே அமைந்துள்ள வளங்களைப் பயன்படுத்தி, அதிக பொருட்களை உற்பத்தி செய்ய முயல்கிறது.
      - ❖ இந்த அதிகப்படியான பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத நாடுகளோடு பரிமாறிக்கொள்ள பன்னாட்டு வணிகம் உதவி செய்கிறது.
   3) பொருளாதார வளர்ச்சி
      - ❖ வளரும் நாடுகள் இயந்திரம், தொழில் நுட்பம், மற்றும் கருவிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதன் வாயிலாக, விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4) **வேலைவாய்ப்பை உருவாக்குதல்**

- ❖ பன்னாட்டு வணிகம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனங்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பையும், அனுப்புகை மற்றும் அகற்றீட்டு முகவர், சரக்காணை இல்லம், போன்ற இடைநிலையர் மூலம் மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது.

5) **வாழ்க்கைத்தரம் மேம்படுதல்**

- ❖ பன்னாட்டு வணிகத்தின் வாயிலாக, உள் நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பல்வேறு விதமான பொருட்களை, வெளி நாட்டிலிருந்து வாங்கி பயன்படுத்த முடிகிறது.
- ❖ நாடுகளுக்கு இடையே, சரக்கு மற்றும் சேவை பரிமாற்றம் என்பது மக்களின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்துகிறது.

6) **விலை சமனிலைப் படுத்துதல்**

- ❖ எப்பொழுதெல்லாம் குறிப்பிட்ட பொருட்களின் விலை, உள் நாட்டில் உயருகிறதோ அப்பொழுது மற்ற நாட்டிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்து விலையை சமன்செய்கிறது.
- ❖ அதேபோன்று, குறிப்பிட்ட பொருட்களின் விலை குறையும்போதெல்லாம் அந்த பொருட்களை அதிக அளவில் மற்ற நாடுகளுக்கு ஏற்றமதி செய்வதன் மூலம் விலையை நிலைப்படுத்துகிறது.

7) **அதிக இலாபத்திற்கான வாய்ப்பு**

- ❖ வியாபார நிறுவனங்களை, அதிகமான பொருட்களை உற்பத்தி செய்து, அதிக விலைக்கு விற்பதன் வாயிலாக அதிக இலாபத்தை ஈட்ட உதவுகிறது.

8) **பன்னாட்டு அமைதி**

- ❖ உலக நாடுகள் தனித்தனியே இயங்கினாலும், பன்னாட்டு வணிகம் மற்ற நாடுகளை சார்ந்திருக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது.
- ❖ மேலும் கலாச்சாரம், பண்பாடு, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவற்றை பரிமாறிக்கொள்ள உதவுகிறது.
- ❖ பன்னாட்டு வணிகம் உலக மக்களிடையே கலாச்சார சமூக உறவுகளை வளர்க்க உதவுகிறது.
- ❖ ஒட்டு மொத்தமாக உலக அமைதிக்கு வழிவகுக்கிறது.

2. **பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் யாவை?** ( ஜூன் 2019 )

1) **பொருளாதார சார்பு**

- ❖ பன்னாட்டு வணிகம், ஒரு நாடு இறக்குமதிக்காக மற்ற நாடுகளை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய சூழ் நிலையை உருவாக்குகிறது.
- ❖ இதனால் இறக்குமதி செய்யும் நாடு, தானாகவே ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு அடிமையாகும் சூழல் ஏற்படுகிறது.

2) **உள்நாட்டுத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு**

- ❖ பன்னாட்டு வணிகம், உள் நாட்டு தொழில்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது.
- ❖ மேலும் கட்டுப்பாடற்ற இறக்குமதியும், அயல் நாட்டு நிறுவனங்களின் கடுமையான போட்டியும், உள் நாட்டுத் தொழில்களை முற்றிலும் அழிக்கக் கூடும்.

3) **ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல்**

- ❖ பன்னாட்டு வணிகம் ஆடம்பரப்பொருட்கள், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் ஆகியவற்றை அதிகம் கொள்முதல் செய்ய வழிவகுக்கிறது.
- ❖ இது மக்கள் நலனை பாதிக்கிறது.

4) **இயற்கைவளங்களை தவறாக பயன்படுத்துதல்**

- ❖ அரிய இயற்கைவளங்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதன் மூலம், அவை வெகு விரைவாக வெறுமையாகிவிடுகின்றன.
- ❖ இதனால் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டில் சுற்றுச்சூழல் பேரழிவு ஏற்படுகிறது.

5) **அரசியல் சுரண்டல்**

- ❖ பன்னாட்டு வணிகம் உலக நாடுகளிடையே பொருளாதார சார்பு நிலையை உருவாக்குகிறது.
- ❖ பன்னாட்டு நிறுமங்கள், உலக நாடுகளின் அரசு கொள்கை முடிவுகளை, தங்களுக்கு சாதகமாக மாற்றுகின்றன.

6) **நாடுகளுக்கிடையே போட்டி**

- ❖ ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் போட்டி, நாடுகளுக்குகிடையே போட்டியாக உருவெடுக்கிறது.
- ❖ இது நாடுகளுக்கிடையே சச்சரவுகளை உருவாக்கி, போர் ஏற்படக்கூடிய சூழலை உருவாக்குகிறது.

7) **கலாச்சார சீரழிவு**

- ❖ இளைய தலைமுறையினர், அன்னிய நாட்டு மோகத்தில், தங்கள் வாங்கும் சக்தியையும் மீறி, பொருட்களை வாங்கி, தங்களை சமுதாயத்தில் மேம்பட்டவர்களாக காட்ட முற்படுகின்றனர்.
- ❖ இது நாட்டின் கலாச்சார சீரழிவிற்கு காரணமாக அமைவதோடு, பழமையான வாழ்வியல் முறையையும் அழிக்கிறது.

3. **உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை?** ( மார்ச் 2019 )

| வ. எண் | அடிபடை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் |
| 2 | வியாபாரத்தில் பங்கு பெறுவோர் | ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் |
| 3 | வியாபார முறை | ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது |
| 4 | பயன்படுத்தும் நாணய மதிப்பு | உள்ளூர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல் நாட்டு நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| 5 | போக்குவரத்து | இதில், சாலை மற்றும் இரயில் | கப்பல் மற்றும் விமான |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. | போக்குவரத்து பயன்படுத்தப் படுகிறது |
| 6 | இடர் | இடரின் அளவு குறைவு | இடரின் அளவு அதிகம் |
| 7 | சந்தையின் அளவு | ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டது | ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. |

# அத்தியாயம் 26. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்

## குறுவிடை வினாக்கள்

1. **சரக்காணை என்றால் என்ன?** ( மார்ச் 2019 )
   - ❖ சரக்காணை என்பது, சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும்.
   - ❖ இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு, சரக்கை வாங்குவதற்கான ஆணையை தானோ அல்லது தன் முகவர் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார். அதனையே சரக்காணை என்று அழைக்கப்படுகிறது

2. **ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனங்கள் மூன்றினை குறிப்பிடுக.**
   1) மாநில வணிக கழகம்.
   2) இந்திய வணிக மேம்பாட்டு நிறுவனம்
   3) சரக்குகள் வாரியம்
   4) உலோகங்கள் மற்றும் கனிம வர்த்தகக் கழகம்
   5) ஏற்றுமதி மற்றும் கடன் பொறுப்புறுதி கழகம்
   6) ஏற்றுமதி ஆய்வுக்குழு.

3. **சரக்காணையின் வகைகளை குறிப்பிடுக.**
   1) வெளிப்படை சரக்காணை
   2) வரையறுக்கப்பட்ட சரக்காணை
   3) உறுதி செய்யும் சரக்காணை

4. **நாணய உறுதி கடிதம் என்றால் என்ன?**
   - ❖ இறக்குமதியாளர் மீது, ஏற்றுமதியாளர் வரையும் மாற்று முறை தன்னிடம் வரும்போது, அதற்குப் பணம் தருவதாக, இறக்குமதியாளரின் வங்கி அளிக்கும் உறுதிமொழி அடங்கிய கடிதமே நாணய உறுதி கடிதம் ஆகும்.
   - ❖ நன்கு அறிந்த இறக்குமதியாளருக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

## சிறுவிடை வினாக்கள்

1. **சரக்காணையின் உள்ளடக்கங்கள் யாவை?** ( ஜூன் 2019 )
   - அனுப்பப்பட்ட பொருளின் அளவு
   - பொருட்களின் வடிவமைப்பு
   - விலை
   - கப்பல் ஏற்றுமதிக்கான தன்மை
   - ஏற்றும் முறை
   - விநியோக காலம்
   - கட்டணம் செலுத்தும் முறை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. **வணிக தூதுவர் இடாப்பு என்றால் என்ன?**
   - ❖ இறக்குமதியாகும் சரக்கின் மதிப்பு சரியானதுதான் என்று, சான்று பகரக்கூடிய ஆவணமே வணிக தூதுவர் இடாப்பு ஆகும்.

3. **கப்பல் வாடகை முறி என்றால் என்ன?**
   - ❖ கப்பல் வாடகை முறி என்பது, கப்பல் உரிமையாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் அல்லது அவரது முகவருக்கும் இடையே, ஒரு முழு கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ, குறிப்பிட்ட கப்பல் பயணத்திற்கும் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு சரக்கை ஏற்றிச்செல்ல செய்து கொள்ளும் ஓர் உடன்பாடு ஆகும்.

4. **கப்பல் துணைத்தலைவர் ரசீது என்றால் என்ன?**
   - ❖ கப்பல் தலைவர் அல்லது அவரது உதவியாளர் கப்பலில் சரக்கு பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ரசீது, கப்பல் துணைத்தலைவர் ரசீது ஆகும்.
   - ❖ அதில் சரக்கின் அளவு, கட்டுமங்களின் எண்ணிக்கை, கட்டும நிபந்தனைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும்.

5. **கப்பல் ரசீது என்றால் என்ன?**
   - ❖ கப்பல் ரசீது என்பது, கப்பல் உரிமையாளரோ அல்லது அவரது முகவரோ, குறிப்பிட்ட சரக்கை பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட துறைமுகத்தில், நல்ல முறையில் கொண்டு சேர்க்கப்படும் என்பதற்கான சான்று ஆகும்.

**பெரு வினா விடைகள் :**

1. **ஏற்றுமதி வணிகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை விளக்குக.**
   1. வியாபார தகவல் வினவல்:
      - ❖ ஏற்றுமதியாளர், இறக்குமதியாளரிடமிருந்தோ அல்லது அவரின் முகவரிடம் இருந்தோ பொருட்களை இறக்குமதி செய்வதற்கான எழுத்து மூலமான அரசாணையை பெறுகிறார்.
   2. சரக்காணை பெறுதல் மற்றும் ஏற்றுமதி ஆணையை உறுதிப்படுத்துதல்:
      - ❖ இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு, சரக்கை வாங்குவதற்கான சரக்காணையை, தானோ அல்லது தனது முகவர் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார்.
   3. நாணய உறுதி கடிதம் ஏற்பாடு செய்தல்:
      - ❖ அயல்நாட்டில் உள்ள இறக்குமதியாளரைப் பற்றியும், அவரின் பணம் செலுத்தும் திறன் பற்றியும் ஏற்றுமதியாளர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.
      - ❖ எனவே அவர், இறக்குமதியாளரை நாணய உறுதி கடிதம் ஏற்பாடு செய்து தருமாறு கூறுகிறார்.
   4. ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் குறியீட்டு எண் பெறுதல்:
      - ❖ ஏற்றுமதியாளர் குறியீட்டு எண் பெற, அயல் நாட்டு வணிக பொது இயக்குனரின் மண்டல அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
   5. உறுப்பினர் சான்று பெறுதல்:
      - ❖ ஏற்றுமதியாளர், அரசு வழங்கும் ஏற்றுமதி தொடர்பான சலுகைகளை பெற வேண்டும் எனில், ஏற்றுமதி வளர்ச்சி குழுவிடம் உறுப்பினர் சான்று பெற வேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

6. **பொருட்களை உற்பத்தி செய்தல் / கொள்முதல் செய்தல் / கட்டுமம் செய்தல்:**
   - ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் குறிப்பிட்ட பொருட்களை, தொழிற்சாலைகளிலிருந்தோ அல்லது சந்தையிலிருந்தோ தருவித்துக் கொள்ள வேண்டும்.
   - இறக்குமதியாளர், குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில், பொருட்களை கட்டுமம் செய்யப்பட வேண்டும்.
7. **ஏற்றுமதி ஆய்வு சான்று :**
   - பொருட்கள் கட்டுமம் செய்யப்பட்ட பிறகு, ஏற்றுமதியாளர் ஆய்வு முகைமைக்கு விண்ணப்பித்து சான்று பெற வேண்டும்.
8. **பொருட்களை காப்பீடு செய்தல்:**
   - ஏற்றுமதியாளர் சரக்கை அனுப்புவதற்கு முன், உரிய நிறுவனத்தில் காப்பீடு செய்ய வேண்டும்.
9. **அனுப்புகை முகவர் பின்பற்ற வேண்டிய சில நடைமுறைகள்:**
   - துறைமுக நகரத்தில் சரக்கை பெற்றுக் கொள்ளுதல்.
   - கப்பலிடு ஆணை பெறுதல்.
   - கப்பல் வாடகை முறி ஏற்பாடு செய்தல.
10. **சரக்கை அகற்றுதல் தொடர்பான சில நடைமுறைகள்:**
    - துறைமுக கட்டணம் செலுத்துதல்.
    - சரக்கை அனுப்ப அனுமதி பெறுதல்.
    - கப்பல் தலைவர் ரசீது பெறுதல்.
    - கப்பல் ரசீது பெறுதல்.
11. **பணம் செலுத்த பெறுதல்:**
    - மாற்ற சீட்டு மூலம் பணம் செலுத்த பெறுதல்.
      அ) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள் ஒப்படைத்தல்.
      ஆ) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள் ஒப்படைத்தல்.
    - வங்கி சான்று மூலம் பணம் செலுத்த பெறல்.

2. **கப்பல் ரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

( மார்ச் 2019 ), ( செப் 2020 )

| அடிப்படை | கப்பல் ரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|
| பொருள் | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு, குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும். | இது சரக்கை அனுப்ப, மொத்த கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| மாற்றும் தன்மை | இதை எளிதில் மேலெழுதுதல் வாயிலாக, மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றி தர முடியாது. |
| கடன் பெறுதல் | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம். | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| குத்தகை | இது கப்பலை குத்தகை | இது கப்பலை குத்தகை |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | எடுத்தற்கான ஆதாரம் அல்ல. | எடுத்தற்கான ஆதாரம் ஆகும். |

3. **ஏற்றுமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை பற்றி விளக்கி எழுதுக.**

1. **சரக்கு தொடர்பான ஆவணங்கள்:**
   - சரக்காணை
   - தோற்றுவாய் சான்றிதழ்
   - ஏற்றுமதி ஆய்வு சான்று
2. **சரக்கு அனுப்புகை தொடர்பான ஆவணங்கள்:**
   i) கப்பல் துணைத்தலைவர் ரசீது
   ii) கப்பல் சீட்டு
   iii) கப்பல் ஆணை
   iv) கப்பல் ரசீது
   v) கடல்சார் காப்பீட்டு திட்ட ஆவணம்
   vi) வணிக தூதுவர் இடாப்பு
   vii) ரயில் ரசீது / லாரி ரசீது
3. **பணம் செலுத்துகை தொடர்பான ஆவணங்கள்:**
   - நாணய உறுதி கடிதம்
   - வாணிக இடாப்பு
   - மாற்றுச் சீட்டு
   - வங்கிச் சான்று செலுத்துகை

**I. சரக்கு தொடர்பான ஆவணங்கள்:**

அ) **சரக்காணை**

❖ இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு, சரக்கை வாங்குவதற்கான சரக்காணையை, தானோ அல்லது தன் முகவர் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார்.

❖ சரக்காணை என்பது, சரக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரமாகும்.

**சரக்கு ஆணை மூன்று வகைப்படும்:**

i) வெளிப்படை சரக்காணை
ii) வரையறுக்கப்பட்ட சரக்காணை
iii) உறுதிசெய்யும் சரக்காணை

ஆ) **தோற்றுவாய் சான்றிதழ்:**

❖ இறக்குமதி ஏற்றுமதி வணிகம் நடைமுறையில், தோற்றுவாய் சான்று மிக முக்கிய ஆவணமாகவும்.

❖ இச்சான்று ஏற்றுமதி செய்யப்படும் பொருள், குறிப்பிட்ட நாட்டில்தான் உற்பத்தி செய்யப்பட்டது என்ற உறுதிமொழியை விளம்புகிறது.

இ) **ஏற்றுமதி ஆய்வு சான்று:**

❖ பொருட்கள் கட்டுமம் செய்யப்பட்ட பிறகு, ஏற்றுமதியாளர் ஏற்றுமதி ஆய்வு முகைமுக்கு விண்ணப்பித்து சான்று பெற வேண்டும்.

❖ இச்சான்று பொருட்களை காப்பீடு செய்வதற்கு பயன்படும்.

II. **சரக்கு அனுப்புகை தொடர்பான ஆவணங்கள்:**

- கப்பல் தலைவர் ரசீது
- கப்பல் ரசீது
- வணிகக் தூதுவர் இடாப்பு
- கப்பல் ஆணை



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- பொருட்களை காப்பீடு செய்தல்

III . **பணம் செலுத்துவது தொடர்பான ஆவணங்கள் :**

1. **நாணய உறுதி கடிதம்:**
   - ❖ இத்தருணத்தில் இறக்குமதியாளரின் பணம் செலுத்தும் திறனை ஏற்றுமதியாளர் அறியவேண்டும்.
   - ❖ எனவே அவர் இறக்குமதியாளரை நாணயம் உறுதி கடிதம் ஏற்பாடு செய்து தருமாறு கோருகிறார்.
   - ❖ நாணய உறுதி கடிதம் நன்கு அறிந்த இறக்குமதியாளருக்கு மட்டுமே வழங்கப்படும்.
2. **வணிக இடாப்பு:**
   - ❖ இறக்குமதியாளருடன் செய்துகொண்ட நிபந்தனைகள் அடிப்படையில், ஏற்றுமதியாளர், ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கு தொடர்பான வணிக இடாப்பை மூன்று நகல்களில் தயாரிக்கிறார்.

---

### 4. ஏற்றுமதி ஆணை நிலையத்தின் பணிகளை விளக்கி எழுதுக.

1. உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கான சந்தையை கண்டறிதல்.
2. இறக்குமதியாளர் அல்லது அவரது முகவரை கண்டறிந்து, ஏற்றுமதி செய்வதற்கான பதிலை பெறுதல்.
3. சரக்கின் வடிவத்தை சந்தை தேவை, தரம், சரக்கை அளிப்பவரின் திறனுக்கு ஏற்றவாறு நிறுவுதல்.
4. சரக்கை அனுப்ப போக்குவரத்தை தெரிவு செய்வதற்கு முன், அதன் விலை சேவையின் தரம், பாதுகாப்பை கருத்தில் கொள்ளுதல்.
5. சரக்கை குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்ப தயார் செய்தல்.
6. சரக்கை வாங்குபவரின் கடன் செலுத்தும் திறனை அறிதல்.
7. நடவடிக்கைகளை பேசி முடித்தல்.
8. சரக்கை காப்பீடு செய்தல்.
9. வணிக நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் சரக்கு மற்றும் சேவைக்கான தொகையை செலுத்துதல்.
10. பன்னாட்டு வணிகம் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல்.
11. கோருரிமைகளை தீர்வு செய்தல்.

---

**கூடுதல் வினா**

### 1. இறக்குமதி வணிகத்தில் இடைநிலையார்களாக இருப்பவர்கள் யார்? அவர்களைப் பற்றி விவரிக்கவும். ( ஜூன் 2019 )

**இறக்குமதி வணிக இடைநிலையர்கள்**

1. சரக்காணையகங்கள் இறக்குமதி முகவர்
2. அகற்றீட்டு முகவர்

1. **சரக்காணையகங்கள் இறக்குமதி முகவர்**
   - ❖ இவ்வகை இடைநிலையர்கள் குறிப்பிட்ட வணிகத்தை பற்றிய பட்டறிவும், சிறப்பு தேர்ச்சியும் பெற்றவர்கள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- இவர்கள் அயல்நாட்டு ஏற்றுமதியாளருக்கும், உள்நாட்டு இறக்குமதியாளருக்கும் இடையே செயல்பட்டு, சரக்காணை நிறைவு பெறுவதற்கு, காரணமாக இருக்கின்றனர்.

2. அகற்றீட்டு முகவர்
- இவர் துறைமுகத்திலிருந்து சரக்கை வெளியே கொணர்வதிலும், இறக்குமதியாளருக்கு அனுப்பி வைபபதிலும் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்.
- இவர் இறக்குமதியாளர் சார்பாக அனைத்துச் சுங்க நடைமுறைகளையும் பின்பற்றி, சரக்கைத் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு வருகிறார்.

# அத்தியாயம் 27. பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்

## குறு விடை வினாகள்

**1. உலக வர்த்தக அமைப்பு என்றால் என்ன?**
- உலக வர்த்தக அமைப்பு 1995 ஜனவரி 1 அன்று நிறுவப்பட்டது.
- GATT சில மாற்றங்களுடன் உலக வர்த்தக அமைப்பு ஆக மாற்றப்பட்டது.
- 2016 ஜூலை 29 வரை 164 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளன.
- உலக வர்த்தக அமைப்பை உருவாக்கிய மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

**2. உலக வங்கி என்பதன் பொருள் யாது?** ( செப் 2020 )
- மறு கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி தான், உலக வங்கி என்று அழைக்கப்படுகிறது.
- இது புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்திடவும் 1994 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் வாஷிங்டன் நகரத்தில் அமைந்துள்ளது.
- உலக நாடுகள் அனைத்திலும் இதன் அலுவலகம் அமைந்துள்ளது.

**3. சிறப்பு எடுப்பு உரிமைகள் என்றால் என்ன?**
- 1969 - ஆம் ஆண்டில், பன்னாட்டு நாணய நிதியம் சிறப்பு எடுப்பு உரிமையை, துணை பன்னாட்டு நாணய ஒதுக்கீட்டுச் சொத்தாக உருவாக்கப்பட்டது.
- இது காகித தங்கம் என விவரிக்கப்படுகிறது.

**4. தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு குறிப்பு வரைக.**
- தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு தெற்கு ஆசியாவில் உள்ள நாடுகளுக்கு இடையேயான அமைப்பு ஆகும்.
- மேலும் இது அந்த நாடுகளின் புவியியல் சார்ந்த அரசியலுக்கான சங்கம் ஆகும்.
- இதில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், ஸ்ரீலங்கா, பாகிஸ்தான் மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகள் உறுப்பினராக உள்ளன.
- இது டிசம்பர் 8, 1985 - இல் நிறுவப்பட்டது.
- இதன் அலுவலகம் வங்காள தேசத்தில் உள்ள டாக்காவில் உள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

5. **காட் ( GATT ) என்றால் என்ன?**

- 1947- க்கு முன்னர் பன்னாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு நாடுகளிடையே, பல குழப்பங்கள் காணப்பட்டன.
- அதை சரி செய்து, பன்னாட்டு வணிகத்தை ஒழுங்குபடுத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் உலக அளவில் ஒரு தனித்துவம் வாய்ந்த அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.
- அதன் விளைவாகத்தான், 1947 அக்டோபர் 30 அன்று 23 நாடுகள் ஒன்று சேர்ந்து, சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் **காட்** ( Genearl Agreement on Tariff and Trade GATT ) ஜெனிவாவில் கையெழுத்தானது.

## சிறு வினா விடைகள்

1. **உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டதின் முதன்மை நோக்கம் யாது?**
   1) உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
   2) உறுப்பு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு உலகின் பல்வேறு வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்.
   3) பன்னாட்டு வணிகத்தில் ஒரு ஒருங்கிணைந்த, மேலும் நிறைவேற்றத்தக்க மற்றும் நீடித்த வர்த்தக முறையை ஊக்குவித்தல்.
   4) பன்னாட்டு அளவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தல்.
   5) முழு வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த நிலையான வருமானம் ஆகியவற்றை உறுதி செய்தல்.
   6) சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்.

2. **உலக வர்த்தக அமைப்பின் கூட்டமைப்புகளை வரிசைப்படுத்துக.**
   1 பன்னாட்டு வளர்ச்சி சங்கம்
   2 சர்வதேச நிதி நிறுவனம்
   3 பன்னாட்டு முதலீட்டு உத்திரவாத நிறுவனம்
   4 தகராறு தீர்வுகான பன்னாட்டு மையம்
   5 பன்னாட்டு நாணய நிதியம்.

3. **உலக வர்த்தக அமைப்பின் மீதான விமர்சனங்கள் யாவை?**
   1. தங்கு தடையற்ற வணிகம், வளரும் நாடுகளை விட, வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிக நன்மைகளை தருவதாக குற்றம் சாட்டப்படுகிறது.
   2. மிகவும் நெருக்கமான நாடுகளுக்கு பாரபட்சமாக செயல்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.
   3. வேளாண்மை மீதான கட்டணத்தை குறைப்பதில் தோல்வி அடைந்துள்ளது.
   4. வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள விவசாயிகளின் நலனை புறக்கணிக்கிறது.
   5. சுற்றுச்சூழல் பாதுகாப்பை புறக்கணிக்கிறது.
   6. சமூகப் பண்பாட்டு காரணிகளை புறக்கணிக்கிறது.
   7. வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள மக்கள், உயிர் காக்கும் மருந்து பொருட்களை வாங்க இயலாமல் போகிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. **சிறப்பு எடுப்பு உரிமை எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**
   - ❖ லண்டன் பங்கு மாற்றாக விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டாலரில் ஒவ்வொரு கூடை நாணய மதிப்பின் குறிப்பிட்ட அளவு தொகையை கணக்கிடப்படுகிறது.
   - ❖ பன்னாட்டு நாணய நிதியம் உறுப்பினர் நாடுகளுக்கு, தங்களின் பங்களவு அடிப்படையில், சிறப்பு எடுப்பு உரிமையை ஒதுக்கீடு செய்கிறது.

# அத்தியாயம் 28. செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை

## குறுவிடை வினாக்கள்

1. **செலுத்தல் சமநிலை என்றால் என்ன?**
   - ❖ குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில், ஒரு நாட்டின் குடியிருப்போருக்கும் மற்ற நாடுகளில் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளில், முறையான பதிவுகளில், ஒரு அறிக்கையே செலுத்தல் சமநிலை ஆகும்.

2. **வாணிப சமநிலை என்றால் என்ன?**
   - ❖ வாணிப சமநிலை என்பது, ஒரு வருடத்தில் ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிப்பதாகும்.

3. **செலுத்தல் சமநிலை - வரையறு**
   - ❖ பன்னாட்டு நாணய நிதியத்தின் கூற்றுப்படி, " அறிக்கை அளிக்கும் நாடுகளின் குடியிருப்போர்களுக்கு இடையிலான, குறிப்பிட்ட ஒரு காலத்திலான அனைத்து பொருளாதார நடவடிக்கைகளில், முறைப்படியான ஒரு அறிக்கையே குறிப்பிட்ட ஒரு காலத்திற்கான செலுத்தல் நிலை ஆகும்".

4. **தனியார் மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**
   1. அயல்நாட்டு முதலீடுகள்
   2. நீண்ட கால கடன்கள்
   3. அயல் நாட்டு நாணய வைப்பு

5. **வங்கி மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**
   - ❖ அன்னியச் செலாவணியைக் கையாள அதிகாரம் கொண்ட, வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின், வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது.

6. **அலுவல் சார்ந்த மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**
   - ❖ அலுவல் சார்ந்த மூலதனத்தில், அயல்நாட்டு நாணயம், அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள் போன்றவை அடங்குகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறு விடை வினாக்கள்

1. **செலுத்தல் சமநிலை அறிக்கை ஏன் தயாரிக்க வேண்டும்?**
   - ❖ பன்னாட்டு வணிகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு நிறுவனத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் போன்ற பணப் பரிமாற்றங்களின் நிகர விளைவை ஆய்வு செய்யும் ஒரு கருவியாகும்.
   - ❖ செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டு அரசின் பணம் சார்ந்த, பொது நிதி சம்பந்தமான மற்றும் வாணிபக் கொள்கைகளை வடிவமைக்க உதவுகிறது.
   - ❖ அரசு தன் கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக, முக்கிய வியாபார நிறுவனங்களின் செலுத்தல் நிலையை உன்னிப்பாக கவனித்து வருகின்றன.
   - ❖ ஒரு நாடு தன்னுடைய வளர்ச்சிக்கான நிதியை பெற, போதுமான பொருளாதார விளைவுகளைப் பெற்றுள்ளதா என்பதை எடுத்துக் காட்டுகிறது.
   - ❖ இது ஒவ்வொரு காலாண்டிற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ இதற்கான அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

2. **செலுத்தல் சமநிலை அறிக்கை எதை வெளிக்காட்டுகிறது?**
   - ❖ ஒரு நாட்டின் ஏற்றுமதி அதன் இறக்குமதியை விட அதிகமாக இருந்தால், மிகையாக இருக்கும் இந்த நிலை, அரசாங்கம் மற்றும் குடியிருப்புகள் பாதுகாப்பாக இருப்பதைக் குறிக்கிறது. அவை உள்நாட்டு உற்பத்திக்கு தேவையான மூலதனத்தை வழங்கும் நிலையில் இருக்கும். இந்த சாதகமான நிலையில் மற்ற நாடுகளுக்கு கடன் கொடுக்கவும், அந் நாட்டுப் பொருள்களை வாங்கவும் முடியும்.
   - ❖ ஒரு நாட்டின் இறக்குமதியானது, ஏற்றுமதியை விட அதிகமாக இருந்தால், பற்றாக்குறை நிலையை சுட்டிக் காட்டுகிறது. இந்த சூழ்நிலையானது, இறக்குமதி செய்வதற்குத் தேவையான தொகையை, பிற நாடுகளிடம் கடனாகப் பெற வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்கிறது. இது தற்காலிகமாக குறுகிய காலப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குகிறது.

3. **நடப்புக் கணக்கில் வரவு பக்கத்தில் தோன்றும் இடங்கள் யாவை ?**
   1) பொருட்களின் ஏற்றுமதிகள் (கண்ணுக்குப் புலனாவது)
   2) கண்ணுக்கு புலனாகாத ஏற்றுமதிகள்.
   3) அயல்நாட்டில் செய்யப்பட்ட வங்கியியல் சேவைகள்.
   4) அயல்நாட்டு செய்யப்பட்ட காப்பீட்டு சேவைகள்
   5) வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள்
   6) அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளால், உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள்.

4. **மூலதன கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?**
   1) தனியார் மூலதனம்
   2) பங்கு மூலதனம்
   3) அலுவல் சார்ந்த மூலதனம்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெரு விடை வினாக்கள்

2. **மூலதன கணக்கில் கட்டமைப்பை விளக்கு.**

மூலதனக் கணக்கில் மூன்று இனங்கள் உள்ளன.

அ) தனியார் மூலதனம்

ஆ) வங்கி மூலதனம்

இ) அலுவல் சார்ந்த மூலதனம்

அ) **தனியார் மூலதனம்** :

- தனியார் மூலதனம் அயல்நாட்டு முதலீடுகள், நீண்ட கால கடன்கள் மற்றும் அயல் நாட்டு நாணய வைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது

ஆ) **வங்கி மூலதனம்**

- அந்நியச் செலாவணியை கையாள அதிகாரம் கொண்ட, வணிகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது .

இ) **அலுவல் சார்ந்த மூலதனம்** :

- அலுவல் சார்ந்த மூலதனத்தில் , அயல்நாட்டு நாணயம், அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள் போன்றவை அடங்குகின்றன.

3. **செலுத்தல் சமநிலைக்கும் வாணிப சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.** ( மார்ச் 2019 )

| வேறுபாட்டின் அடிப்படையில் | செலுத்தல் சமநிலை | வாணிப சமநிலை |
|---|---|---|
| பொருள் | குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் குடியிருப்போர் களுக்கும், மற்ற நாடுகளின் குடியிருப்போர் களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின், முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிகுறியே ஆகும் | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும் |
| நடவடிக்கைகளின் தன்மை | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக் கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும் |
| மூலதன நடவடிக்கைகளில் பதிவு | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை |
| நடவடிக்கை உள்ளமைப்பு | இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும் | செலுத்தல் சமநிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதி ஆகும் |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| நிகர விளைவு | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும் | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும் |
| பொருளாதார நிலையை காட்டுதல் | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை |

4. **வாணிபச் செலுத்தல் சமநிலையின் சிறப்புக்கூறுகளை விளக்குக. (அல்லது) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் யாவை? ( மார்ச் 2020 )**

**செலுத்தல் சமநிலையின் முக்கிய அம்சங்கள் பிவருமாறு :**

1. இது ஒரு நாடு மற்றும் உலகின் பிற நாடுகளுக்கு இடையேயான அனைத்து பொருளாதார பரிமாற்றங்களுக்கான முறையான பதிவு ஆகும்.
2. இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 12 மாத காலத்திற்கோ தயாரிக்கப்படுகிறது.
3. இது கண்ணுக்குப் புலனாகக்கூடிய மற்றும் கண்ணுக்கு புலனாகாத பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்களை உள்ளடக்கியது.
4. இது நடப்பு கணக்கு மற்றும் மூலதன கணக்கில் பதிவு செய்யப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
5. பொருளாதார நடவடிக்கைகள், இரட்டை பதிவு முறை கோட்பாட்டின்படி பதிவு செய்யப்படுகின்றன. அதன்படி பெறுதல்கள் வரவு பக்கத்திலும, செலுத்துதல்கள் பற்று பக்கத்திலும் பதிவு செய்யப்படுகின்றன.
6. இது அயல்நாட்டு வாணிகத்தில் ஒரு நாட்டின் நிலையை எடுத்துக் கூறுகிறது .

# அலகு 9. இந்திய ஒப்பந்தச் சட்டம்

## அத்தியாயம் 29. ஒப்பந்தத்தின் கூறுகள்

## குறுவிடை வினாக்கள்

1. **சட்டம் என்றால் என்ன?**
   - வாழ்க்கையில் சரியான நடத்தைக்கும், சமுதாயத்தின் முறையான ஒழுங்கு முறைக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு விதியே சட்டமாகும்.

2. **சட்டத்தை ஒருவர் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?**
   - சமுதாயத்தில் அமைதி, ஒற்றுமை, நீதி, சமூக பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு ஆகியவற்றை சட்டத்தின் உதவியால் ஏற்படுத்த முடியும்.
   - ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம், வரி சட்டம், தொழிலாளர் சட்டம் மற்றும் வணிகச் சட்டங்கள் பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.
   - மேற்கண்ட சட்டங்களைப் பற்றி ஒருவர் அறிந்து இருப்பாருனால், பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காணமுடியும்.ஆதலால், சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியம் ஆகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட முடியுமா?**
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.
   - ❖ சட்டப்படி உரிமை வயது அடைந்தவர் மட்டுமே ஒப்பந்தத்தில் ஈடுபட முடியும்.
   - ❖ எனவே, இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது.

4. **ஒப்பந்தத்தில் யார் ஈடுபடுவார்கள்?** ( ஜூன் 2019 )
   1) சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்
   2) மனச்சமநிலை உடையவர்
   3) சட்டத்தினால் தகுதியற்றவர் என அறிவிக்கப் படாத நபர்கள்.

5. **ஒப்பந்தத்தை வரையறுக்க.** ( மார்ச் 2019 )
   - ❖ இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 ஒப்பந்த பிரிவு 2 (h) ன் படி, ”சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்”.

## சிறு விடை வினாக்கள்

1. **முனைவு வரையறு.**
   - ❖ இந்திய ஒப்பந்த சட்டம் 1872, பிரிவு 2(a) இன் படி, ”ஒருவர் ஏதேனும் ஒன்று செய்வதற்காகவோ அல்லது செய்யாமல் இருப்பதற்காகவோ, தன்னுடைய விருப்பத்தை மற்றொருவருக்கு உணர்த்தி, அதன்மூலம் அச்செயலை செய்வதற்கோ அல்லது செய்யாமல் இருப்பதற்கோ அவருடைய இசைவைப் பெறமுயன்றால், முதலாமவர் முன் மொழிந்ததாகக் கூறலாம்.

2. **உடன்படிக்கை என்றால் என்ன?** ( ஜூன் 2019 ), ( செப் 2020 )
   - ❖ இந்திய ஒப்பந்த சட்டம் 1872, பிரிவு 2(e) இன் படி , “ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்” உடன்படிக்கை ஆகும்.

   சுருக்கமாக,

   ஒப்பந்தம் = முனைவு + ஏற்பு

3. **செல்லாத ஒப்பந்தத்தை வரையறுக்க.**
   - ❖ சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தம், செல்லாது ஒப்பந்தம் ஆகும்.
   - ❖ செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் இதில் இல்லை.

   <u>எடுத்துக்காட்டு</u> :

   கடத்தல் பொருட்கள் வாங்க அல்லது விற்க மேற்கொள்ளும் ஒரு ஒப்பந்தம் செல்லாத ஒப்பந்தம் ஆகும்.

4. **வாக்குறுதி அளிப்பவர், வாக்குறுதி பெறுபவர் என்பவர்கள் யார்?**
   - ❖ ஒரு குறிப்பிட்ட காலத்தில், வாக்குறுதியை நிறைவேற்றுவதாக உறுதி அளிப்பவர், வாக்குறுதி அளிப்பவர் ஆவார்.
   - ❖ மறுபயனை அடையக் கூடியவர், வாக்குறுதி பெறுபவர் ஆவார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெரு விடை வினாக்கள்

1. **சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?**

( மார்ச் 2020 )

1. **முனைவும் ஏற்பும்**
   - ❖ ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை.
   - ❖ அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.
2. **சட்ட உறவு முறை**
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவுமுறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.
   - ❖ சமூக தன்மையுடைய உடன்படிக்கைகளில் , சட்ட உறவுமுறை இல்லை என்றால் ஒப்பந்தங்களாக முடியாது.
3. **சட்டபூர்வமான மறுபயன்** ( பிரிவு 2d )
   - ❖ மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப்பெறுதல் ஆகும்.
   - ❖ மறு பயன் இல்லாத உடன்படிக்கை, செல்லாத உடன்படிக்கையாகும்
4. **சட்டபூர்வமான நோக்கம்** ( பிரிவு 23 )
   - ❖ உடன்பாட்டின் நோக்கம், சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
   - ❖ இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக்கூடாது.
5. **தன்னிச்சையான இசைவு** ( பிரிவு 13 மற்றும் 14 )
   - ❖ உடன்படிக்கை, நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் இசைவு தர வேண்டும்.
   - ❖ அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில், ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.
6. **ஒப்பந்த தகுதி** ( பிரிவு 11 )
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

   **ஒப்பந்தத்தில் ஈடுபடுவார்கள்**

   1. சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்
   2. மனச்சமநிலை உடையவர்
   3. சட்டத்தினால் தகுதியற்றவர் என அறிவிக்கப் படாத நபர்கள்.
7. **செல்லாது என அறிவிக்கப் படவில்லை**
   - ❖ சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
   - ❖ சட்டத்தால் சில உடன்படிக்கைகள், சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

2. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
( ஜூன் 2019, மார்ச் 2020 )

| வ. எண் | அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|---|
| 1 | வரைவிலக்கணம் | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும் | உடன்பாடு என்பது, மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதி மொழியும், உறுதிமொழிகளில் ஒவ்வொரு தொகுதியும் |
| 2 | செயலாக்கத் தன்மை | அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும் | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது |
| 3 | பரஸ்பர உறவு | ஒப்பந்தம் என்பது, உடன்படிக்கையை உள்ளடக்கியது | உடன்படிக்கையில், எல்லா ஒப்பந்தம் உள்ளடக்கியது அல்ல |
| 4 | செல்லக்கூடியது | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும் | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும் |
| 5 | சட்டபூர்வமான கடமை | அனைத்து ஒப்பந்தங்களிலும் சட்டபூர்வமான கடமை உள்ளன | சட்டபூர்வமான கடமையானது, அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை |

3. சட்டபடி செல்லக் கூடிய தன்மையின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை? ( செப் 2020 )

1. <u>செல்தகு ஒப்பந்தம்</u>
   - ❖ சட்டத்தால் நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு உடன்படிக்கையே, சட்டப்படி செல்தகு ஒப்பந்தம் ஆகும்.
2. <u>செல்லாத ஒப்பந்தம்</u>
   - ❖ சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாது ஒப்பந்தம், செல்லாது ஒப்பந்தம் ஆகும்.
   - ❖ செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் இதில் இல்லை.

   <u>எடுத்துக்காட்டு</u> : கடத்தல் பொருட்கள் வாங்க அல்லது விற்க மேற்கொள்ளும் ஒப்பந்தம் செல்லாது ஒப்பந்தம் ஆகும்.
3. <u>தவிர்தகு ஒப்பந்தம்</u>
   - ❖ உடன்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், இரு தரப்பினரின் விருப்பமின்றி நடைமுறைப்படுத்தப்படும் ஒரு உடன்படிக்கையையே, தவிர்தகு ஒப்பந்தம் ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. <u>சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம்</u>
   - ❖ இது சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒப்பந்தமாகும்.
   - ❖ சட்டத்தை மீறுகிற தன்மையுடைய அல்லது ஒழுக்கக்கேடான அல்லது அடிப்படை கொள்கை விதியை மீறுகின்ற ஒப்பந்தம், சட்டத்திற்கு முரணான ஒப்பந்தம் ஆகும்.
5. <u>நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தங்கள்</u>
   - ❖ இது சட்டத்தால் செயல்படுத்த முடியாத குறைபாடுடைய ஒப்பந்தங்கள் ஆகும்.
   - ❖ எடுத்துக்காட்டாக எழுத்துவடிவம் இன்மை, முறையான முத்திரைகள் இன்மை போன்றவை நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தங்கள்.

---

## 5. உருவாக்கும் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை?

1) <u>வெளிப்படை ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்கள், அதன் நிபந்தனைகளையும் கூறுகளையும் ஏற்றுக்கொள்வதாக, வெளிப்படையாக உடன்பட்டால், அது வெளிப்படையான ஒப்பந்தம் எனப்படுகிறது.
   - ❖ ஒப்பந்தத்தை எழுத்து வடிவிலோ அல்லது வாய்மொழியாகவோ வெளிப்படுத்தலாம்.
2) <u>உட்கிடை ஒப்பந்தம்</u>
   - ❖ எழுத்து மூலமாக இல்லாமல், ஈடுபடுபவர்களின் நடத்தை மூலமே ஏற்படும் ஒப்பந்தம் உட்கிடை ஒப்பந்தம் ஆகும்.
   - ❖ எழுத்து மூலம் முனைவோ அல்லது ஏற்போ இன்றி செய்யப்படும் ஒப்பந்தம் உட்கிடையான ஒப்பந்தம் ஆகும்.
3) <u>போல்வு ஒப்பந்தம்</u>
   - ❖ இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தம் ஆகும்.
   - ❖ பொதுவாக இது ஒப்பந்தமே இல்லை.
   - ❖ ஒரு நபர், ஒருவரின் இழப்பால் மற்றொருவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் ஆனது.
4) <u>மறைமுக ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் நடத்தையையும் மற்றும் ஊகத்தின் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தமும் மறைமுக ஒப்பந்தம் ஆகும்.

     <u>எடுத்துக்காட்டு.</u> தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் பணத்தை பெறுதல்.

---

## 6. நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை? (மார்ச் 2019)

1. <u>நிறைவேறிய ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடும் இரு நபர்கள், ஒப்பந்தபடி அவரவர்களின் கடமையை முடிக்கும் போது, அவ்வொப்பந்தம் நிறைவேறிய ஒப்பந்தம் ஆகும்.
2. <u>நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு நபர்களுக்கிடையே, கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அவ்வொப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தம் ஆகும்.
3. <u>ஒரு தலை ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களில் ஒருவர் மட்டுமே தனது வாக்குறுதியை அல்லது கடமையை நிறைவேற்றிய பிறகு, மற்றொரு நபர் தனது கடமையை நிறைவேற்றுவார்.
4. <u>இருதலை ஒப்பந்தம்</u>
   - ❖ ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது, இரு தரப்பினரும், தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டி இருப்பின், அத்தகைய ஒப்பந்தம் இருதலை ஒப்பந்தம் எனப்படுகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அத்தியாயம் - 30 ஒப்பந்த நிறைவேற்றம்

## குறு விடை வினாக்கள்

1. **ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற வழிகள் யாவை ?**
   - ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட இரண்டு வழிகள் உள்ளன.
   1. உண்மையான நிறைவேற்றம்
   2. நிறைவேற்றுவதற்கான முனைவு.

---

2. **சட்டரீதியான பிரதிநிதி என்பவர் யார் ?**
   - வாக்குறுதி அளிப்பவர், வாக்குறுதி பெறுபவரின் சட்டபூர்வ வாரிசே சட்டரீதியான பிரதிநிதி ஆவார்.

---

3. **முகவர் என்பவர் யார் ?**
   - வாக்குறுதி அளித்தவர், தன் சார்பாக அவ்வாக்குறுதியை நிறைவேற்ற நியமிக்கப்படும் நபரே முகவர் ஆவார்.

---

2. **இருதரப்பு வாக்குறுதிகள் என்றால் என்ன ?**
   - ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிக்கு மறு பயனாக அளிக்கும்போது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகின்றன.

---

3. **ஒப்பந்தத்தை யார் நிறைவேற்ற வேண்டும்?**
   - ஒப்பந்தத்தை பின்வருபவர்களில் எவரேனும் ஒருவர் நிறைவேற்றலாம்
     1. வாக்குறுதி அளித்தவர்
     2. முகவர்
     3. சட்டரீதியான பிரதிநிதி

---

## சிறு விடை வினாக்கள்

1. **ஒப்பந்த நிறைவேற்றம் என்றால் என்ன?**
   - ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றி விட்டால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.
   - ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட இரண்டு வழிகள் உள்ளன. அவை,
     1) உண்மையான நிறைவேற்றம்
     2) நிறைவேற்றுவதற்கான முனைவு

---

2. **ஒப்பந்த நிறைவேற்றத்தை யார் கோரலாம்?** ( மார்ச் 2019, மார்ச் 2020 )
   1. வாக்குறுதியை பெறுபவர்
   2. சட்டரீதியான பிரதிநிதி
   3. மூன்றாவது நபர்

---



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **இருதரப்பு வாக்குறுதி பற்றி கூறுக.**
 - ஒரு நபர் தமது வாக்குறுதியைக் மற்றொருவர் வாக்குறுதிக்கு மறு பயனாக அளிக்கும் பொழுது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதி என அழைக்கப்படுகின்றன .

**இரு தரப்பு வாக்குறுதிகளின் வகைகள்**

1) இரு தரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி
2) இரு தரப்பு மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள்
3) இரு தரப்பு மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள்.

---

4. **கூட்டு வாக்குறுதி அளித்தவர் என்பவர் யார் ?**

அ) **கூட்டு பொறுப்புகளின் ஒப்படைப்பு** ( பிரிவு 42 )
 - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக வாக்குறுதிகளை அளித்து இருந்தால், அனைவருமே இணைந்து நிறைவேற்ற வேண்டும்.
 - ஏதேனும் ஒரு கூட்டு வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால், அவரது வாரிசுதாரரும், பிற உயிருள்ள கூட்டு வாக்குறுதி அளித்தவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

ஆ) **கூட்டு உரிமைகளின் ஒப்படைப்பு** ( பிரிவு 45 )
 - பல நபர்கள் கூட்டாக ஒரு நபரிடம் இருந்து வாக்குறுதி ஒன்றை பெறும்பொழுது, அனைவரும் இணைந்து, அவ்வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று கோறும் உரிமை உண்டு.
 - ஏதேனும் ஒரு கூட்டு வாக்குறுதி பெற்றவர் இறந்துவிட்டால், அவரது வாரிசு தாரரும், பிற உயிருள்ள கூட்டு வாக்குறுதி பெற்றவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறலாம்.

---

## பெருவிடை வினாக்கள்

1. **நிறைவேற்றத்தின் நேரமும், காலமும் பற்றிய விதிகளை விளக்கு.**
 - ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தில் நேரம், இடம் மற்றும் விகிதம் ஆகியவை ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் முடிவு செய்து கொள்ள வேண்டும்.
 - இது தொடர்பாக ஒப்பந்தம் சட்டத்தில் 46 முதல் 50 வரை பல்வேறு சட்ட விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. **நேரம் நிர்ணயிக்கப்படாமை** ( பிரிவு 46 )
 - நிறைவேற்றுவதற்குரிய நேரம் நிர்ணயிக்கப்படவில்லை எனில், ஒரு வாக்குறுதி அளித்தவர், ஒரு நியாயமான காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.
 - நியாயமான காலம் என்பது, ஒப்பந்தத்தையும் அல்லது ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் எண்ணம் ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

2. **நிறைவேற்றுவதற்குரிய காலமும் இடமும் குறிப்பிடப்பட்டிருந்தால்** ( பிரிவு 47 )
 - சில சமயங்களில், நிறைவேற்றுவதற்குரிய காலமும், இடமும் குறிப்பிடப்பட்டிருந்தும் வாக்குறுதி பெற்றவர், அதை நிறைவேற்றுமாறு கேட்காமல் இருக்கிறார்.
 - இந்த சமயங்களில் வாக்குறுதி அளிப்பவர், தனது வாக்குறுதியை குறிப்பிட்ட நாளில், வணிக நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

3. **ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றம்** ( பிரிவு 48 )
 - ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கான நாள் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், வாக்குறுதி பெறுவர் கேட்கும் பொழுதுதான், வாக்குறுதி அளித்தவர் தனது வாக்குறுதியை செய்துமுடிக்க வேண்டும்.

4. **இடம் குறிப்பிடாமல், விண்ணப்பிக்காமல் இருக்கும்போது** ( பிரிவு 49 )
 - சில சமயங்களில், ஒப்பந்தத்தில் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய இடம் குறிப்பிடப்பட்டிருக்காது.

- ❖ இவ்வித சமயங்களில் வாக்குறுதி அளித்தவர் வாக்குறுதியை பெற்றவரிடம், நிறைவேற்றம் எங்கு செய்ய வேண்டும் என்று கேட்டு, அவர் நியமித்த இடத்தில் அதை நிறைவேற்ற வேண்டும்.

5. <u>நிறைவேற்றும் விதம் மற்றும் காலம்</u> ( பிரிவு 50 )

- ❖ வாக்குறுதி பெற்றவர், வாக்குறுதியை நிறைவேற்றும் விதமும் மற்றும் காலமும் நிர்ணயித்து, பிறகு அதன்படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

---

## 2. நிறைவேற்றத்தின் காலம் என்பது ஒரு முக்கிய காரணி என்ற விதியைக் கூறுக.

1) <u>நிறைவேற்றுவதற்குரிய காலமும் இடமும் குறிப்பிடப்பட்டிருந்தால்</u> ( பிரிவு 47 )

- ❖ சில சமயங்களில், நிறைவேற்றுவதற்குரிய காலமும், இடமும் குறிப்பிடப்பட்டிருந்தும் வாக்குறுதி பெற்றவர், அதை நிறைவேற்றுமாறு கேட்காமல் இருக்கிறார்.
- ❖ இந்த சமயங்களில் வாக்குறுதி அளிப்பவர், தனது வாக்குறுதியை குறிப்பிட்ட நாளில், வணிக நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

2) <u>நிறைவேற்றும் விதம் மற்றும் காலம்</u> ( பிரிவு 50 )

- ❖ வாக்குறுதி பெற்றவர், வாக்குறுதியை நிறைவேற்றும் விதமும் மற்றும் காலமும் நிர்ணயித்து, பிறகு அதன்படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

---

## 3. செலுத்துதல்களை ஒதுக்கிவைத்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் கூறு.

- ❖ கடனாளி ஒருவர் மற்றவரிடம் இருந்து பல்வேறு கடன்களை பெற்றிருந்து, கடன் முழுவதையும் தீர்க்கப் போதுமான அளவை விட குறைந்த தொகையை செலுத்தும் பொழுது, அத்தொகையை அவருடைய எந்தக் கடனை தீர்க்க பயன்படுத்த வேண்டும் என ஒரு பிரச்சனை ஏற்படுகிறது.
- ➢ செலுத்தல்களை ஒதுக்கி வைத்தல்தொடர்பான விதிகள் 59 முதல் 61 வரையிலான சட்டப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டு உள்ளன. அவையாவன,

1. <u>தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் பொழுது</u> ( பிரிவு 59 )

- ❖ குறிப்பிட்ட கடனை தீர்க்க, தான் அனுப்பும் தொகையைப் பயன்படுத்துமாறு கடனாளி வேண்டுகோள் விடுக்க முடியும்.
- ❖ அத்தொகையை, கடன் அளித்தவர் ஏற்றுக்கொண்டால், அவர் அவ்வாறே அக்கடனைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டும்.

2. <u>தீர்க்க பட வேண்டிய கடன் சுட்டிக்காட்ட படாத பொழுது</u> ( பிரிவு 60)

- ❖ கடனாளி அளித்த தொகை, எந்த கடனை அடைக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட பொழுது, கடன் அளித்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப, அத்தொகையை பயன்படுத்திக் கொள்ளலாம்

3. <u>கடனாளி சுட்டிக்காட்டவும் கடன் அளித்தவர் ஒதுக்கீடு செய்யவும் தவறும் பொழுது</u> ( பிரிவு 61 )

- ❖ ஒப்பந்த நபர்கள், எக்கடனுக்கு என ஒதுக்கீடு செய்யவில்லை எனில், காலவரிசைப்படி முதன்முதலில் பெறப்பட்ட கடனைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
- ❖ ஒருவேளை, கடன் அனைத்தும் ஒரே நிலையில் இருப்பின், விகிதாச்சார அடிப்படையில் அவை தீர்க்கப்படும்.

---

# அத்தியாயம் 31 - ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை

## குறு விடை வினாக்கள்

1. **இருதரப்பு உடன்படிக்கை மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை?**
   1) வெளிப்படை உடன்படிக்கை
   2) உட்கிடை உடன்படிக்கை

2. **நிறைவேற்ற இயலாத போதலின் வகைகள் யாவை?**
   1) உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை.
   2) ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை.

3. **பணிக்கு ஏற்ற தொகை என்றால் என்ன?**
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர் வாக்குறுதியை நிறைவேற்றிய பின்னர், மற்றொரு நபர் ஒப்பந்தத்தை மீறுவதால், பணிக்கு ஏற்ற தொகை என்ற கூற்று எழுகிறது .
   - ❖ " எவ்வளவு ஈட்டப்பட்டதோ அவ்வளவு" என்ற சொல்லின் பொருள் " பணிக்கேற்ற தொகை" எனப்படுகிறது.

## சிறு விடை வினாக்கள்

1. **இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை?**
   - ❖ இருதரப்பு விடுவிப்பு, பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படலாம். அவை : - பரிமாற்றம், திருத்தம், தள்ளுபடி, ரத்து செய்தல், தளர்த்தல், இணைப்பு.

2. **நிறைவேற்றத்தின் அடிப்படையில் ஒப்பந்த விடுப்பு என்றால் என்ன?**
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.
   - ❖ நிறைவேற்றம் என்பது உடன்பாட்டின்படி இருக்க வேண்டும்.
   - ❖ வாக்குறுதி அளித்தபடி குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

   <u>நிறைவேற்றம் இரண்டு வகைப்படும்</u>

   அ) உண்மையான நிறைவேற்றம் ஆ) நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்.

3. **ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது போதலுக்கான காரணங்கள் யாவை?**
   - ❖ ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனால், அது இயலாது போதலால் விடுவிப்பு எனப்படும்.
   - ❖ நிறைவேற்றம் இயலாத போதல் இரண்டு வகைப்படும்.
     1) உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை.
     2) ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை.

4. **இழப்பீடு தொகை தொடர்பான பல்வேறு விதிகள் யாவை?**
   - ❖ இழப்பீடு என்பது, ஒப்பந்தம் மீறிகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில், தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ஆகவே பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தம் மீறுகைக்கு காரணமான நபர் மீது, இழப்பீடு பெறும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.
- இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு 73 இன் படி ,ஒப்பந்தத்தை மீறும் நபர், அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்பு உள்ளது.

## பெருவிடை வினாக்கள்

1. ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக.

1 **நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு**

- ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.
- நிறைவேற்றம் என்பது, உடன்பாட்டின் படி இருக்க வேண்டும்.
- வாக்குறுதி அளித்தபடி குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிறைவேற்றம் இரண்டு வகைப்படும்

அ) உண்மையான நிறைவேற்றம் ஆ) நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்.

2 **இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு**

- ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உடன்படிக்கை, இருதரப்பு ஒத்துக்கொள்வதன் மூலம் உடன்பாட்டை முடிக்கலாம்.
- உடன்பாட்டின் விளைவாக ஒப்பந்தம் ஏற்படுவது போல, அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒன்றிணைந்து, உடன்பாட்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம்.
- இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு, பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படலாம்.அவை : -

பரிமாற்றம்,திருத்தம், தள்ளுபடி, ரத்து செய்தல், தளர்த்தல், இணைப்பு

3 **இயலாது போதலால் விடுவிப்பு**

- சில நிகழ்ச்சிகளால், ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனால், அது இயலாது போதலால் விடுவிப்பு எனப்படும்.
- நிறைவேற்றம் இயலாத போதல் இரண்டு வகைப்படும்.
  1) உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை.
  2) ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை.

4 **காலம் கடந்து போவதால் விடுவிப்பு**

- வரையறைச் சட்டம் 163 - ன் படி, ஒப்பந்தம் ஒன்று, குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.
- ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருந்தால், அதனால் பாதிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட காலத்திற்குள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரும் உரிமையை இழந்து விடுகிறார்.

5 **சட்டத்தினால் விடுவிப்பு**

- சட்டத்தினால் விடுவிப்பு என்பது, சட்டத்தின் தலையீட்டினால் ஒப்பந்தம் ஒன்று விடுவிக்கப்படுவதை இது குறிக்கும்.
- இது பின்வரும் ஏதேனும் வழிகளில் செய்யப்படலாம்.

1) **இறப்பு**

- தனிப்பட்ட ஆற்றலை நம்பியுள்ள ஒப்பந்தங்களில், வாக்குறுதி அளித்தவர் இறந்தவுடன் அவ்வொப்பந்தம் முடிவுக்கு வந்துவிடும்.

2) **இணைப்பு**

- ஒரு நபரின் குறைந்தளவு உரிமையானது, அவருக்கு வந்து சேரும் உயர்ந்த அளவு உரிமையுடன் இணைப்பதைக் குறிக்கும்.

3) **நொடிப்பு நிலை**

- ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர், நொடிப்பு நிலை அடைந்து விட்டால், அவருடைய அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்படுகிறார்.

4) **முக்கியமான திருத்தம்**

- ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர், அடுத்தவரின் அனுமதியின்றி ஒப்பந்தத்தில் நிபந்தனைகளில் திருத்தம் செய்வாரேயெனில், ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

---

**2. இழப்பீடு என்றால் என்ன? பல்வேறு வகையான இழப்பீடு யாவை?**

❖ இழப்பீடு என்பது, ஒப்பந்தம் மீறிகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில், தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும்.

❖ ஆகவே பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தம் மீறுகைக்கு காரணமான நபர் மீது, இழப்பீடு பெறும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

❖ இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு 73 இன் படி, ஒப்பந்தத்தை மீறும் நபர், அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்பு உள்ளது.

❖ இழப்பீடு நான்கு வகைகளாக உள்ளது. அவை -

1) சாதாரண இழப்பீடுகள்
2) சிறப்பு இழப்பீடுகள்
3) பழிவாங்கும் தன்மையுள்ள அல்லது முன்மாதிரி இழப்பீடுகள்
4) பெயரளவு இழப்பீடுகள்.

---

# அலகு 10. நேர்முக மற்றும் மறைமுக வரிகள்

## அத்தியாயம் 32 – நேர்முக வரிகள்

### குறு விடை வினாக்கள்

**1. வருமானவரி என்றால் என்ன?**

❖ ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி, வருமான வரி எனப்படும்.
❖ இது ஒரு நேர்முக வரி ஆகும்.
❖ இவ்வரியில் வரிச்சுமையினை, மற்றொருவர் மீது மாற்ற இயலாது.

---

**2. முந்தைய ஆண்டு என்றால் என்ன?**

❖ ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம், அடுத்த ஆண்டில் வரி விதிப்பிற்கு உட்படும்.
❖ வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு, முந்தைய ஆண்டு எனப்படுகிறது.
❖ முந்தைய ஆண்டு என்பது, எப்பொழுதும் ஏப்ரல் 1 இல் தொடங்கி மார்ச் 31 இல் முடியக் கூடிய வகையில் இருக்கும்.
❖ மேலும் இது நிதியாண்டு என்றும் அழைக்கப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **தனிநபர் வரையறு**

"நபர்" என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர்.

1. தனிநபர்.
2. இந்து கூட்டுக் குடும்பம்
3. கூட்டுப்பங்கு நிறுமம்
4. கூட்டாண்மை நிறுவனம்.
5. பல நபர்களின் சங்கங்கம் அல்லது தனிநபரின்களின் குழுமம் ( கூட்டுறவு)
6. உள்ளாட்சி நிர்வாகம்.
7. சட்ட ரீதியான செயற்கை நபர்கள்.

4. **மதிப்பீடு செய்யப்படும் நபர் என்பவர் யார்?**

❖ சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்பட்டதாக உள்ளதோ, அந்த நபர் மதிப்பீட்டிற்கு உரியவர் ஆவார்.

5. **கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?**

❖ ஏப்ரல் 1 ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு மார்ச் 31- ஆம் தேதி முடியும் காலகட்டமே மதிப்பீட்டு ஆண்டு எனப்படுகிறது.

❖ இதனையே கணக்கீட்டு ஆண்டு என்றும் கூறுப்படுகின்றது.

## சிறு விடை வினாக்கள்

1. **முழு மொத்த வருமானம் என்றால் என்ன?**

❖ வருமான வரிச் சட்டப்படி, ஐந்து தலைப்புகளில் வருமானங்கள் தனித்தனியாக கணக்கிடப்படும்.

❖ இத் தலைப்புகளில் கீழ் பெறப்படும் வருமானத்தின் கூட்டுத் தொகையில் இருந்து, நட்டங்கள் ஏதேனும் இருப்பின், அவை கழிக்கப்பட்டு கிடைக்கும் தொகை, முழு மொத்த வருமானம் என அழைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. சம்பள வருமானம் | ------- |
| 2. வீட்டு சொத்திலிருந்து வருமானம் | ------- |
| 3. வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலில் வருமானம் | ------- |
| 4. மூலதன வருமானம் | ------- |
| 5. ஏனைய ஆதாரங்களில் இருந்து வருமானம் | ------- |
| முழு மொத்த வருமானம் | ------ |

2. **ஐவகை வருமான தலைப்புகளை வரிசைப்படுத்துக** ( மார்ச் 2019 )

1) சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15 - 17)
2) வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு அத்தியாயம் 25 - 27 )
3) வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலில் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28 - 44)
4) மூலதன ஆதாயங்கள் ( பிரிவு 45 - 55 )
5) ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு 56 - 59 )



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **வேளாண்மை வருமானம் -- குறிப்பு வரைக.**

➢ பிரிவு 2 (1A) இன் படி, விவசாயம் சார்ந்த வருமானத்தில் அடங்குவன பின்வருமாறு:

1) இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலத்தில் இருந்து, பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்.
2) விவசாய விளைபொருட்களை சந்தைக்கோ அல்லது விற்பனைக்கோ தகுந்ததாக மாற்றுவதற்கென பெறப்பட்ட, ஏதேனும் கட்டணம், விவசாயம் விளைபொருட்களை பதனம் செய்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் நிலத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம்.
3) குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரு பண்ணை கட்டிடத்தில் இருந்து, பெறப்பட்ட வருமானம்.
4) நாற்றுப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்று அல்லது செடி மூலம் பெறப்பட்ட வருமானம்.

❖ இந்த வேளாண் வருமானம் முழுவதும் வருமான வரியில் இருந்து, விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

---

4. **மொத்த வருமானம் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?**

❖ முழு வருமானத்திலிருந்து 80C முதல் 80U வரையிலான பிரிவுகளின் கீழ், கழிவுகளை கழித்தபின் கிடைக்கும் தொகையே **மொத்த** வருமானம் ஆகும்.

| | |
|---|---|
| முழு மொத்த வருமானம் | - - - - - |
| <u>கழிக்க</u>: கழிவுகள் (பிரிவு 80C முதல் 80U ) | - - - - - |
| மொத்த வருமானம் | - - - - - |

<u>கழிவுகள் 80C முதல் 80U வரை</u>: ஒரு சில உதாரணங்கள்:

சேமநல காப்பு நிதியில் தொழிலாளரின் பங்களிப்பு, ஆயுள் காப்பீட்டு முனைமம் செலுத்தியது, குழந்தைகளின் கல்வி கட்டணம், தேசிய சேமிப்பு பத்திரத்தில் முதலீடு, வீட்டுக் கடன் திருப்பி செலுத்தியது முதலியன.

---

5. **குறிப்பு வரைக: (அ) நேரடி வரி (ஆ) மறைமுக வரி.**

(அ) <u>நேரடி வரி</u>

❖ நேர்முக வரி என்பது, யார் மீது வரி விதிக்கப்படுகிறதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும்.

❖ அதாவது நேர்முக வரியில் வரி தாக்கமும், வரி நிலைப்பாடும், ஒருவர் மீதே விழுகின்றன.

❖ இவ்வாறு, வரி தாக்கமும், வரி நிலைப்பாடும் ஒருவர் மீதே விழும் வகையைச் சார்ந்த வரிகள், நேர்முக வரிகள் எனப்படும்.

❖ இவை நேரடி வரிகள் எனவும் அழைக்கப்படும்.

(ஆ) <u>மறைமுக வரி</u>

❖ மறைமுக வரிகளில், வரித் தாக்கமும், வரி நிலைப்பாடும் வேறுபட்ட நபர்களின் மீது விழுகின்றன.

❖ இவை யார் மீது விதிக்கப்படுகின்றனவோ, அவர்களால் சுமகப்படுவதில்லை.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- இவை மற்றவர்களுக்கு மாற்றி அளிக்கப்படுகிறது.
- அதாவது சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது, வரி விதிக்கப்பட்டு, அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரி ஆகும். **உதாரணம்** : சரக்கு மற்றும் சேவை வரி (GST)

## பெரு விடை வினாக்கள்

1. **வருமான வரியின் ஐந்து சிறப்புக் கூறுகளை எழுதுக.**

**சிறப்பியல்புகள்**

1) அரசியல் அமைப்பின் படி விதிக்கப்படுகிறது.
2) மத்திய அரசால் விதிக்கப்படுகிறது
3) நேர்முக வரி
4) ஆண்டு வரி
5) நபரின் மீது வரி விதிக்கப்படுகிறது
6) வருமானத்தின் மீது வரி கணக்கிடப்படுகிறது
7) குறிப்பிட்ட வீதத்தில் விதிக்கப்படுகிறது
8) முந்தைய ஆண்டின் வருமானம் மதிப்பீட்டு ஆண்டில் மதிப்பிடப்படுகிறது.
9) மத்திய நேரடி வரிகள் வாரியத்தால் (CBDT) நிர்வகிக்கப்படுகிறது.
10) இந்தியா முழுவதும் பொருந்தும் தன்மை உடையது.

2) **வரி என்பதற்கு வரைவிலக்கணம் தந்து நேரடி மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.**

**வரி என்பதன் பொருள்:**

- எந்த விதமான பயனையும் நேரடியாக திரும்பப் பெறும் எதிர்பார்ப்பற்ற, அரசால் சுமத்தப்படும், ஓர் கட்டாயக் கட்டணம் வரி ஆகும்.
- அதாவது மக்களால் அரசுக்கு அளிக்கப்படும், ஓர் கட்டாயக் கட்டணம் அல்லது பங்களிப்பே வரி ஆகும்.

**வரிகளின் வகைகள்:** இந்தியாவில் வரிகள், பின்வரும் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

1. **நேர்முக வரிகள்:**

- நேர்முக வரி என்பது, யார் மீது வரி விதிக்கப்படுகிறதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும்.
- அதாவது நேர்முக வரியில் வரி தாக்கமும், வரி நிலைப்பாடும் ஒருவர் மீதே விழுகின்றன.
- இவ்வாறு, வரி தாக்கமும், வரி நிலைப்பாடும் ஒருவர் மீதே விழும் வகையைச் சார்ந்த வரிகள் நேர்முக வரிகள் எனப்படும்.
- இவை நேரடி வரிகள் எனவும் அழைக்கப்படும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ அதாவது, தனி நபரின் வருமானம் அல்லது அவரின் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்படும் வரியாகும்.
- ❖ இந்தியாவில், அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**<u>நேர்முக வரிகள்</u>**

- வருமான வரி
- நிறும வரி
- சொத்து வரி
- அன்பளிப்பு வரி ( நன்கொடை வரி )
- பண்ணை வரி
- பயன்கள் வரி

2. **<u>மறைமுக வரிகள்</u>** :

- ❖ மறைமுக வரிகளில், வரித் தாக்கமும், வரி நிலைப்பாடும் வேறுபட்ட நபர்களின் மீது விழுகின்றன.
- ❖ இவை யார் மீது விதிக்கப்படுகின்றனவோ, அவர்களால் சுமகப்படுவதில்லை.
- ❖ இவை மற்றவர்களுக்கு மாற்றி அளிக்கப்படுகிறது.
- ❖ அதாவது சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது, வரி விதிக்கப்பட்டு, அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரி ஆகும். **<u>உதாரணம்</u>** : சரக்கு மற்றும் சேவை வரி (GST)

---

**3) ஊதிய வருமனத்தில் இடம்பெறக் கூடிய பத்து வருமானங்களை வரிசைப்படுத்துக.**

- ❖ வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 2 (24) வருமானம் என்ற சொல்லுக்கு, இலக்கணம் வழங்கியுள்ளது. அதன்படி, வருமானம் என்ற சொல்லில் பின்வருவன அடங்கியுள்ளன.

1) வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட லாபம் மற்றும் ஆதாயம்.
2) பங்காதாயம்
3) தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெரும் நன்கொடைகள்.
4) ஊதியத்திற்கு மாற்றாக பெறும் இதர வருமானங்கள்.
5) ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறு விதமான ஊக்கத்தொகைகள்.
6) கூட்டாளி ஒருவர், கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெறும் வட்டி, ஊதியம், ஊக்கத்தொகை, கழிவு அல்லது மேல் வருமானம்.
7) மூலதன ஆதாயங்கள்.
8) தமது உறுப்பினர்களுடன் கூட்டுறவுச் சங்கமாக வங்கியில் வணிகத்தை மேற்கொண்டு, பெற்ற இலாபங்களும், ஆதாயங்களும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

9) குதிரை பந்தயம், சீட்டு விளையாட்டுகள் மற்றும் அதே வகையான ஏனைய விளையாட்டுகள் உள்ளிட்ட பந்தயங்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், பரிசுச் சீட்டுகள் ஆகியவற்றில் கிடைத்த பரிசுத் தொகைகள்.

10) கருதப்பட்ட வருமானங்கள்.

11) சேமநல நிதி அல்லது ஓய்வுகால நிதி போன்றவைகள் மூலமாக பெறப்பட்ட தொகை.

12) பிரதான காப்புறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடுதல் சிறப்பு தொகை.

13) வியாபாரத்தோடு தொடர்பில்லாமல், ஏதேனும் செயலில் ஈடுபட்டு இருப்பின் அல்லது தொழில்நுட்ப அறிவு காப்புரிமை மற்றும் பதிப்புரிமை இவைகளைப் பகிர்ந்து கொள்ளாமல், ஏதேனும் தொகை எந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பட்டிருந்தாலும்.

14) இயக்குனர் அல்லது நிறுத்தில் கணிசமான அக்கறை கொண்ட ஒரு நபர் அல்லது அவரது உறவினர் அல்லது இயக்குனர் ஒருவரின் உறவினர் ஆகியோரால் நிறுமத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் பயன் அல்லது மேல் வருமானம்.

15) பிரிவு 56 (2) (VI) இன் படி பெறப்பட்ட நன்கொடைகள்.

---

4) பல்வேறு வகையான மதிப்பீடு செய்யப்படும் நபர்களைப் பற்றி விவரி?

<u>மதிப்பீட்டிற்குரியவர் </u>( பிரிவு 2 (7) )

❖ “சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத் தொகை செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்த நபர் மதிப்பீட்டிற்கு உரியவர் ஆவார்”.

❖ மேலும் தன்னுடைய வருமானம் அல்லது நட்டம் அல்லது தனக்கு வர வேண்டிய பாக்கித் தொகை ஆகியவற்றிற்காக வருமான வரி சட்டத்தின் கீழ் வருமான வரி மதிப்பீட்டு நடவடிக்கைக்கு உட்பட்ட ஒவ்வொரு நபரும் மதிப்பிற்குரியவர் என்ற சொல்லில் அடங்குவர்.

- வருமானவரிச் சட்டம் மூன்று வகையான மதிப்பீட்டிற்கு உரியவர்களை கண்டுணர்ந்துள்ளது. அவர்கள் : -

a. <u>சாதாரண மதிப்பீட்டிற்குரியவர்கள்</u> :

❖ இச்சட்டத்தின் கீழ் வட்டி, வரி அல்லது அபராதம் போன்ற ஏதேனும் ஒரு தொகையை செலுத்த வேண்டிய நபர்.

b. <u>பிரதிநிதித்து மதிப்பீட்டிற்குரியவர்</u> :

❖ மற்றவரின் வருமானத்தின் மதிப்பீட்டிற்கு பொறுப்பேற்கும் ஒரு நபர், பிரதிநிதித்துவ மதிப்பீட்டிற்கு உரியவர் எனப்படுகிறார்.

<u>எ. கா</u> : இளவர் ஒருவரின் பாதுகாவலர்.

c. <u>தவறிழைத்த மதிப்பீட்டிற்குரியவர்</u> :

❖ வருமான வரிச் சட்டத்தின் கீழ், தமது சட்ட கடமை ஏதேனும் நிறைவேற்றத் தவறியவர், தவறிழைத்த மதிப்பீட்டிற்குரியவர் ஆவார்.

<u>எ. கா</u> : தமது பணியாளர்களுக்கு மாதாந்திர சம்பளத்தை அளிக்கும் எஜமானர் ஒருவர், அச்சம்பளத்தில் இருந்து உரிய வரியை பிடித்தம் செய்தல் வேண்டும். அவ்வாறு அவர் செய்யவில்லை எனில், அவர் தவறிழைத்த மதிப்பீட்டிற்குரியவர் ஆவார்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# அத்தியாயம் 33 – மறைமுக வரிகள்

## குறு விடை வினாக்கள்

1. **மறைமுக வரி வரைவிலக்கணம் தருக**
   - வரிகசுரியவர், வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலுமானால், அதுவே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.
   - மறைமுக வரி என்பது, சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு, அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது.

2. **இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**
   1) மதிப்புக் கூட்டு வரி
   2) சேவை வரி
   3) உள்நாட்டு வரி
   4) சுங்கவரி

3. **சரக்கு மற்றும் சேவை வரி என்பது என்ன?**
   - சரக்கு மற்றும் சேவைகள் நுகரும்போது விதிக்கப்படும் வரி ஆகும் .
   - இது ஒரு சேருமிடம் சார்ந்து நுகர்வு வரி மற்றும் அளிப்பு சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் காட்டப்பட்ட மதிப்பின் மீது வசூலிக்கப்படுகிறது.

4. **மாநில சரக்கு மற்றும் சேவை வரி பற்றி குறிப்பு வரைக.** ( செப் 2020 )
   - தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், மாநில அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும் .
   - இது மாநில அரசால் சுமத்தப்படுகிறது.
   - விற்பனை வரி, ஆடம்பர வரி மற்றும் நுழைவு வரிகளுக்கு மாற்றாக உள்ளது.

5. **மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன ?**
   - சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், ஒரு மாநிலத்திற்குள்ளேயே அளிக்கப்படும் சரக்குகள் மீது, மத்திய அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

## கூடுதல் வினா

1. **சரக்கு மற்றும் சேவை வரி வகைகள் யாவை?** ( மார்ச் 2020 )

   1. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி
   2. (a) மாநில சரக்கு மற்றும் சேவை வரி
      (b) யூனியன் பிரதேசத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி
   3. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## சிறு விடை வினாக்கள்

**1. நேரடி வரிக்கும் மறைமுக வரிகள் உள்ள இரண்டு வேறுபாடுகளை எழுதுக.**

( ஜூன் 2019 )

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1.பொருள் | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது | மறைமுக வரி என்பது, சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது |
| 2. இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| 3. வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம் | ஒரே நபரையே சென்றடைகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன |
| 4. வகைகள் | சொத்து வரி, வருமான வரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி |
| 5. ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 6. பணவீக்கம் | இது, பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது | இது, பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| 7. சுமை | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |

**2. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை?**

1) இந்தியாவில் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கம் ஆகும்.
2) வரியின் விழுத்தொடராக விளைவினை தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரி முன் செலுத்திய வரியினை சரிகட்டிக்கொள்ள அனுமதிக்கிறது.
3) ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப்பட்ட உள்ளிட்டு வரி திருப்பி வழங்கப்படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.
4) வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.
5) வரி அறிக்கை வழிமுறைகளை எளிமையாக்க, பொதுவான படிவங்கள் வழங்கப் பட்டுள்ளன. வணிகவரி அலுவலகங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.
6) இணையதள வரி செலுத்தல்கள் மற்றும் படிவங்களைச் சமர்ப்பிக்க, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு ( GSTN ) என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. **சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் பணிகளை விளக்குக.**

1) உற்பத்தி, ஏற்றுமதியினை ஊக்குவித்தல்,
2) சீரான வரி வீதங்கள், வரி ஏய்ப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரி வீத வேற்றுமையைக் குறைத்தல்.
3) நாடு முழுவதும் ஒரே சீரான நிலையை தந்து, அனைத்து மாநிலங்களிலும் வியாபார விரிவாக்கத்தினை எளிதாக்குதல்.
4) இது வெளிப்படையானது மற்றும் உலக அளவில் வியாபார எளிமையில், இந்தியாவின் தரத்தை மேம்படுத்துகிறது.
5) வரி இனக்கத்தினை அதிகரித்து, அரசாங்கத்திற்கு வருவாயை அதிகரிக்கச் செய்தல்
6) CGST, SGST மற்றும் IGST போன்றவைகளை நடைமுறைபடுத்துவது மற்றும் மேற்பார்வை செய்தல்.

---

4. **ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியை விளக்குக**

- ❖ மத்திய அரசால் சுமத்தப்படுகிறது.
- ❖ IGST என்பது, ஒருங்கிணைந்து சரக்கு மற்றும் சேவை வரி ஆகும்.
- ❖ இது CGST, SGST இணைந்த முறை ஆகும்.
- ❖ வசூலிப்பவராக, மத்திய அரசு செயல்படுகிறது.
- ❖ மாநிலங்களுக்கு இடையேயான அளிப்பு.
- ❖ இதனை பதிவு செய்தல் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.
- ❖ தொகுப்புத் திட்டம் மாநிலங்களுக்கு இடையேயான அளிப்புக்கு பொருந்தாது.

---

5. **சரக்கு மற்றும் சேவை வரி குறைபாடுகள் மூன்றினை எழுதுக**

- ❖ சரக்கு மற்றும் சேவை வரிகள் இந்தியாவில் நிலைச் சொத்து சந்தையில் எதிர்மறை தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது.
- ❖ மத்திய சரக்கு மற்றும் சேவை வரிகள், மாநில சரக்கு மற்றும் சேவை வரிகள் என்பது மத்திய கலால் வரி, சேவை வரி, மதிப்புக்கூட்டப்பட்டது ( VAT ) மற்றும் மத்திய விற்பனை வரிகளின் மற்றொரு பெயர் ஆகும்
- ❖ சில்லறைப் பொருள்கள் மீது, தற்போது 4% வரி மட்டுமே சுமத்தப்படுகிறது. இதனால், இவ்வரிக்குப் பின்பு ஜவுளி பொருட்கள் விலை அதிகரித்துள்ளது.
- ❖ தற்பொழுது சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் காரணத்தால் வான் பயணக் கட்டணங்கள் மீதான சேவை வரி 6 முதல் 9 சதவீதமாக உயர்த்துள்ளது.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரிகள் ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் இடம்பெயர்தல் இடர்பாடுகளை கொண்டுள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பெரு விடை வினாக்கள்

1. **நேரடி வரியையும் மறை முகவரியையும் வேறுபடுத்துக.** ( மார்ச் 2020 )

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1.பொருள் | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது | மறைமுக வரி என்பது, சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது |
| 2. இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| 3. வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம் | ஒரே நபரையே சென்றடைகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன |
| 4. வகைகள் | சொத்து வரி, வருமான வரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி ,சுங்க வரி |
| 5. ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 6. பணவீக்கம் | இது, பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது | இது, பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| 7. விதித்தல் மற்றும் வசூலித்தல் | மதிப்பீட்டிற்கு உரியவர் மீது சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு, மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது |
| 8. சுமை | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |
| 9. நிகழ்வு | மதிப்பீட்டீற்குரியவரின் வரிக்குரிய வருமானம் மற்றும் செல்வத்தை சார்ந்தது | சரக்குகளை கொள்முதல், விற்பனை, உற்பத்தி செய்தல் மற்றும் சேவை வழங்குதல் ஆகியவற்றைச் சார்ந்தது |

2. **சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.**

1. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி
   - ❖ சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், ஒரு மாநிலத்திற்குள்ளேயே அளிக்கப்படும் சரக்குகள் மீது, மத்திய அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

2(a) மாநில சரக்கு மற்றும் சேவை வரி.
   - ❖ தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், மாநில அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும் .



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

❖ இது மாநில அரசால் சுமத்தப்படுகிறது.
❖ விற்பனை வரி, ஆடம்பர வரி மற்றும் நுழைவு வரிகளுக்கு மாற்றாக உள்ளது.

(b) யூனியன் பிரதேசத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி

❖ UGST சட்டம் 2017 - ன் கீழ், இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களில் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

3. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி

❖ IGST சட்டம் 2017 - ன் கீழ், மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

3. சரக்கு மற்றும் சேவை வரியின் நன்மைகளை விளக்குக

அ) சமூகம் மற்றும் நாட்டிற்கு

1. சரக்கு மற்றும் சேவை வரி சீரான தேசிய சந்தை, அன்னிய முதலீட்டினை ஈர்க்கின்ற அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொருளாதாரத்தினனை ஒன்றிணைக்கிறது.
2. இறக்குமதி சரக்குகள் மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்த சரக்குகளில் இடையேயான வரிவிதிப்பில் சமநிலையை கொண்டு வருகிறது.
3. உற்பத்தி, ஏற்றுமதியினை ஊக்குவிக்கிறது.
4. அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம், வறுமையை ஒழிக்கிறது.
5. வரி இணக்கத்தினை அதிகரிக்கிறது.அரசாங்கத்திற்கு வருவாயையும் அதிகரிக்கிறது
6. இது வெளிப்படையானது மற்றும் உலக அளவில் வியாபார எளிமையில், இந்தியாவின் தரத்தை மேம்படுத்துகிறது.
7. சீரான வரி விகிதங்கள், வரி ஏய்ப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான இடைவெளியை குறைக்கிறது.

ஆ) வியாபார சமூகத்திற்கு

1) 17 வரிகள் நீக்கப்பட்டு, அவை அனைத்தும் ஒரே விதமான வரி அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது சில வரி விலக்குகளை கொண்ட எளிமையான வரி முறையாகும்.
2) பொதுவான வழிமுறைகள், சரக்கு மற்றும் சேவைகளின் பொதுவான வகைப்பாடு, வரி விதிப்பு முறைக்கு மேல் நிலைத் தன்மையை வழங்குகிறது,
3) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு ( GSTN ), பல்வேறு பதிவேடுகள் பராமரிப்பை குறைக்கிறது.
4) நாடு முழுவதும், ஒரே சீரான நிலையை தந்து, அனைத்து மாநிலங்களிலும் வியாபார விரிவாக்கத்தினை எளிதாக்குகிறது.

இ) நுகர்வோருக்கு

1. உள்ளீட்டு வரி நுகர்வோருக்கான விலை குறைகிறது.
2. அனைத்து சிறு சில்லறை வணிகர்கள் வரி விலக்கு பெறுகின்றனர். அதன் மூலம் நுகர்வோர்களின் செலவு குறைகிறது



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

4. மாநில மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரிகளை வேறுபடுத்துக

| வேறுபாடுகள் | மத்திய சரக்கு மற்றும் சேவை வரி ( CGST ) | மாநில சரக்கு மற்றும் சேவை வரி ( SGST) | ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ( IGST) |
|---|---|---|---|
| 1. பொருள் | மத்திய அரசால் சுமத்தப்படுகிறது. சேவை வரி மற்றும் உள்நாட்டு வரி போன்றவற்றிற்கு மாற்றாக உள்ளது | மாநில அரசால் சுமத்தப்படுகிறது. விற்பனை வரி,ஆடம்பர வரி மற்றும் நுழைவு வரிகளுக்கு மாற்றாக உள்ளது | மத்திய அரசால் சுமத்தப்படுகிறது. IGST என்பது ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ஆகும். இது CGST , SGST இணைந்து முறையாகும் |
| 2. வரி வசூலிப்பவர் | மத்திய அரசு | மாநில அரசு | மத்திய அரசு |
| 3.பொருந்துதல் | மாநிலங்களுக்குள் நடைபெறும் அளிப்பு | மாநிலங்களுக்குள் நடைபெறும் அளிப்பு | மாநிலங்களுக்கு இடையேயான அளிப்பு |
| 4.பதிவு செய்தல் | விற்பனை ரூ. 20 லட்சத்திற்கு மிகாமல் இருந்தால் பதிவு செய்யத் தேவையில்லை. (வடகிழக்கு மாநிலங்களுக்கு ரூ. 10 லட்சம் ) | விற்பனை ரூ. 20 லட்சத்திற்கு மிகாமல் இருந்தால் பதிவு செய்யத் தேவையில்லை. (வடகிழக்கு மாநிலங்களுக்கு ரூ. 10 லட்சம் ) | பதிவு செய்தல் கட்டாயம் |
| 5.தொகுப்பு | வணிகர் ரூ. 75 லட்சம் வரை தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் அடையலாம் | வணிகர் ரூ.75 லட்சம் வரை தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் அடையலாம் | தொகுப்பு திட்டம் மாநிலங்களுக்கு இடையேயான அளிப்புக்கு பொருந்தாது |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com